விலை ரூபா 20.00


நாடாளுமன்றம் கலைக்கப்படும்
பக்கம் 02


சொல் அல்ல செயல் மட்டுமே தேவை
பக்கம் 14


பறந்தனர் வென்றனர்
பக்கம் 18


ஏன் போனோம் ஏன் தோற்றோம்?
பக்கம் 19

www.onlineuthayan.com

பக்கங்கள்: 20

# உதயன்

சுடர் 27
கதிர் 128

வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 20 திங்கட்கிழமை (02/04/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

# ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உடன் நடைமுறைப்படுத்துங்கள்

## இலங்கை அரசிடம் ஐ.நா.செயலர் மீண்டும் வலியுறுத்தல்

நியூயோர்க், ஏப்ரல் 2
இலங்கை அரசினால் அமைக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு வின் அறிக்கையில் குறித்துரைக்கப்பட்டுள்ளபரிந்துரைகளை இலங்கை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்என ஐ.நா.பொதுச் செயலர் பான்-கீ மூன் மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார்.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை நடைமுறைப் படுத்த வேண்டும் என வலியுறுத்தி ஐ.நா. மனிதஉரிமைகள்சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை பான்-கீமூன் வரவேற்பதாக அவரின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுஅறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நல்லாட்சி தொடர்பான பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதன் மூலம் மட்டுமே இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும் எனப் பான்-கீ மூன் கருதுகின்றார் என்றும் அவர் கூறினார்.

பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என ஐ.நா. செயலர் நம்புவதாகவும் பேச்சாளர் தெரிவித்தார். 04

## அமெரிக்காவின் விசேட குழு அடுத்த வாரம் இலங்கைக்கு

வாஷிங்டன், ஏப்.2
அமெரிக்காவின் முக்கிய விசேட பிரதிநிதிகள் குழுவொன்று அடுத்த வாரமளவில் இலங்கை வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை வரும் அமெரிக்கக் குழுவில் மூன்று பேர் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழுவினர் இலங்கையில் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தக் குழுவில் அடங்கியுள்ள மூவரும் அமெரிக்க இரா ஜாங்கத் திணைக் களத் தைச் சேர்ந்தவர்கள் என வும் தெரிவிக்கப்படுள்ளது. இந்தக் குழுவினர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசுவார்களா என்பது குறித்து இதுவரை தெரியவரவில்லை.

இலங்கை மற்றும் அமெரிக்காவுக்கு இடையேயான வர்த்தக உறவை பலப்படுத்தும் நோக்கில் இந்த் அமெரிக்கப் பிரதிநிதிகள் இலங்கை வருவதாகக் கூறப்படுகின்ற போதும் ஜெனிவாவில் இலங்கை மீது நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் அரசுக்கு விளக்கம் அளிப்பதற்கே அவர்கள் வருவதாகக் கூறப்படுகிறது.

இந்தக் குழு 04

## வவுனியா இடைத்தங்கல் முகாமில் மக்களின் அவலம்


விரிவான செய்திகளும் படங்களும் 8ஆம் பக்கத்தில்.

## ஐ.நா.மனித உரிமைகள் சபையின் கிளை அலுவலகம் இலங்கையில்

ஜெனிவா, ஏப்.2
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் நடைமுறைப் படுத்தப்படுகின்றதா என்பதனைக் கண்காணிக்கும் நோக்கில், இலங்கையில் அலுவலகம் ஒன்றை நிறுவ மனித உரிமைகள் சபை தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகி றது.

ஐ.நா சபையின், இலங்கைக் கிளையின் ஓர் அங்கமாக இந்தக் கண்காணிப்பு அலுவலகம் இயங்கும் எனத் தெரிவிக் 04

## அமைச்சரவை கூட்டங்களை புறக்கணிக்கும் விமல்

கொழும்பு, ஏப்.2
அமைச்சர் விமல் வீரவன்ஸ கடந்த பல வாரங்களாக அமைச்சரவைக் கூட்டங்களில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர் அமைச்சரவைக் கூட்டத்தைப் புறக்கணிப்பதாக அறிவிக்காது போனாலும் பல வாரங்க ளாக அவர் அமைச்சரவைக்கூட்டத்தில் கலந்து 04

## நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஜெனிவா தீர்மானம் நல்ல வாய்ப்பு

### சர்வமதப் பேரவை கூறுகிறது

கொழும்பு,ஏப்.2
தேசிய நல்லிணக்கத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு ஜெனிவா தீர்மானம் ஒரு சிறந்த வாய்ப்பாகும் என அரசு எண்ணுமானால், அதற்கு ஆசிர்வாதமும், ஒத்துழைப்பும் வழங்குவதில் சர்வமதப் பேரவை மகிழ்ச்சியடையும்.

இவ்வாறு சர்வமதப் பேரவை தெரிவித்துள் ளது.

ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து, உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை அறிவிக்குமாறும் சர்வ மதப் பேரவை அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை தொடர்பாக அண்மையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்துசில அமைச் 04

## சந்திரிக்கா, ரணில், மங்கள இந்த மாதத்தில் டில்லிக்கு

### கொழும்பு அரசியல் தலைமைகள் குழப்பத்தில்

கொழும்பு, ஏப். 2
இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க, முன்னாள் பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் இந்த மாதம் புதுடில்லிக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று ஒழுங்கு செய்துள்ள சிறப்புக் கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொள்வதற்கே இவர்கள் [illegible]ரும் புதுடில்லி செல்ல 04

## வாய்க்காலில் தவறி விழுந்து 9 வயதுச் சிறுமி பரிதாபச் சாவு

முள்ளியவளை, ஏப். 2
முள்ளியவளையிலுள்ள வாய்க்காலில் குளிப்பதற்காகச் சென்ற சிறுமி அதில் தவறி வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

முள்ளியவளை முறிப்பு என்ற இடத்தைச் சேர்ந்த 9 வயதான ஜெகநாதன் ஜெசிந்தா என்ற பெண் குழந்தையே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தது.

முள்ளியவளை முறிப்பில் குளத்திலிருந்து கழிவு நீர் வெளியேறும் 8 அடி ஆழமான வாய்க்காலொன்று காணப்படுகின்றது. இங்குள்ளவர்கள் இந்த வாய்க்காலில் குளிப்பது வழமையாகும்.

நேற்றுமுன்தினம் இந்தச் சிறுமி தனது உடன் 04

## சனத்தொகை முடிவுகள் மாத இறுதியில்

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணக்கெடுப்புக்கான இறுதிப் பெறுபேறுகள் இந்த மாத இறுதியில் வெளியிடப்படும் என்று மக்கள் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. முதலில் மாவட்ட ரீதியாகவே இந்த பெறுபேறுகள் வெளியிடப்படும். பின்னரே முழுமையான பெறுபேறுகள் வெளியிடப்படும் என்று திணைக்களத்தின் பணிப்பாளர் சுரஞ்சினா வித்தியாரத்ன தெரிவித்துள்ளார். பல கட்டங்களாக இடம்பெற்ற இந்த கணக்கெடுப்பு மார்ச் மாதம் 20 ஆம் திகதியுடன் நிறைவடைந்தன.

## அரசுக்கு எதிராக ஜே.வி.பி. வழக்கு

தேசிய கொள்கைக்கு முரணான வகையில், அரசினால் பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளமை தொடர்பில், மனித உரிமை மீறல் தொடர்பான வழக்கு தாக்கல் செய்ய ஜே.வி.பி. தயாராகி வருகிறது என்று கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார். இந்த வாரம் இந்த வழக்கைத் தாக்கல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சாரணர் ஜம்போரி தம்புள்ளையில்

சாரணர் இயக்க நூற்றாண்டு ஆசிய ஜம்போரி விழா நேற்று தம்புள்ளையில் ஆரம்பமாகியது. இந்த விழா எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் நிறைவடையும். இலங்கை சாரணர் இயக்கத்தின் பிரதான சாரணரான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த நிகழ்வில் கலந்து கொண்டார். இதில் 27 நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட வெளிநாட்டு சாரணர்களும் கலந்து கொண்டுள்ளனர்.

## விரிவுரையாளர்கள் கடும் எதிர்ப்பு

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், வெளியார்களினால் ஏற்பாடு செய்யப்படும் கருத்தரங்கு போன்றவற்றில் கலந்து கொள்வதற்கு தடைவிதித்து கல்வியமைச்சினால் வெளிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்க சம்மேளனம் தமது அதிருப்தியை வெளிப்படுத்தி யுள்ளது. இந்த சுற்றறிக்கையின் படி அரச நிறுவனங்கள் அல்லாத ஏனைய அமைப்புக்களினால் ஏற்பாடு செய்யப்படும் கல்வி தொடர்பான நிகழ்வுகளில் அவர்கள் கலந்துகொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## விபத்தில் இருவர் சாவு

மன்னார், தாழ்வுபாடு பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். சம்பவத்தில் மன்னார், தாராபுரத்தை சேர்ந்த முஹம்மது பர்ஸான் (வயது 18) புத்தளம், தில்லையடி அல் - ஹாசிமி சிட்டியை சேர்ந்த எம்.ஏ.எம்.அர்சத் (வயது 25) ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர். தலைக்கவசம் அணியாது மன்னார் தாழ்வுபாடு பகுதியை நோக்கி வேகமாக சென்று கொண்டிருந்த போது, வீதியோரத்தில் காணப்பட்ட மரமொன்றில் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்னும் ஒரு வருடத்துக்குள் நாடாளுமன்றம் கலைக்கப்படும்

## எதிர்வு கூறுகிறது ஐ.தே.க.



கொழும்பு, ஏப்.2

இன்னும் ஒரு வருடத்துக்குள் அரசு நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலுக்குச் செல்லலாம் என ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார். கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு இன்று ஜெனிவாப் பிரச்சினையைக் கூறிக்கொண்டு மக்களை ஏமாற்றிக் கொண்டே வருகின்றது.

இன்று மக்கள் பொருள்களின் விலையுயர்வாலும் போதிய தொழில் வருமானங்களின்றி பல்வேறு கஷ்டங்களையும் துன்பங்களையும் எதிர்நோக்கி வருவதுடன் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டைச் சிறப்பாக கொண்டாடுவது எவ்வாறு என்ற கேள்விக் குறியுடன் இருந்து வருகின்றனர்.

மக்களின் இவ்வாறான வேதனைகளைப் புரிந்து கொள்ளாத அரசு மக்களை திசை திருப்ப மேற்குலக நாடுகள் இலங்கை மீது ஆக்கிரமிப்பு செய்ய முயற்சிப்பதாகக் கூறி வருகின்றது.

அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளுக்கு இலங்கையை ஆக்கிரமிக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் இலங்கை தேசிய உற்பத்திகளில் 65 வீதமானவற்றை அமெரிக்காவும் மேற்குலக நாடுகளுமே கொள்வனவு செய்கின்றன.

இவ்வாறு இலங்கைப் பொருள்களை அதிகமாக கொள்வனவு செய்கின்ற நாடுகளுக்கு இலங்கையை ஆக்கிரமிக்க வேண்டிய தேவை அவர்களுக்கு இருக்காது. இது போன்ற பொறுப்பற்ற அரசின் கூற்றுக்களாலேயே அது பல்வேறு சிக்கலுக்கு உள்ளாகின்றது.

இதேவேளை அரசின் அமைச்சர்களும் ஜெனிவா பிரச்சினை பற்றி ஒவ்வொரு விதமான கருத்துக்களைக் கூறி வருகின்றனர்- என்றார். (த)

## மூன்று மாத விடுமுறையில் சமரசிங்க

கொழும்பு, ஏப் 2

அமைச்சர் மஹிந்த சமரசிங்கவுக்கு மூன்று மாத கால விடுமுறையை வழங்குவதற்கு நாடாளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவினால் முன்வைக்கப்பட்ட இந்தக் கோரிக்கைக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்படி ஜனவரி 21 ஆம் திகதி முதல் ஏப்ரல் 29 ஆம் திகதி வரை அவருக்கான விடுமுறை அங்கீகரிக்கப்பட்டது.

அமைச்சர் வெளிநாடு ஒன்றுக்குப் பயணிப்பதற்காகவே இந்த விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் சிகிச்சை ஒன்றுக்காகவே வெளிநாடு பயணமாகிறார் என்று கூறப்பட்டது. (த)

இயந்திரக் கோளாறு காரணமாக உதயனின் பக்கம் 20 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. வாசகர்களுக்கு ஏற்படும் இடையூறுகளுக்கு வருந்துகின்றோம்.

நிர்வாகம்.

## ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியால் புதுவருடக் கொண்டாட்டம் பாதிப்பு

கொழும்பு, ஏப் 2

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி புத்தாண்டு கொண்டாட்டங்களைப் பெரிதும் பாதிக்கும் என இறக்குமதியாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியினால் தமிழ் சிங்களப் புத்தாண்டு காலத்தில் பொருள்கள் சேவைகளுக்கான விலைகள் உயர்வடையக் கூடும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் பண வீக்கம் கடந்த மாதம் 5.5 வீதத்தினால் உயர்வடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கான விலைகள் உயர்வடையக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வர்த்தக சங்கத்தின் தலைவர் பீ.சுந்தரம் தெரிவித்துள்ளார்.

## மாகாண சபைகளை கலைத்து தேர்தல்களை நடத்துங்கள்

### சில முதலமைச்சர்கள் கோரிக்கை

கொழும்பு, ஏப். 2

மாகாண சபைகளைக் கலைத்து தேர்தல் நடத்துமாறு சில முதலமைச்சர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாகாண சபைத் தேர்தல்களில் பாரியளவில் வெற்றி யீட்டி அதன் மூலம் மக்களின் ஆதரவு அரசுக்கு இருப்பதனை உலக நாடுகளுக்கு வெளிப்படுத்த முடியும் என மாகாண முதலமைச்சர்கள் சிலர் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அமர்வுகளில், இலங்கைக்கு எதிரான தீர்மானம் தொடர்பில் மக்களின் கருத்தாக தேர்தல் முடிவுகள் அமையும் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்படி இந்த ஆண்டு நிறைவுக்கு முன்னர் சில மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. (த)

## ஆளுநர் அடி போற்றி....!



புத்தாண்டை முன்னிட்டு நடத்தப்பட்ட சைக்கிளோட்டப் போட்டியை ஆரம்பிக்க நல்லூருக்கு வந்தார் ஆளுநர். பூசையின்போது அவருடைய சப்பாத்தை கழற்றி பணிவிடை புரிந்தார் அவருடைய பிரத்தியேக செயலாளர் மேஜர் ஜெயக்கொடி. ஒரு இராணுவ அதிகாரி ஆளுநரின் சப்பாத்தை கழற்றிய பணிவையும் அழகையும் பொதுமக்கள் பார்த்து வியந்தனர்.

## கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவை மீண்டும்

தூத்துக்குடி, ஏப்.2

தூத்துக்குடி -கொழும்பு இடையே எதிர்வரும் 19ஆம் திகதி முதல் மீண்டும் பயணிகள் கப்பல் சேவை இடம்பெறும் என துறைமுக பொறுப்புக்கழகத் தலைவர் தெரிவித்தார்.

தூத்துக்குடி வ.உசி. துறைமுகத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் தலைவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தூத்துக்குடி துறைமுகம் இந்த ஆண்டு 281 லட்சம் தொன் சரக்குகள் கையாண்டு சாதனை படைத்துள்ளது. இந்நிலையில் கடந்த ஜூன் மாதம் 13 ஆம் திகதி தூத்துக்குடி -கொழும்பு இடையே பயணிகள் கப்பல் இயக்கப்பட்டது. அது கடந்த நவம்பர் மாதம் 18ஆம் திகதி முதல் நிறுத்தப்பட்டது. இதற்கு தொழில்நுட்பக் கோளாறு மற்றும் எரிபொருள் காரணம் ஆகும். தற்போது இதனை மீண்டும் சேவையில் ஈடுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் 19ஆம் திகதி முதல் இது ஆரம்பமாகும். இதில் 450 பேர் பயணிக்க முடியும். வாரம் இருமுறை (செவ்வாய், வியாழன்)ஆகிய கிழமைகளில் இது நடைபெறும்- என்றார். (த)

## மேர்வினை நீக்கி விடுங்கள்

கொழும்பு, ஏப் 2

மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா, களனிப் பிரதேசத் தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் தொடர்ந்தும் தொகுதி அமைப்பாளர் பதவியை வகித்தால், தாம் அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொள்ளப் போவதாகக், களனிப் பிரதேச சபை உறுப்பினர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

களனிப் பிரதேச சபையின் தலைவர் உள்ளிட்ட 14 உறுப்பினர்கள் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

அமைச்சரின் நடவடிக்கைகளினால் பிரதேச அரசியல்வாதிகள் பெரும் அதிருப்தி அடைந்துள்ளனர். எவ்வாறெனினும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் அமைச்சருக்கு எதிராக நடத்தப்பட்டு வரும் ஒழுக் காற்று விசாரணைகள் நியாயமாக நடைபெறும் எனப் பிரதேச சபை உறுப்பினர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (த)

# எதிர்தரப்பினருக்கு அரசுதான் ஆயுதங்களை வழங்கி உதவியது

## ஜெனிவா தோல்வி குறித்து ஆங்கில நாளேடு

கொழும்பு, ஏப்.2

ஆசியாவின் முதிர்ந்த ஜனநாயக நாடான இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் ஜெனிவாவில் குற்றச்சாட்டுக்களை முன்னெடுப்பதற்கான ஆயுதங்களை கொடுத்துதவிய குற்றம் இலங்கை அரசையே சாரும் என்று கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை விமர்சித்துள்ளது.

அவ்வாறான ஆயுதங்களின் பட்டியல் நீண்டு செல்கின்றது. தனக்கு எதிராக அவர்கள் பிரயோகிப்பதற்கு அரசு வழங்கிய ஆயுதங்களில் சிலவற்றை அந்தப் பத்திரிகை பட்டியலிட்டுள்ளது.

* கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் அறிக்கையை செயல்படுத்தாமை.

* இனப்பிரச்சினைக்கு விரைவான கரிசனைமிக்க, தீர்வொன்றை காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமை.

* ஆள் கடத்தல் மற்றும் தன்விருப்பமின்றி காணாமல் போதல் இதில் வெள்ளவத்தையில் ராமகிருஷ்ணன் பிரபாகரன் காணாமல் போனமை, ஹல்ட்ஸ்ரோம் நீதிமன்றவளவில் வைத்து வேலாயுதம் மதியாஸ் சந்திரபால கடத்தப்பட்டமை, மற்றும் குமார் வீரராஜ் மற்றும் குமார் முருகானந்தன் காணாமல் போனமை. இவர்கள் இருவரும் வடக்கில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள்.

* பாதுகாப்பு படையினர் சம்பந்தப்பட்டதாகப் பெரும் எண்ணிக்கையில் வன்புணர்வுகள் மற்றும் பாலியல் துன்புறுத்தல்கள் இடம்பெற்றிருந்தமை.

* ஈ.பி.டி.பி.யின் ஆதிக்கமுள்ள நெடுந்தீவில் ஈ.பி.டி.பி. அரசியல் வாதி ஒருவரால் 13 வயதுச் சிறுமி ஒருவர் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டு, மற்றும் பொலிஸார் இது தொடர்பான முறைப்பாட்டை ஏற்க மறுத்தமை, உலகின் மிக சக்திவாய்ந்த நாடொன்றின் மனித உரிமைப் பேரவைக்கான தீர்மானம் முன்வரவுக்கு எதிராக இலங்கைப் பேராளர்கள் குழு போராடிக் கொண்டிருந்த வேளையில் இது நிகழ்ந்திருந்தது.

* வடக்கில் பொது மக்களின் காணிகளை ராணுவமயமாக்கல். இதன் மூலம் பாரம்பரிய மனோபாவம் கொண்ட தமிழ் மக்களின் இரகசியத்தைப் பேணும் உரிமைகளை மறுத்தமை.

* வடக்கு கிழக்கில் தமிழ் வீதிப் பெயர்களை சிங்கள மயமாக்கியமை. இந்துக் கோயில் புனித இடங்களை அழித்து விட்டு அங்கு புத்தர் சிலைகளை நிறுவியமை.

இந்த குற்றச்சாட்டுக்களில் சில மிகைப்படுத்தப்பட்டிருந்தாலும் இலங்கைக் குழுவினர் தம்மை தற்காத்துக் கொள்ளப் பெரிதும் உழைக்க வேண்டியிருந்தது. இந்தக் குற்றச்சாட்டுகளை முறியடிக்கும் விதத்தில் இலங்கை சார்பில் பக்க நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. மித வாத ஜனநாயகத்துக்கான சபையின் தலைவர் பேராசிரியர் ரஜீவ விஜயசிங்க இதனை ஏற்பாடு செய்திருந்தார். அரசு மீள் நல்லிணக்கத்துக்காக மேற்கொண்டுவரும் முயற்சிகளை அவர்கள் மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் விளக்குவதற்கு பெரும்பாடுபட்டார்கள். நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையைசெயல்படுத்த காலஅவகாசம் வேண்டும் என்று கோரிநின்றார்கள். ஆனால் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

இவ்வாறு அந்தச் செய்தியில் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பி இருக்கும் உறவுகள்

## காணாமல் போனோரை இறந்தோராக 40 பதிவுகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டன

யாழ்ப்பாணம்,ஏப் 2

*காணாமல் போனவர்களை இறந்தவர்களாகப் பதிவு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டதன் பின்னர் வட மாகாணத்தில் இதுவரை சுமார் 40 பதிவுகளே இடம்பெற்றுள்ளன.*

யுத்த காலத்தில் காணாமல் போனவர்கள் உயிருடன் இருக்கலாம் என்ற நம்பிக்கையுடனேயே வடபகுதி மக்கள் காணாமல் போன தமது உறவுகளை இறந்தவர்களாகக் கருதிப் பதிவு செய்வதைப் புறக்கணித்து வருகின்றனர்.

காணாமல் போனவர்களை இறந்தவர்களாகப் பதிவு செய்யும் சட்டம் கடந்த வருடம் நவம்பர் மாதம் நடைமுறை செய்யப்பட்டது. பிரதேச செயலகங்கள் ஊடாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையிலேயே இதுவரை வடக்கு மாகாணத்திலுள்ள 40 பதிவுகள் மட்டுமே இடம்பெற்றுள்ளன. இதில் வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்துக்கு முன்னர் காணாமல் போனவர்கள் தொடர்பான பதிவுகள் 15 ஆகத் தெரியவருகின்றது.

யுத்த காலத்தில் காணாமல் போனவர்கள் உயிருடன் இருக்கலாம் என்ற நம்பிக்கையுடனேயே வடபகுதி மக்கள் காணாமல் போன தமது உறவுகளை இறந்தவர்களாகக் கருதிப் பதிவு செய்வதைப் புறக்கணித்து வருவதாகத் தெரியவருகிறது.

வடக்கில் காணாமல் போனவர்களின் எண்ணிக்கை பல ஆயிரத்தைத் தாண்டும் எனக் கூறப்பட்டு வந்த நிலையில் தற்போது வரை இடம்பெற்றுள்ள பதிவுகள் மிகச் சொற்பமானவை.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை 20 பதிவுகள் மட்டுமே இடம்பெற்றுள்ளன.

இந்த அடிப்படையில் நோக்கும்போது கடந்த 2009 இல் இடம்பெற்ற இறுதி யுத்தம் மற்றும் அதற்குப் பின்னரான காலப்பகுதியில் காணாமல் போனவர்களில் இறந்தவர்களாக செய்யப்பட்ட பதிவுகள் 25 மட்டுமே.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் 350 பதிவுகள் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (ம-3)

## பெரிய மரங்கள் அழிப்பால் வெயிலில் வாடும் மக்கள்

அளவெட்டி, ஏப்.2

வீதி அகலிப்புக் காரணமாக காங்கேசன்துறை வீதியில் தெல்லிப்பழைச் சந்தியில் யூனியன் கல்லூரிக்கு முன்பாக நூறு வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த பெரிய ஆல், அரச மரங்கள் தறிக்கப்பட்டுள்ளன.

இந்த மர நிழலில் பஸ்ஸிற்காகக் காத்திருக்கும் மாணவர்கள், பொதுமக்கள் பலரும் தற்போது ஏற்பட்டுள்ள கடும் வெப்பம் காரணமாக நிழலுமின்றி, தவிக்கின்றனர்.

இதே போன்று தெல்லிப்பழை சந்தியிலிருந்து மகாஜனாக் கல்லூரி வரையான வீதி அகலிப்பு நடவடிக்கையால் வீதி ஓரம் நின்ற நிழல் தருமரங்கள் தறிக்கப்பட்டுள்ளதால் இந்தக் கல்லூரி மாணவர்கள் பாடசாலை விட்டதும் கடும் வெயிலுக்கு மத்தியில் பஸ்ஸுக்காகக் காத்திருக்க வேண்டியுள்ளது. (ம-36)

## கடலுக்குப் போனவர் சடலமானார்

யாழ்ப்பாணம், ஏப்.2

நண்பர்களுடன் கடலில் குளிக்கச் சென்றவர் நீரில் மூழ்கி மரணமானார்.

சம்பவம் காரைநகர் கசூரினா கடலில் இடம்பெற்றது. சம்பவத்தில் வட்டுக்கோட்டை சித்தன்கேணியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை மகிழ்ராஜன் (வயது-57) என்பவரே மரணமானார்.

இவரது சடலம் தற்போது யாழ். போதனா வைத்திய சாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த ஒரு வருட காலத்துக்குள் கசூரினா கடலில் மூழ்கி மரணமான இரண்டாவது சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (ங-4)

## இளைஞன் படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப்.2

டிப்பர்-மோட்டார் சைக்கிள் விபத்தில் முள்ளந்தண்டில் படுகாயமடைந்த இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சத்திரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து இயக்கச்சியில் நேற்று மு.ப. 9.30 க்கு இடம்பெற்றது. இதில் கிளிநொச்சி நகரைச் சேர்ந்த யோ.புவிதரன் (வயது-23) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றுபவராவார். (ங-4)

## பயணிக்க பஸ் இன்றி தடுமாறும் மாணவர்கள்

தென்மராட்சி,ஏப். 2

இலங்கை போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலையின் 769 மார்க்க மிருசுவில் - யாழ்.பல்கலைக் கழக பஸ் சேவையில் பாடசாலை மாணவர்கள் பயணிக்கக்கூடாதா என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

தினமும் காலை வேளையில் உசனில் இருந்து திருநெல்வேலி ஊடாக யாழ்ப்பாணத்துக்கான பஸ் சேவை நடத்தப்படுகிறது.

இந்த மார்க்கத்துக்கான பாடசாலை பஸ் சேவை பளையிலிருந்து நடத்தப்படுகின்றது. இந்த பஸ் மிருசுவிலுக்கு வருவதற்கு முன்னர் மாணவர்களால் நிறைந்து விடுகிறது.

இதனால் இதன் பின்னர் வரும் திருநெல்வேலி ஊடாக யாழ். பல்கலைக் கழகத்துக்கான சேவையில் செல்ல முடியாத நிலைமை உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

போக்குவரத்துக்கான பருவ காலச் சீட்டுகளை பெற்ற நிலையிலும் பஸ்கள் இன்றி மாணவர்கள் பெரும் அவதிப்படுகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. (ம-9)



இடர் முகாமைத்துவச் செயற்திட்டத்தின் கீழ் இடைக்காடு மகா வித்தியாலயத்தில் தீயணைப்புப் பயிற்சி வழங்கப்பட்டது. யாழ். இடர் முகாமைத்துவ அலுவலகம், யாழ். மாநகர சபை தீயணைப்புப் பிரிவு, வல்வை இராணுவ முகாம் ஆகியன இணைந்து இந்தப் பயிற்சியை ஏற்பாடு செய்தன. (த)

## உணவகங்களுக்கு தரச் சான்றிதழ்கள்

யாழ்ப்பாணம், ஏப்.2

யாழ்.மாநகர் சபை எல்லைக்குள் உள்ள உணவகங்களுக்கான தரச் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ்ப்பாணம் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அ.இ.நாகசோதி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோர் உணவு நிலைய உரிமையாளர்களிடம் உணவு நிலையங்களுக்கான சான்றிதழ்களை வழங்கினர்.

நகரில் உள்ள 47 உணவகங்களுக்கு 'ஏ' தரச் சான்றிதழ்களும் 102 உணவகங்களுக்கு 'பி' தரச் சான்றிதழ்களும் 44 நிலையங்களுக்கு 'சி' தரச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன. 'டி' தரத்தில் தெரிவான ஐந்து உணவு நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

உணவு நிலையங்களை 'ஏ' தரத்துக்கு உயர்த்துவதற்கான முயற்சிகள் தொடரும் எனவும் கூறப்பட்டது. (ம-7)

## இளைஞர் கழகங்களில் உறுப்பினருக்கு வீடுகள்

இளைஞர் சேவைகள் மன்றத்தால் நாடு முழுவதிலும் உள்ள பிரதேச செயலர் பிரிவுகளிலும் இளைஞர் கழக உறுப்பினர்களுக்கான வீட்டுத்திட்டம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை நாடு முழுவதிலும் ஒரே நேரத்தில் இந்தத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கான வீட்டுத் திட்டம் மீசாலை வடக்கு கிராம அலுவலக பிரிவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேச இளைஞர்கள் சேவைகள் அதிகாரி செ.உதயமோகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தென்மராட்சி பிரதேச இளைஞர் நாடாளு மன்ற உறுப்பினர் எஸ்.ரி.விமலதாஸ் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு வீட்டுத் திட்டத்துக்கான அடிக் கல்லை நட்டு வைத்தார். (ம-9)



யாழ்.மாநகர சபைக்குட்பட்ட உணவகங்களுக்கு தரச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அ.இ.ஞான்சோதி ஆகியோர் தரச் சான்றிதழ்களை வழங்கினர். (ம-7)

## சாதாரண தரப் பரீட்சையில் தொழிற்பூங்கா மாணவி சித்தி

கைதடி, ஏப். 2

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் கீழ் இயங்கும் கைதடி தொழிற் பூங்காவில் தங்கியுள்ள மாணவி ஒருவர் அண்மையில் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் கல்வி பயிலும் செல்வி சின்னத்துரை சசிகலா எனும் இந்த மாணவி ஏ,பி, 2சி, 4எஸ் என எட்டுப் பாடங்களில் சித்தி பெற்றுள்ளார்.

கிளிநொச்சியை சொந்த இடமாகக் கொண்ட இந்த மாணவி 2009 ஆம் ஆண்டில் ஏற்பட்ட போரின் போது தனது சொந்தங்களையும் [illegible] கொடுத்து தனது இரு [illegible]களையும் இழந்திருந்தார். யாழ்.



விழிப்புனற்றோர் சங்கம் கைதடியிலுள்ள தமது தொழில் பூங்காவில் தங்க வைத்து கல்விக்கு ஊக்கம் கொடுத்து கல்வியைத் தொடர வழிவகை செய்தனர்.

இதன் பயனாக தற்போது இந்த மாணவி உயர்தரம் கற்கும் நிலைக்கு வந்துள்ளார். இதேவேளை மேலும் மூன்று விழிப்புலனிழந்த மாணவிகள் தற்போது இங்கிருந்து கற்று வருகின்றனர். (ம-288)

## நிகழ்வுகள் இன்று

**கருத்தரங்கு**

யாழ்ப்பாணக் கல்லூரியின் கிறிஸ்தவ மாணவர் இயக்கத்தினரும் கல்லூரியின் சமய கல்வித் துறையினரும் இணைந்து நடத்தும் 'படைப்பனைத்தையும் மீட்பதற்காக அநீதியாக துன்பத்தை அனுபவிப்பதற்கான இலட்சிய அடையாளம்' எனும் தலைப்பிலான கருத்தரங்கு நிகழ்வின் ஆரம்ப நிகழ்வுகள் இன்று முதல் நடைபெறவுள்ளன. வண. டி. எஸ். சொலமன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கருத்துரைகளை தமிழ்நாடு இறையியற் கல்லூரி பேராசிரியர் ஸ்டீபன் சுந்தர்சிங்க நிகழ்த்துவார். இந்த நிகழ்வு தொடர்ந்து 3 தினங்கள் நடைபெறவுள்ளது. (ம-14)

**குருபூசை**

தவத்திரு யோகர் சுவாமிகளின் குருபூசை தினம் பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் விசேட சொற்பொழிவை முன்னாள் மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு நிகழ்த்துவார். (ம-14)

**செயலமர்வு**

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் [illegible] பாடசாலை அதிபர்களுக்கான துரித கற்றல் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பான செயலமர்வு காலை 8.30 மணிக்கு புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (ம-19)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முடியாது என்று புலம்புவதை விடுத்து பரிந்துரைகளை செயற்படுத்துங்கள்

## அமைச்சர் வாசு வலியுறுத்து

கொழும்பு, ஏப்.2

''ஆரம்பிப்பதற்கு முன்னரே முடியாது எனப் புலம்பித்திரிவதை விடுத்து நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்'' - என தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சரும், ஜனநாயக இடதுசாரி முன்னணியின் பொதுச்செயலாளருமான வாசுதேவ நாணயக்கார கோரிக்கை விடுத்துள்ளார்.

**ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்கு முன்னரே முடியாது எனக் கூறினால் அது முடியாத காரியமாகவே முடிந்துவிடும்.**

நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபாரிசுகளை முழுமையாக அமுல்படுத்துவதில் சிக்கல்கள் உள்ளன என்று அமைச்சர்கள் சிலர் கூறும் அதேவேளை, சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தக்கூடாது என மற்றும் சில அமைச்சர்மார் கருத்து வெளியிடுகின்றனர்.

இந்நிலையில், இது தொடர்பாகக் கேட்டபோதே அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஒரு விடயத்தைச் செய்வதற்கு முன்னரே அதைச் செய்துமுடிக்க முடியாது எனக் கூறினால் இறுதிவரை அதனைச் செய்யமுடியாமலேயே போய்விடும். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்கு முன்னரே முடியாது எனக் கூறினால் அது முடியாத காரியமாகவே முடிந்து விடும். எனவே, முடியாது எனப் புலம்புவதை விடுத்து நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறையை அரசு ஆரம்பிக்கவேண்டும். மும் மொழிக் கொள்கைத் திட்டம் சிறப்பானது.

அவ்வாறு ஆரம்பித்த பின்னர் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்திச் செல்லும் போது சிக்கல்கள் வந்தால் அவற்றைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். (சி)

# அமெரிக்காவே குற்றவாளி

## புவி மணித்தியால நிகழ்வில் மஹிந்த குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 2

அமெரிக்காவே உண்மையான போர்க்குற்றவாளி என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார்.

கண்டியில் நேற்றுப் புவி மணித்தியால நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவிக்கையில்,

புவி வெப்பமடையக் காரணமான நாடுகளே உண்மையான போர்க்குற்றவாளிகள்.

புவி வெப்பமடைதலால், அனைத்து தாவர மற்றும் விலங்கினங்களும் அழிந்துவிடும்.

புவி வெப்பமடையக் காரணமான நாடுகள் தான் உண்மையான போர்க்குற்றவாளிகள், மனித உரிமைகளை மீறியவர்கள்.

இந்த விதிகளை மீறுகின்ற வகையில் மேற்குலக நாடுகளே உள்ளன.

புள்ளிவிவரங்களின்படி, புவி வெப்பமடைதலுக்கு காரணமான மிகப்பெரிய நாடுகளில், முதலாவது இடத்தில் அமெரிக்கா உள்ளது.

புவி வெப்பமடைதலுக்கு அதன் பங்களிப்பு 25 வீதமாகும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஜெனிவா தீர்மானத்துக்கு எதிராக ஜனாதிபதி தலைமையில் எதிர்ப்பு

## நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கத் திட்டம்

ஜெனிவா மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானத்துக்கு எதிராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அரச வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை அடுத்து இலங்கை மீதான சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்துவருகின்றன. இதனையடுத்து இந்தத் தீர்மானத்துக்கு எதிராக மக்களின் ஆதரவினைத் திரட்டும் நோக்கில் ஆளும் கட்சி நாடு தழுவிய ரீதியில் விழிப்புணர்வுக் கூட்டங்களையும், பேரணிகளையும்நடத்தத்திட்டமிட்டுள்ளது. இந்த நிகழ்வுகள் அனைத்தும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலேயே நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மனித உரிமைகள் சபையின் தீர்மானம் மற்றும் அது தொடர்பில் அரசின் நிலைப்பாடு ஆகியன குறித்து மக்களுக்கு இந்த நிகழ்வுகள் மூலம் தெளிவுபடுத்தப்படவுள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தக் கூட்டங்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவுடன் அரச கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களும் பங்கேற்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டுச் சக்திகளின் தலையீடுகளை எதிர்க்கும் வகையில் மக்களின் ஆதரவைத் திரட்டும் நோக்கிலேயே இந்த கூட்டங்களும் பேரணிகளும் நடத்தப்படஉள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த மாதத்தில் நாட்டின் பல பாகங்களில் இந்தக் கூட்டங்களும், பேரணிகளும் நடத்தப்பட உள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

# இலங்கை அரசை நீதிமன்றில் நிறுத்த முடியாது

## நோர்வே அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 2

போர்க்குற்றங்களுக்காக இலங்கை மீது அனைத்துலக குற்றவியல் நீதிமன்றில் நடவடிக்கை எடுக்க முடியாது என்று நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜெனாஸ்கர் ஸ்ரோர் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நோர்வே நாடாளுமன்றக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் பீற்றர் கிரோக் தெரிவித்த கருத்து ஒன்றுக்கு விளக்கமளித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அண்மையில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், போர்க்குற்றச்சாட்டுகளுக்காக இலங்கை அரசை அனைத்துலக போர்க்குற்ற நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பீற்றர் கிரோக் குறிப்பிட்டார்.

அதற்குப் பதிலளித்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜெனாஸ் கர் ஸ்ரோர், இலங்கை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் தொடர்பான 2002ஆம் ஆண்டின் ரோம் பிரகடனத்தில் கையெழுத்திடவில்லை.

எனவே அந்த நாட்டின் குடிமக்கள் எவரையும், போர்க்குற்றங்களுக்காக அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்த முடியாது.

போர்க்குற்றச்சாட்டுகள் குறித்து இலங்கைக்கு எதிராக சுதந்திரமான விசாரணைக் குழுவொன்றை நியமிப்பதானாலும், அதற்கும் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அனுமதி பெறப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உடன் நடைமுறைப்படுத்துங்கள்

01↘ நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கை மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் இலங்கை அமைச்சர்கள் வெளியிட்டு வரும் கருத்துக்கள் குறித்தும் பான்-கீ மூன் கவனம் செலுத்துவதாக பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

பரிந்துரைகள் எவ்வளவு விரைவாக நடைமுறைப் படுத்துப்படுமோ அந்தளவுக்கு இலங்கையில் நிலையான அமைதி ஏற்படுவதற்கான சூழல் உருவாகும் எனவும் அவர் கூறினார். (த)

# அமைச்சரவை கூட்டங்களை புறக்கணிக்கும் விமல்

01↘ கொள்ளாமல்தவிர்த்து வருவது சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது. ஜெனிவா தீர்மானத்துக்கு எதிராக அமெரிக்கப் பொருள்களைப் புறக்கணிக்குமாறு விமல் வீரவன்ச கோரிக்கை விடுத்திருந்தார்.

ஆனால் அது அவரது தனிப்பட்ட கருத்து என்றும் அரசின் முடிவு அல்ல என்றும் அரசுஅறிவித்திருந்தது. இதன் பின்னணியிலேயே அவர் அமைச்சரவைக் கூட்டத்தைப் புறக்கணிப்பதாகக் கருதப்படுகிறது. (த)

# நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஜெனிவா தீர்மானம் நல்ல வாய்ப்பு

01↘ சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியிட்டு வரும் மாறுபட்ட கருத்துக்கள் தொடர்பிலும், சர்வதேசம் குறித்தும் உன்னிப்பாகக் கவனம் செலுத்தியுள்ளதாகப் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அரசின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டினை அறிவிக்குமாறு சர்வ மதப் பேரவையின் செயலாளர் கலாநிதி இத்தேபான தம்மாலங்கார அனுநாயக்க தேரர் கோரியுள்ளார்.

அரசியல் தலைமைத்துவம் மற்றும் சிவில் சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும் இடையிலான ஆக்கபூர்வமான பங்களிப்பு, இலங்கை மீதான காரணமற்ற விமர்சனங்களுக்கு ஆக்கபூர்வமான பதிலாக அமையுமென அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இந்த அறிக்கையில் பல மதங்களையும் சார்ந்த 25 க்கும் அதிகமான சமயத் தலைவர்கள் கைச்சாத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# ஐ.நா.மனித உரிமைகள் சபையின் கிளை அலுவலகம் இலங்கையில்

01↘ கப்பட்டுள்ளது. ஐ. நா. மனித உரிமைகள் சபை இந்த அலுவலகத்தின் பணிகளை நேரடியாக கண்காணிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அலுவலகத்தில் கடமையாற்றுவதற்காக விசேட உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

உலகின் சில நாடுகளைச் சேர்ந்த நிபுணர்கள் இந்த உத்தியோகத்தர் குழுவில் அங்கம் வகிப்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. தீர்மானத்தில் பரிந்துரை செய்யப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா எனக் கண்காணிப்புச் செய்து, தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கு வதே இந்த அலுவலகத்தின் பிரதான இலக்கு எனத் தெரிவிக்கப்படுகிறது.

# வாய்க்காலில் தவறி விழுந்து 9 வயதுச் சிறுமி உயிரிழப்பு

01↘ பிறந்தவர்கள் இருவருடன் அங்கு குளிக்கச் சென்றுள்ளார். அப்போது கால் வழுக்கிய நிலையில் வாய்க்காலில் விழுந்துள்ளார். ஏனைய இருவரும் எழுப்பிய அவல ஒலி கேட்டுக் கிடுகு பின்னிக் கொண்டிருந்த தாயார் அங்கு விரைந்து சென்று பார்த்தபோதிலும் வாய்க்காலில் சிறுமியைக் காணவில்லை. அவர் அலறியபடி ஓடிச்சென்று சம்பவ இடத்துக்குச் சற்றுத்தள்ளி வயல் வேலைகளில் ஈடுபட்டவர்களை அழைத்து வந்துள்ளார். வாய்க்காலின் அடியில் தேடியபோது அரை மணித்தியாலத்தின் பின்னர் உடல் கிடைத்தது. உடனடியாக அதை மாஞ்சோலை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற போதிலும் அங்கு சிறுமி இறந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

விசாரணைகளின் பின்னர் குடும்பத்தவர்களிடம் சடலம் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

அந்தக் குடும்பத்தில் மூத்த பிள்ளையான இந்தச் சிறுமி படிப்பில் சிறந்து விளங்கினார் எனத் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் வீட்டு வேலையின் போது தாயாருக்கு மிகுந்த ஒத்தாசையாக இருந்துள்ளார் என்றும் அங்கிருந்தவர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

மேலும் மிகவும் ஆபத்தான இந்த வாய்க்காலில் இனிமேல் எவரும் குளிப்பதற்குச் செல்ல வேண்டாம் [illegible] னர். (க-433)

# சந்திரிக்கா, ரணில், மங்கள இந்த மாதத்தில் டில்லிக்கு

01↘ வுள்ளனர். இந்தக் கருத்தரங்கில் முக்கிய உரை நிகழ்த்துவதற்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கருத்தரங்கில் பங்கேற்கச் செல்லும் மூவரும், இலங்கையின் அரசியல் நிலைமைகள் தொடர்பாக இந்திய அரசியல் தலைவர்களுடன் கலந்துரையாடுவர் என நம்பகரமாகத் தெரிய வந்துள்ளது.

ஜெனிவா தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்ததை அடுத்து, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் விரிசல் ஏற்பட்டுள்ள நிலையில் இலங்கையின் மூத்த அரசியல் வாதிகள் மூவரும் புது டில்லி செல்லவுள்ளனர்.

மஹிந்த தலைமையிலான அரசின் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வரும் சந்திரிக்கா, ரணில், மங்கள சமரவீர ஆகியோர் ஒரே நேரத்தில் புதுடில்லி செல்வது கொழும்பு இராஜதந்திர வட்டாரங்களின் மத்தியில் பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

# அமெரிக்காவின் விசேட குழு அடுத்த வாரம் இலங்கைக்கு

01↘ வினர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசுவார்களா என்பது குறித்து இதுவரை தெரியவரவில்லை.

இலங்கை மற்றும் அமெரிக்காவுக்கு இடையேயான வர்த்தக உறவை பலப்படுத்தும் நோக்கில் இந்த் அமெரிக்கப் பிரதிநிதிகள் இலங்கை வருவதாகக் கூறப்படுகின்ற போதும் ஜெனிவாவில் இலங்கை மீது நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் அரசுக்கு விளக்கம் அளிப்பதற்கே அவர்கள் வருவதாகக் கூறப்படுகிறது.

இந்தக் குழுவினர் எதிர் வரும் மே மாதம் வாஷிங்டனில் நடைபெறவுள்ள அமெரிக்க ராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்ரன்- இலங்கைவெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சந்திப்புக் குறித்தும் பேசும் என்று தெரியவருகிறது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இனியும் குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டும் எண்ணம் வேண்டாமே

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக, அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளின் கருத்துக்களை, ஜனாதிபதி அறிந்து கொள்ளவுள்ளார் என்று தகவல்கள் வெளிவந்துள்ளன. இன்னும் ஒருசில நாள்களில் அந்தச் சந்திப்பு நடைபெறலாம் என்று அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்திருக்கிறார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துமாறு, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஜெனிவா மாநாட்டில் கடந்த மாதம் 22ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வலியுறுத்துகிறது.

அத்தீர்மானம் குறித்து சர்வகட்சித் தலைவர்களின் கருத்துக்களை அறிந்து கொண்டு, நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்று ஆராய்வதற்காக விசேட குழு ஒன்றை ஜனாதிபதி அமைப்பார் என்றும் அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டும் என்பது ஜெனிவாத் தீர்மானத்தின் முக்கிய அம்சமாக - வலியுறுத்தலாக - கோரிக்கையாக - உள்ளதால், அனைத்துக் கட்சிகளின் கருத்துக்களையும் கேட்டறிய அரசாங்கம் விரும்புவது நல்லதே. அது அவசியம் மட்டுமன்றி இன்றியமையாததும் ஆகும்.

தேசியத் தீர்வை - இனப்பிரச்சினைக்கான தீர்வை - செயற்படுத்துவதில், போர் முடிவுற்று மூன்று வருடங்கள் கடக்கும் நிலையிலும், தான் அதுகுறித்து உரிய அக்கறையும், முன்னுரிமையும் வழங்காதிருப்பதே ஜெனிவாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்கான பிரதான காரணம் என்பதனை, அரச தரப்புப் புரிந்துகொள்ள வேண்டும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின், நாட்டுக்கு நல்லது செய்யக் கூடிய பரிந்துரைகளையேனும் தூசி தட்டிப் பார்க்காது, காலம் கடத்தும், இழுத்தடிக்கும் வழமையான பாணியை அரசு கைக்கொள்வதும், ஜெனிவாத் தீர்மானத்திற்கான காரணிகளில் முக்கியம் எனலாம்.

அரசாங்கத்தின் மேற்சொன்ன போக்கை - அசமந்தத்தை - ஜெனிவாத் தீர்மானத்தின் பின்னரும் அது கைக்கொள்ளுமானால், காலங்கடத்துமானால், அனைத்துலக விசாரணைக்குத் தானே வழி அமைப்பதாக முடியும். அதனை மறந்துவிடக் கூடாது.

அதனாலேயே, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை காலம் தாழ்த்தாது விரைந்து செயற்படுத்துவதற்கு அரசு முனைப்புக் காட்டவேண்டிய தாமதிக்கவோ, தவிர்க்கவோ முடியாத அவசர தேவை எழுந்துள்ளது.

அரசாங்கம் இதனை உள்ளூர உணர்ந்துள்ளதோ என்னவோ. அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசி அவர்களின் கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டு செயற்படுவது, அதுகுறித்து விரைவாக ஆராய்வதற்கு குழு ஒன்றை அமைப்பது என்பது ஜனாதிபதியின் முடிவாகவும் இருக்கக்கூடும்.

ஐ.நா. வின் தீர்மானம் குறித்தும், அதனை நிறைவேற்றுவது தொடர்பிலும் அரசில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் மத்தியில், அவர்களின் தலைவர்கள் மத்தியில், அமைச்சர்கள் மத்தியில் கருத்துவேறுபாடுகள் நிரம்பி வழிகின்றன. இது அப்பட்டமாகத் தெரிகிறது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை உடனடியாக - காலம் தாழ்த்தாமல் - நடைமுறைப்படுத்துமாறும், அனைத்துலகத் தலையீடுகளைத் தவிர்ப்பதற்கு அதுவே சிறந்த வழியென்றும் அரசில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்த அமைச்சர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

அமைச்சர்கள் வாசுதேவ நாணயக்கார, பேராசிரியர் திஸ்ஸவிதாரண, டியு குணசேகரா ஆகிய மூவரும் கூட்டாக நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் ஒரே குரலில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தினர்.

அனைத்துலகத் தலையீட்டைத் தவிர்க்க வேண்டுமெனில், அதில் உண்மையான அக்கறை இருப்பின், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறையாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்தவர் ஜனாதிபதி. ஆகையால், அதன் பரிந்துரைகளைச் செயலாக்குவதில் நடைமுறைப்படுத்துவதில் சிக்கலோ, கஷ்டமோ இருக்காது என்றும் அவர்கள் தெளிவுபடுத்தி உள்ளனர்.

எமது உள்நாட்டு விவகாரத்தில், அனைத்துலக நாடுகள் தலையிடுகின்றன என்று வெறுமனே கூப்பாடு போடுவதைத் தவிர்த்து, ஆழச்சிந்தித்து ஆக்கபூர்வமாகச் செயற்படுவதே இன்றைய தேவை.

இன்னொரு வகையில் நோக்கின், சர்வதேச நாடுகளுடன் வேண்டாத வகையில் மோதிக்கொண்டும், சூளுரைத்துக் கொண்டும், இலங்கையின் இறைமையில் எந்த நாடும் - எவரும் - கை வைக்கவிட மாட்டோம் என்று வீம்பு பேசுவதாலும், சண்டப் பிரசண்டம் நடத்துவதாலும் ஆக்கபூர்வமாக ஆகப்போவது எதுவும் இல்லை.

ஜெனிவாத் தீர்மானத்தைச் சாதாரணமான ஒன்றாகவே இலங்கை அரசும் அதனைச் சார்ந்தவர்களும் மதிப்பீடு செய்கிறார்கள். தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோடு எல்லாம் முடிந்து விடாது. இலங்கை அரசு எந்தப் பாதையில் கால் பதிக்கிறது அல்லது பதிக்க முனைகிறது என்பதனை ஐ.நா. கூர்ந்து அவதானித்துக் கொண்டு இருக்கிறது. இலங்கை அரசின் போக்கு, எதிர்மறையாக அமையுமாயின் அது நீண்டகாலத் தாக்கங்களை உண்டாக்கும்.

இலங்கை அரசு நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை - அறிக்கையை - அடிப்படையாகக் கொண்டு, இங்கு நடைபெற்ற இறுதிப் போருக்குப் பொறுப்புக் கூறுதல் மற்றும் இனப்பிரச்சினைக்குரிய அரசியல் தீர்வு உட்பட்ட முழுமையான ஜனநாயக மறுசீரமைப்புக்கான தேவைகளை, நோக்கமாகக் கொண்டு அனைத்துலகம் அணிதிரண்டுள்ளதை இலங்கை அரசு ஒரு கண்ணில் சுண்ணாம்பும் மறுகண்ணில் வெண்ணெய்யும் தடவிக்கொண்டு பார்க்கக் கூடாது.

அரசின் முக்கியஸ்தர்களில், தலைமைத்துவங்களில் பலர், இன்னமும் போருக்குப் பிந்திய வெற்றிப் போதையிலும், மமதையிலும் அதன் மாயையிலும் இருந்தும் வெளியே வந்ததாக இல்லை. உலக யதார்த்தத்துக்கு முகம் கொடுப்பதற்குப் பதிலாக, இனவாதம் என்ற குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டிக் காலத்தைப் போக்கலாம் என்று எண்ணுகிறார்கள். அது காலத்துக்கு ஒவ்வாததும், அனைத்துலக நியமங்களை தூக்கி வீசுவதாகவும், நாட்டுக்குப் பாதகமானதாகவுமே முடியும்.

# அதிகாரிகளின் விருப்பு வெறுப்புக்கு இடமாற்றத்தில் இடம்கொடாதீர்

### பூநகரி ம.வி. ஆசிரியர் கோரிக்கை

அச்சுவேலி,ஏப்.2

பூநகரி மகா வித்தியாலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களை நியமன நிபந்தனை மற்றும் சேவைக் கால அளவு என்பவற்றைக் கருத்தில் கொள்ளாமல் அதிகாரிகள் விருப்பத்துக்கு ஏற்ப இடமாற்றம் செய்யப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

பூநகரி மத்திய கல்லூரியில் கடமையாற்றும் 40 ற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கையொப்பமிட்டு வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறிக்கு இது தொடர்பான முறைப்பாடு ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இந்த ஆசிரியர் ஆளுநருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளதாவது:-

சங்குப்பிட்டி (ஏ-32) பாதை பாவனைக்கு வந்ததை அடுத்து பூநகரி மகாவித்தியாலயத்தில் கடமை புரிவதற்கு பலரும் முன்வருகின்றனர். ஏ-9 பாதை வழியாக 110 கிலோமீற்றர் பயணம் செய்த வேளையில் புறக்கணிக்கப்பட்ட பகுதியாக இருந்து வந்த பூநகரி மகாவித்தியாலயத்தைப் பலரும் விரும்புகின்றனர்.

இந்த வகையில் அதிகாரிகள் தமது விருப்பத்துக்கு உரியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கு வசதியாக அங்கு கடமை புரியும் ஆசிரியர்களை வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்கின்றனர்.

இந்த வகையில் அங்கு கடமையாற்றி வந்த விஞ்ஞான ஆசிரியர் இடமாற்றம் செய்யப்பட்டார். இதற்கு ஆசிரியர்கள் ஆட்சேபனை தெரிவித்ததோடு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் கவனத்துக்கு கொண்டு வந்ததை அடுத்து இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டது.

ஏ-32 வீதி பயண வசதியைக் கருத்தில் கொண்டு விருப்பத்துக்குரியவர்களுக்கு வசதி செய்யும் நோக்கில் பூநகரி மகா வித்தியாலயத்தில் இருந்து மேலும் பலரை வேறு பாடசாலைக்கு இடமாற்றம் செய்யக் கூடிய ஏதுநிலை காணப்படுகிறது. இந்த நிலையில் இடமாற்றத்தை எதிர்பார்த்து மனக்குழப்பத்துடன் கடமை புரிய வேண்டிய நிலையில் உள்ளோம்.

இதனைக் கருத்தில் கொண்டு பொருத்தமான காரணம் மற்றும் சேவை நிபந்தனை, ஒரே பாடசாலையில் தொடர்ந்து கடமையாற்றிய சேவைக்காலம் என்பனவற்றைக் கருத்தில் கொள்ளாமல் ஆசிரியர்களை இடமாற்ற வேண்டாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மகஜரின் பிரதி வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(ம-11)

## மின்சக்தி பாதுகாப்பு மாணவர்களிடையே அறிமுகம்

பருத்தித்துறை, ஏப்.2

தேசிய மட்டத்தில் மின்சக்தி பாதுகாப்பு வேலைத் திட்டத்தை நாட்டிலுள்ள சகல பாடசாலை மாணவர்களின் பங்களிப்புடன் மேற்கொள்வதற்கு கல்வி அமைச்சு நட வடிக்கை எடுத்துள்ளது.

இந்த நிலையில் மின்சக்தி பாதுகாப்பு பிரகடனம் ஒன்று தயாரிக்கப்பட்டு சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் ஆறுமாதங்களுக்கு வாராந்தம் திங்கட்கிழமைகளில் காலைக் கூட்டத்தின் போது அனைத்து மாணவர்களும் இந்தப் பிரகடனத்தை எடுத்துக் கொள்ளல் வேண்டும்.

வீட்டில் மாலை 6.30 மணிக்கும் 9.30 மணிக்கும் இடையிலான நேரத்தில் மின்சாரத்தை சேகரிக்கும் மாணவர்கள் மாவட்ட மற்றும் தேசிய மட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டு மின்சக்திப் பாதுகாப்புச் செயற்பாடுகளுக்கு பங்களித்தமைக்காக மின்சக்தி எரிபொருள் அமைச்சால் கௌரவிக்கப்படவுள்ளனர்.

(ம-19)

## கீரிமலை நகுலாம்பிகை திருவிழா நாளை ஆரம்பம்

பருத்தித்துறை, ஏப்.2

கீரிமலை நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரர் ஆலய நகுலாம்பிகை தேவி அலங்காரத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி 14 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவடையவுள்ளது. திருவிழாக் காலத்தில் அடியார்கள் சைவசமய முறைப்படி ஆசார சீலர்களாக ஆலயத்துக்கு வருகை தருமாறு கூறப்பட்டுள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிறக்கவிருக்கும் நந்தன புதுவருடத்தினத்தன்று நகுலேஸ்வரப் பெருமானுக்கும் அம்பாளுக்கும் விஷேட பூசைகள் காலையும் மாலையும் நடைபெறவுள்ளன.

அன்றைய தினம் ஆலயத்தில் மருத்து நீர் வழங்கப்படவிருப்பதனால் அடியார்கள் ஆலயத்திற்கு வருகை தந்து அதனைப் பெற்று தீர்த்தமாடலாம் என்று கீரிமலை நகுலேஸ்வர ஆலய ஆதீனகர்த்தாவும், பிரதம சிவாச்சாரியாருமான இராஜஸ்ரீ கு.நகுலேஸ்வர குருக்கள் வேண்டியுள்ளார்.

(ம-190)

# சிகை அலங்கரிப்பு கட்டணம் உயர்வால் மக்கள் விசனம்

தென்மராட்சி, ஏப்.2

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையங்களில் கட்டண அறவீடு அதிகரிப்பால் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சிகை அலங்கரிப்பு கட்டணங்கள் திடீரென பெருமளவில் அதிகரிக்கப்பட்டமை வாழ்க்கைச் செலவு அதிகரித்து வரும் இந்தக் காலகட்டத்தில் ஒரே தடவையில் திடீரென சிகை அலங்கரிப்பு கட்டணம் அதிகரித்தமை தமக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஒவ்வொரு உற்பத்திப் பொருள்களும் அதனுடன் இணை சார் பொருள்கள் உற்பத்தி செலவு, போக்குவரத்துச் செலவு, எரிபொருள் செலவு ஆகியவற்றால் அதிகரிக்கப்படுவது ஏற்கக் கூடியதே.

ஆனால் சிகை அலங்கரிப்பு கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டமை ஏற்கக் கூடியதல்ல. இதனால் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஏனைய பிரதேசங்களை விட தென்மராட்சிப் பிரதேசத்தில் தேனீர், சிற்றுண்டி உட்பட உற்பத்திப் பொருள்களின் விற்பனை விலைகள் மிகமிகக் குறைவாக உள்ள போதிலும் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் மட்டும் ஏன் மிக அதிகரித்த கட்டணங்களை அறவிடுகிறார்கள் எனவும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர்களுடன் தொடர்பு கொண்ட போது, வாழ்க்கைச் செலவுகள் அதிகரிப்புடன் கடை வாடகை, தொழிலாளர் சம்பளம் ஆகியவற்றின் அதிகரிப்பு காரணமாகவே நாங்களும் கட்டணங்களை அதிகரிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

(ம-9)

# இடமாற்றம் பெற்ற ஆசிரியரின் இடங்கள் வெற்றிடமாகவே

### பெற்றோர் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப். 2

புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிர மணிய வித்தியாலயத்தில் இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்குப் பதிலாகப் புதிய ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை என பெற்றோர்கள் கூறுகின்றார்கள். ஆண்டு ஐந்து புலமைப் பரீட்சைக்கான மாணவர்கள் இதனால் பாதிப்படைந்துள்ளதாகவும் இடமாற்றம் பெற்ற இரண்டு ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான வெற்றிடத்தை நிரப்ப திணைக்களம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. தேவைக்கு மேலதிகமாக ஆங்கில ஆசிரியர்கள் உள்ளதாகவும் ஆங்கில ஆசிரியர்கள் மூன்று பேர்கள் வரை உள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. பாடசாலைக்குரிய ஆளணிப் பற்றாக் குறையைத் தவிர்ப்பதற்காக தேவைக் கதிகமான அதே பாடத்துக்கான ஆசிரியர்களை வைத்திருப்பது பயனில்லை எனவும் பாடங்களுக்குத் தேவையான ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் எனவும் மக்கள் கூறுகின்றனர்.

(7)

## இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு றப்பர்

இலங்கையிலிருந்து கச்சா றப்பரை இறக்குமதி செய்ய அகில இந்திய றப்பர் தொழிற்சாலைக் கழகம் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. கொழும்பில் இந்த வருடத்துக்கான வர்த்தகக் கண்காட்சியில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியது.

இலங்கை வணிகத் துறை அமைச்சருடன் நடைபெற்ற பேச்சின் முடிவாக இலங்கையிலிருந்து றப்பர் இறக்குமதி ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளதாக இந்தியத் தூதர் தெரிவித் துள்ளார். ஐ.நா. சபையில் இலங்கைக்கெதிராக இந்தியா ஆதரவளித்துள்ள நிலையில் இந்த வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோகபுரம் விளையாட்டுப் போட்டியில்
# விருந்தினர் கொட்டகையும் பறந்தது சுழல் காற்றில்

துணுக்காய், ஏப்.2

துணுக்காய்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியின் போது விருந்தினர்களுக்காக அமைக்கப்பட்டிருந்த கொட்டகையும் மினி சூறாவளியால் அள்ளுண்டு சென்றது.

துணுக்காய்ப் பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிகள் யோகபுரம் மத்திய கல்லூரியின் திறந்த விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இதில் முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டிருந்தார்.

அப்போது 5.30 மணியளவில் பனிக்கட்டி மழையுடன் கூடிய திடீர்ச் சூறாவளி வீசியது. இதன்போது விருந்தினர்கள் தங்கியிருந்த பிரதான கொட்டகை கடும் காற்றுக் காரணமாகப் பாதிக்கப்பட்டு அள்ளுண்டு சென்றது. அங்கிருந்தவர்கள் செய்வதறியாது சிதறி ஓடினர். அரச அதிபர் பாதிப்பெதுவுமின்றித் தப்பியுள்ளார்.

இதேவேளை மாந்தை கிழக்கு நட்டாங்கண்டலிலும் பனிக்கட்டி மழையுடன் கூடிய சூறாவளியால் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

நட்டாங்கண்டல் மகப்பேற்று மருத்துவமனையின் கூரைகள் தூக்கி வீசப்பட்டுள்ளன. மேலும் தற்காலிகக் குடிசைகளும் பிடுங்கி எறியப்பட்டுள்ளன. இங்கு வசித்த மக்கள் காற்று, மழை ஆகியவற்றுக்கு மத்தியில் கையில் கிடைத்ததை எடுத்துக் கொண்டு வேறு இடங்களுக்குச் செல்வதைக் காண முடிந்தது.

சுமார் 30 குடும்பங்களுக்கு மேல் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. (க-415)

# போதியளவு நிதியுண்டு களஞ்சியம் இல்லையே
## நெல் கொள்வனவு பாதிப்பு

அக்கராயன், ஏப்.2

கிளிநொச்சி மாவட்டத்தில் நெல்லைப் போதியளவு சேமித்து வைக்கக்கூடிய களஞ்சிய வசதிகள் இல்லாத நிலை காணப்படுகின்றது.

கிளிநொச்சி ஒரு விவசாய மாவட்டம் என்பதால் விவசாயிகள் பெருமளவில் நெல்லை உற்பத்தி செய்கின்றனர். ஆனால் இதனை உரிய நேரத்தில் நல்ல விலைக்கு விற்பனை செய்ய முடியாத அவலம் காணப்படுகிறது.

கிளிநொச்சி அரச செயலகம் நிதியைப் பல்வேறு வகையிலும் வழங்கியுள்ள போதிலும் களஞ்சிய வசதியின்மையால் நெல்லைக் கொள்வனவு செய்வதில் இடர்கள் காணப்படுகின்றன.

அக்கராயன் ப.நோ.கூ. சங்கத்திடம் அரச செயலகம் நிதியை வழங்கியுள்ள போதிலும் களஞ்சிய வசதியின்மையால் நெல் கொள்வனவில் சங்கம் ஈடுபடவில்லை.

இதேவேளை தனியார் வியாபாரிகள் மிகக் குறைந்த விலையில் நெல்லைக் கொள்வனவு செய்வதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

அரச செயலகத்தில் நடைபெற்ற விவசாயக் குழுக் கூட்டத்திலும், ஏனைய நெற்செய்கைக் கூட்டங்களிலும் ப. நோ. கூட்டுறவுச் சங்கங்கள் விரைவாக நெல்லினைக் கொள்வனவு செய்ய வேண்டுமென விவசாயிகள் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். (க-18)

## மன்னாரிலும் தந்தை செல்வா பிறந்ததின நிகழ்வு



மன்னார், ஏப்.2

தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் 114 ஆவது பிறந்த தின நிகழ்வு மன்னாரில் சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் 31 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் பஸார் தரிப்பிட முச்சந்தியில் இடம்பெற்றது.

நிகழ்வுக்கு மன்னார் தந்தை செல்வா அறங்காவல் சபைத் தலைவர் பி.ஏ.அந்தோனிமார்க் தலைமை வகித்தார். மன்னார் நகரசபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம், உப தலைவர் ஜேம்ஸ் யேசுதாஸ் மற்றும் பல பிரமுகர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதன்போது முச்சந்தியில் அமைந்துள்ள தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு நகரசபைத் தலைவர் ஞானப்பிரகாசம், தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர் சிந்தாத்துரை ஆகியோர் மாலை அணிவித்தனர். இதனைத் தொடர்ந்து மன்னார் அரச பஸ் தரிப்பிடத்தில் கூட்டம் இடம்பெற்றது.

வருகை தந்த பிரமுகர்கள் சிறப்புரைகளை ஆற்றினர். நிகழ்வுக்கு நூற்றுக்கணக்கானோர் சமுகமளித்திருந்தனர். (க-12)

# நீருக்காக ஆலாய்ப் பறக்கும் வட்டக்கச்சிப் பிரதேச மக்கள்

கிளிநொச்சி, ஏப்.2

வட்டக்கச்சிப் பிரதேசத்தின் கட்சன் வீதியின் பின் பகுதியில் உள்ள மக்கள் தமது நாளாந்தப் பாவனைக்கான நீரைப் பெற்றுக் கொள்வதில் பெருஞ்சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

இந்தப் பகுதியிலுள்ள கிணறுகள் அனைத்தும் வரட்சிக் காலத்தில் வற்றிக் காணப்படுவதுடன் குடிதண்ணீர் உட்பட வேறு தேவைகளுக்கான நீரைப் பெறுவதில் பெருஞ்சிரமங்களை இங்குள்ளவர்கள் எதிர்நோக்க நேரிடுகின்றது.

போருக்கு முன்னரான காலப்பகுதியில் நீர்ப்பம்பி மூலம் தொட்டியில் சேமித்துப் பெறப்பட்ட நீர் மூலம் இந்தப் பகுதி மக்களுக்கான நீர்த் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வந்தது. தற்போது அத்தகைய செயற்பாடுகள் இடம்பெறுவதில்லை. இதனால் இந்தப்பகுதியில் வாழும் 200 வரையிலான குடும்பங்கள் நீரைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன.

கடந்த ஆண்டு இந்தப் பகுதியில் கரைச்சிப் பிரதேச சபையால் நீர்த்தாங்கிகள் வைக்கப்பட்டு நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.

**வட்டக்கச்சிப் பகுதியும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் விரைவாக நீர் வழங்க மேற்கொள் ளப்படவுள்ள நீர் வழங்கல் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மூன்று பிரதேசங் களில் ஒன்று**

இந்த நீர் தாங்கிகள் பிரதேச சபையால் வேறு இடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு விட்டன என்று கூறப்படுகின்றது.

வட்டக்கச்சிப் பகுதியும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் விரைவாக நீர் வழங்க மேற்கொள்ளப்படவுள்ள நீர் வழங்கல் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மூன்று பிரதேசங்களில் ஒன்று என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (க-426)


# செயற்கை உரத்தைக் குறைத்து இயற்கை உரத்தை பாவியுங்கள்

அக்கராயன், ஏப்.2

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் செயற்கை உரங்களைக் குறைத்து இயற்கை உரங்களை அதிகளவில் பயன்படுத்த வேண்டும் என விவசாயக் கூட்டங்களில் வலியுறுத்தப்பட்டு வருகின்றது

வயல் நிலங்கள் உவரடைந்து தரிசு நிலங்களாக மாறுவதற்கு செயற்கை உரப் பாவனையின் அதிகரிப்பே முக்கிய காரணமாகிறது என்று விவசாயிகளுக்குச் சுட்டிக் காட்டப்படுகிறது.

"விவசாயிகள் இயற்கை உரங்களைப் பயன்படுத்த வேண்டும். அதன் மூலம் வயல் நிலங்களின் உவர் தன்மையைக் குறைக்க முடியும் அத்துடன் விளைச்சலையும் அதிகரிக்க முடியும்." என விவசாய விரிவாக்கல் அலுவலர்கள் கூட்டங்களில் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர். (க-18)



வவுனியா நகரசபையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட 33 கிராமங்களின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்கள் காணப்படுகின்றனர்.

# ஒழுங்கு முறையான பயிற்சிகள் மூலம் மன வலிமையையும் வளர்க்கலாம்
## விளையாட்டு விழாவில் விநோ எம்.பி.

மன்னார், ஏப்.2

சகிப்புத் தன்மையும் விட்டுக் கொடுப்புகளும் இல்லாத வீரர்களினால் விளையாட்டின் நோக்கங்களை எட்டமுடியாது. இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வினோ நோகராதலிங்கம் எம்.பி.

வவுனியா செட்டிகுளம் பிரதேச இளைஞர் சேவைகள் மன்றம் நடத்திய பிரதேச விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒழுங்குமுறையான பயிற்சிகள் மூலம் உடல் வலிமையை மட்டுமல்ல மன வலிமையையும் வளர்த்துக் கொள்ள முடியும். சிறந்த தலைமைத்துவத்தை இதனால் வழங்க முடியும். இங்கே இருக்கின்ற விருந்தினர்கள் அரசியல் வாதிகளாகவும், அதிகாரிகளாகவும் அங்கீகாரம் பெறுவதற்கு அவர்களின் துறைசார்ந்த பயிற்சிகளும், முயற்சிகளுமே காரணம் என்பதை இளைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இளமைப் பருவம் என்பது மிகவும் குறுகிய காலப்பகுதியாகும். அதற்குள்ளே எமது திறமைகளை விருத்தி செய்து சாதனைகளைப் புரியவேண்டும். பிரதேசத்துக்கு பெருமை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இங்கு உரையாற்றிய பிரதேச சம்மேளனத் தலைவர் விளையாட்டு உபகரணங்கள் இல்லாததால் பயிற்சிகளை மேற்கொள்ள முடியவில்லை எனக் கூறினார்.

**எங்கள் கண் முன்னாலேயே விளையாட்டு உபகரணங்கள் சேதமாக்கப்படும் போது எப்படி எங்களால் இப்படியான பொருள்களைக் கொள்வனவு செய்து உங்களுக்கு வழங்க முடியும்? இது ஒரு சிறிய தவறென்றாலும் பின்னர் தவறான வழிக்கு இது இட்டுச் செல்லும்.**

இப்படியும் ஒரு வீரர்

ஆனால் இங்கு அஞ்சல் ஓட்டப் போட்டியில் பங்கெடுத்த வீரர் ஒருவர் எங்கள் முன்னாலேயே விளையாட்டு [illegible] தோல்வியை ஏற்றுக்கொள்கின்ற மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ளாமையே இதற்குக் காரணம். எங்கள் கண் முன்னாலேயே விளையாட்டு உபகரணங்கள் சேதமாக்கப்படும் போது எப்படி எங்களால் இப்படியான பொருள்களைக் கொள்வனவு செய்து உங்களுக்கு வழங்க முடியும்? இது ஒரு சிறிய தவறென்றாலும் பின்னர் தவறான வழிக்கு இது இட்டுச் செல்லும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை செட்டிகுளம் மகா வித்தியாலய மைதானத்தில் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி சசிகரன் தலைமையில் நடைபெற்ற இளைஞர் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் செட்டிகுளம் பிரதேச செயலாளர் கமலநாதன், வவுனியா தே.இ.சே.மன்ற உதவிப் பணிப்பாளர் சந்திரபாலா உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

முதலாவது இடத்தைச் செட்டிகுளம் கலைமகள் இளைஞர்கழகமும், இரண்டாவது இடத்தை மெனிக்பாம் பீனிக்ஸ் கழகமும் பெற்றுக் கொண்டன. (க-12)

## குளப் புனரமைப்பு ஆரம்பம்

அக்கராயன், ஏப்.2

பூநகரி சின்னப் பல்லவராயன் கட்டுக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

குறித்த குளத்தின் புனரமைப்புப் பணிகளுக்கென 17 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

சின்னப்பல்லவராயன் கட்டுக்குளத்தில் புனரமைப்புப் பணிகள் நடைபெறும் சமயத்தில் சிறுபோக நெற்செய்கையும் மேற்கொள்ளப் படவுள்ளது.

இதன் போது நிரந்தரக் குடியிருப்பாளர்கள் முக்கால் ஏக்கர் காணியிலும், ஏனையோர் அரை ஏக்கர் காணியிலும் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிமெந்து பைகள் வீழ்ந்து காயம்

அளவெட்டி, ஏப்.2

மயிலிட்டி துறைமுகத்தில் தரித்து நின்ற கப்பலில் இருந்து சிமேந்து பைகளை இறக்கும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளி மீது அடுக்கி வைக்கப்பட்டிருந்த சிமெந்துப் பைகள் சரிந்து வீழ்ந்ததில் அவர் காயமடைந்தார்.

பொலிகண்டி கிழக்கு பதுவளையைச் சேர்ந்த செபமாலை பத்திநாதர் (வயது 46) என்பவர் கப்பலுக்குள்ளிருந்து சிமெந்து பைகளை எடுக்கும் போது இவ்வாறு வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. காயமடைந் தவர் தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (ம-36)

# திடீர் மின்வலு அதிகரிப்பால் நாசமாகும் உபகரணங்கள்

வலி வடக்கு, ஏப்.2

வலிகாமம் பகுதியில் உள்ள சுன்னாகம் மல்லாகம் தெல்லிப்பழை, அளவெட்டி, மருதனார்மடம், உடுவில் பகுதிகளில் அடிக்கடி மின் அதிகரிப்பு ஏற்படுவதால் தொடர்ச்சியாக மின்சார உபகணங்கள் எரிந்து பழுதடைந்து வருகின்றன என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் மருதனார் மடம் சந்தியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தின் இரண்டு பம்பிகள் எரிந்துள்ளதுடன் அயலில் உள்ள வீடுகள், கடைகளில் இருந்த மின் உபகரணங்களும் சேதமடைந்துள்ளன.

இதேபோன்று கடந்த வாரத்தில் தெல்லிப்பழை, அளவெட்டி, மல்லாகம் பகுதிகளிலும் நடந்ததால் பல லட்சம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் உபகரணங்கள் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்கதையாகின்ற போதிலும் மின்சார சபையின் அதிகாரிகளுடன் தொலைபேசியில் இது சம்பந்தமாக கதைத்தால் பொறுப்பற்ற பதில்களே கிடைக்கப் பெறுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் காங்கேசன்துறை யாழ்ப்பாணம் வீதி அகலிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து மின்கம்பங்களை இருந்த இடத்தில் இருந்து மாற்றி புதிய இடங்களில் பொருத்தப்பட்டு வருகின்றன. இதனை அடுத்து இந்த அவலம் பொது மக்களுக்கு ஏற்படத் தொடங்கியுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-86)

## தூக்கத்தில் இருந்தவர் எழுந்து ஓடினார்

### தப்பின குதிரை வாகனங்கள்

தென்மராட்சி,ஏப். 2

தூக்கத்திலிருந்த ஒருவர் எழுந்து வீதியில் கத்திக் கொண்டு ஓடியதால் அயலில் உள்ளவர்கள் வீதிக்கு ஓடி வந்தனர்.

இந்த நிலையில் அயலில் ஆலயம் ஒன்றில் குதிரை வாகனத்தை கடத்த முயன்ற இருவர் ஹெல்மட்டுகளையும் விட்டுவிட்டு மோட்டார் சைக்கிளில் ஏறித் தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவம் அண்மையில் சாவகச்சேரி கல்வயல் வேதவனப் பிள்ளையார் ஆலயத்தில் இடம் பெற்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை பின் இரவு 2 மணியளவில் பிள்ளையார் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த குதிரை வாகனத்தை கழற்றிச் செல்ல முற்பட்டுள்ளனர்.

இந்த வேளையில் ஆலயத்திலிருந்து 200 மீற்றருக்கு அப்பால் உள்ள வீடொன்றில் நித்திரையாக இருந்த ஆலய பக்தர் ஒருவர் திடீரென படுக்கையிலிருந்து எழுந்து கத்திக் கொண்டு வீதியில் ஓடினார்.

இவரது சத்தத்தைக் கேட்டு அயலவர்கள் எழுந்து இவருக்கு பின்னால் ஓடினர். சத்தம் போட்டுக் கொண்டு ஓடி வருவதை அவதானித்த திருடர்கள் இருவரும் தமது ஹெல்மட்டையும் குதிரை வாகனத்திலிருந்து கழற்றிய கால்களையும் கைவிட்டு தப்பியோடியுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் இருவர் அவசரமாகச் செல்வதை அவதானித்த மக்கள் ஆலயத்தினுள் சென்று பார்த்த போது அங்கு திருட்டு முயற்சி இடம் பெற்றமையைக் கண்டனர்.

இந்த சம்பவம் தொடர்பாக ஆலய நிர்வாகத்தினர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறையிட்டனர். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். வீதியில் கத்திக் கொண்டு ஓடிவந்தவர் தனக்கு என்ன நடந்தது என்று தெரியாது என்று கூறியுள்ளார். (ம-9)

# மரக்கறி வகைகளின் விலைகள் சரிந்தன

யாழ்ப்பாணம்,ஏப். 2

யாழ். குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலைகள் தற்போது மேலும் சரிந்து காணப்படுகின்றன. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குடாநாட்டில் மரக்கறி செய்கையில் விவசாயிகள் ஆர்வம் காட்டியதை அடுத்து மரக்கறி உற்பத்திகளும் தற்போது திடீரென அதிகரித்துள்ளன.

அனேகமான இடங்களில் மரக்கறி வகைகள் இந்த முறை பயிரிடப்பட்டதால் அவற்றின் விளைச்சலும் அதிகரித்துள்ளது.

சுன்னாகம், மருதனார் மாடம், சங்கானை, திருநெல்வேலி, சாவகச்சேரி, கொடிகாமம் போன்ற சந்தையில் அவை தாராளமாக வந்தும் சேர்கின்றன.

குறிப்பாக திருநெல்வேலி சந்தைகளுக்கும் நேற்று மரக்கறி வகைகளின் விலைகள் சற்று சூடு பிடித்தும் காணப்பட்டன.

பங்குனி திங்கள் மற்றும் இந்த மாதத்தில் ஆலய உற்சவங்கள் சில ஆரம்பமாக இருப்பதும் அதனை விட சுபகாரியங்கள் , வைபவங்கள் இடம் பெறவுள்ளன.

இந்த நிலையில் மரக்கறி வகைகளின் விலையும் சற்று உயரலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

கத்தரிக்காய் கிலோ 50 ரூபா, பயிற்றங்காய் கிலோ 30 ரூபா, தக்காளிப்பழம் கிலோ 30ரூபா, பூசணி கிலோ 20 ரூபா, வெண்டிக்காய் கிலோ 30 ரூபா, கரட் கிலோ 40 ரூபா, மரவள்ளி கிலோ 20 ரூபா, உருளைக் கிழங்கு கிலோ 70 ரூபா, பச்சை மிளகாய் கிலோ 50 ரூபா, வெங்காயம் கிலோ 40 ரூபா, கீரை ஒரு பிடி 15 ரூபா, தேசிக்காய் ஒன்று 15 ரூபா. (ம-17)

## முட்டாள்களின் அட்டகாசம்

யாழ்ப்பாணம்,ஏப். 2

ஏப்ரல் முட்டாள் தினத்தால் யாழ். நகரின் புறநகர்ப் பகுதிகளில் இளைஞர்களின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்பட்டது.

நல்லூர், கல்வியங்காடு, குருநகர், பாஷையூர் போன்ற பகுதிகளில் இளைஞர்கள் சிலர் தமக்குள் கூழ் முட்டை மற்றும் கலர் சாயங்களும் வீசி அட்டகாசம் செய்தனர். இளைஞர்களின் இந்த அட்டகாசத்தால் வீதியால் சென்ற மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு தள்ளப்பட்டனர்.

பழுதடைந்த கோழி முட்டைகளை வீசியும், கோழி சாயங்களை விசிறியும் வீதிளால் சென்ற மக்களைப் பெரும் சிரமத்துக்கு ஆளாக்கினர்.

பழுதடைந்த முட்டைகளின் விசிறலால் ஏற்பட்ட துர் நாற்றத்தால் மக்கள் மூக்கை பொத்திக் கொண்டும் பயணித்தனர்.

இளைஞர்களின் இப்படிப்பட்ட அநாகரிகமான செயலுக்கு மக்கள் விசனம் தெரிவித்தனர். (ம-17)



யாழ். இலக்கிய வட்டத்தின் ஆதரவில் வே.ஐ.வரதராஜனின் 'என் கடன்' கவிதை நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி த.கலாமணியிடமிருந்து வர்த்கர் செ.செல்வநாதன் நூலின் முதல் பிரதியைப் பெற்றுக் கொள்கிறார்.

## சைக்கிள் ஓட்டப்போட்டியில் பங்குகொள்ள வந்தவர் காயம்

கைதடி,ஏப். 2

சைக்கிள் ஓட்டப்போட்டியில் கலந்து கொள்வதற்கென வவுனியாவில் இருந்து ஆவலாக சைக்கிளில் வந்த இளைஞர் சில்லின் அச்சு முறிந்ததில் காலில் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை செம்மணி இந்து மயானம் அருகே இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் வவுனியா கோயில்குளத்தைச் சேர்ந்த புஸ்பநாதன் கமலன் (வயது 26) எனும் இளைஞனே காயமடைந்தவராவார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தால் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி வரை நடத்தப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாண வீரர்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியில் பங்கு பற்றுவதற்காக வவுனியாவிலிருந்து போட்டி நடைபெறவுள்ள யாழ்ப்பாணத்துக்கு சைக்கிளிலேயே வந்துள்ளார்.

இந்த நிலையில் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் செம்மணி இந்து மயானம் அருகே வேகமாக வந்தவேளை திடீரென சைக்கிளின் முன் சில்லின் அச்சு உடைந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இந்த இளைஞன் நேற்று நடந்த சைக்கிள் ஓட்டப் போட்டியில் கடுமையான காயங்களுக்கு மத்தியிலும் கலந்து கொண்டார். (ம-288)

## தார்க்கலவை மூலம் வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 2

புத்தூர் - சுந்தரோடை வீதி தார்க்கலவை மூலம் சீர்செய்யும் பணிகள் இடம் பெற்றுள்ளன.

வீதியில் ஏற்பட்டிருக்கும் சேதங்கள் மற்றும் உடைவுகள் என்பன இந்த தார்க் கலவை மூலம் புனரமைக்கப் பட்டுள்ளன.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குக் கொண்டு வரப்பட்ட இந்தத் தார்க் கலவை மூலம் இந்த வீதியை செப்பனிடும் பணிகள் இடம் பெற்றுள்ளன. (ம-17)

## ஊர்மனைகளூடான பஸ் சேவை தேவை

### தென்மராட்சி மக்கள் கோரிக்கை

தென்மராட்சி,ஏப். 2

யாழ்ப்பாணத்திலிருந்து கைதடி, நுணாவில், மட்டுவில் தெற்கு, முசுறி, மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில், கனகன்புளியடி ஊடாக கொடிகாமத்துக்கு பஸ்சேவை ஆரம்பிக்குமாறு இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் டிப்போ முகாமையாளரைக் கேட்டுள்ளனர்.

சுமார் 7மைல் நீளமான இந்த வீதியைச் சேர்ந்த ஏ-9 வீதியூடாக பயணிப்பதற்கு கைதடி நுணாவில் வைரவர் கோயில் சந்திக்கு கால்நடையாக அல்லது சைக்கிளில் வர வேண்டியுள்ளது.

**குறித்த பகுதிகளில் சேவைகள் இன்மையால் நடை பயணத்தில் மக்கள்.**

பஸ்சேவையின்மையால் இந்தப் பகுதியில் உள்ள மாணவர்களும் அரச ஊழியர்களும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் இந்த [illegible] தெரிவித்துள்ளனர். (ம-9)

## தந்தை செல்வா நினைவாலயத்தில் தமிழ் கட்சிகளின் தலைவர்கள்

### யாழ். நகரில் உணர்வுபூர்வ பிறந்ததின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 2

தந்தை செல்வாவின் 114ஆவது பிறந்த தின நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். நகரிலுள்ள தந்தை செல்வா நினைவாலயத்தில் உணர்வுபூர்வமாக இடம் பெற்றது.

தந்தை செல்வா அறங்காவலர் குழுவின் ஏற்பாட்டில் அதன் தலைவரும், தென்னிந்திய திருச்சபையின் ஓய்வுபெற்ற முன்னாள் பேராயருமான ஜெபநேசன் அடிகளார் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

தமிழ் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றாக இணைந்து தந்தை செல்வாவின் நினைவுச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து, பிறந்ததின நிகழ்வை அனுஷ்டித்திருந்தனர்.

தமிழரசுக் கட்சி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் உள்ளூராட்சி மன்றங்களின் மக்கள் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டு மலர் மாலை அணிவித்தும் மலர் தூவி பிறந்த தின நிகழ்வை அனுஷ்டித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிறேமச்சந்திரன், சிவஞானம் ஸ்ரீதரன் மற்றும் வீ. ஆனந்தசங்கரி, த.சித்தார்த்தன், வி.வி.கே. சிவஞானம், பேராசிரியர் சிற்றம்பலம், எம்.கே. சிவாஜிலிங்கம் உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளின் பிரமுகர்கள் இந்த நிகழ்வில் ஒரே நேரத்தில் கலந்துகொண்டனர். இவர்களுடன் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

தமிழ் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றாக இணைந்து தந்தை செல்வாவின் பிறந்த தின நிகழ்வை அனுஷ்டித்தமையைப் பலரும் பாராட்டினார்கள். (ஒ-03-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவன்கோயிலில் புத்தரா?

## உருத்திரபுரத்தில் தேடுகிறது இராணுவம்

கிளிநொச்சி, ஏப்.2

**கிளிநொச்சி, உருத்திரபுரம் சிவன்கோயிலில் புத்தர் சிலை இருப்பதாகக் கூறி கடந்த 27ஆம் திகதி மாலை 3 மணியளவில் இராணுவத்தினர் சீருடையுடன் மூலஸ்தானம் வரை சென்று சோதனையிட்டுள்ளனர்.**

அன்றைய தினம் மூன்று வாகனங்களில் வந்த 40 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் தமது பாதணிகளைக் கழற்றிவிட்டு இராணுவச் சீருடையுடன் மூலஸ்தானம்வரை சென்று சோதனை நடத்தினர். ஆலய நிர்வாகத்தினருக்கோ குருக்களுக்கோ முன்னறிவித்தல் கொடுக்காமல் இராணுவத்தினர் திடீர் தேடுதல் நடத்தியது ஆலய நிர்வாகத்தினருக்கும் அந்தப் பகுதி மக்களுக்கும் பயப்பீதியை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, இராணுவத்தினர் மறுநாள் அந்தப் பகுதிக்கு வந்து ஆலயத்துக்கு அருகில் உள்ள மணல் திட்டு ஒன்றுக்குள் புத்தர் சிலை இருப்பதாகத் தெரிவித்து அந்தப் பகுதியில் இரண்டு பொலிஸாரையும் இராணுவத்தினரையும் காவலுக்கு நிறுத்திவைத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:

''சம்பவம் நடைபெற்றதைக் கேள்விப்பட்டு நான் நேரடியாகச் சென்று ஆலயச் சூழலை அவதானித்தேன். அங்கு இராணுவத்தினர் காவலுக்கு வைக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்திலேயே வரலாற்றுச் சிறப்பு மிக்கதாக உருத்திரபுர ஈஸ்வரர் ஆலயம் காணப்படுகிறது. இந்தக் கோயிலில் சதுர ஆவுடையார் மூல மூர்த்தியாக உள்ளார். தமிழ் மன்னர்கள் ஆட்சிசெய்த வரலாற்று தொல்லியல் சிறப்பு மிக்க இந்தப் பகுதிகளில் புத்தர் சிலை இருப்பதற்கான எந்த சாத்தியக் கூறுகளும் இல்லை. அப்படி ஏதாவது இருக்குமானால் அதை இராணுவத்தினர் சீருடையுடன் மூலஸ்தானம் வரை சென்று தேட வேண்டும் என்ற அவசியமும் கிடையாது.

ஆலய நிர்வாகத்திடம் தொடர்புகொண்டோ அல்லது தொல்லியல் மற்றும் அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொல்லியல் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டோ இதனைச் செய்திருக்க முடியும். இராணுவத்தினரின் இந்தச் செயற்பாடு இந்துசமயத்தை இழிவுபடுத்தும் காரியமாகவே பார்க்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு தெரிவிக்கவோ தகவல்களை வெளியிடவோ ஆலயத்தினரும் பொதுமக்களும் அஞ்சுகின்றனர். இது விடயம் தொடர்பில் நான் உரிய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவரவுள்ளேன்''- என்று அவர் தெரிவித்தார். (10-03)

# அம்பலப்பெருமாளுக்கும் பஸ் சேவை வேண்டும்!

அக்கராயன், ஏப்.2

துணுக்காய் அம்பலப்பெருமாள்குளம் கிராமத்தை மையப்படுத்தி துணுக்காய் நகரிலிருந்து பஸ்சேவை நடத்துமாறு இங்குள்ள மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அம்பலப்பெருமாள் குளம் பாடசாலையிலிருந்து மூன்று வேளையும் துணுக்காய் சென்று வரக்கூடிய வகையில் பஸ் சேவையை நடத்துவதன் மூலம் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் தமது பயணத்தை மேற்கொள்ள முடியும்.

துணுக்காய்ப் பிரதேச செயலகம், மல்லாவி மருத்துவமனைகள் ஆகிய இடங்களுக்குச் செல்லும் மக்களும் விரைவாக வீடு திரும்ப முடியும். தற்போது காலையில் பயணம் செய்தால் பிற்பகல் 4.30 மணிக்குத்தான் வீடு திரும்பக் கூடிய நிலை காணப்படுகின்றது.

இந்த பஸ் சேவை இடம்பெற்றால் கோட்டைகட்டியகுளம், தென்னியங்குளம், உயிலங்குளம், ஆலங்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பெரும் நன்மையடைவார்கள் என்கின்றனர் அப்பிரதேச மக்கள். (க-18)

# வாரத்தில் இரு நாள்கள் மருத்துவ சேவை

அக்கராயன்,ஏப்.2

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மருத்துவமனையில் வாரத்தில் இரு நாள்கள் மட்டுமே மருத்துவர் பணியில் உள்ளார்.

அக்கராயன் மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவர் சந்திக்க பஸ்ஸ நாயக்க செவ்வாய், வெள்ளி ஆகிய இரு தினங்களில் பிற்பகல் வேளையில் இங்கு மருத்துவப் பணியில் ஈடுபட்டுள்ளார்.

ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக வன்னேரிக்குளம் மருத்துவமனையில் நிரந்தர மருத்துவர் பணியில் இல்லை. 25 ஆண்டுகளாக இந்த மருத்துவமனையில் பணி புரிந்த மருத்துவர் ஓய்வு பெற்றுச் சென்றதை அடுத்து வேறு நிரந்தர மருத்துவர் பணிக்கு வரவில்லை. தற்போது வாரத்தில் இரு நாள்கள் பிற்பகல் வேளையில் பதில் மருத்துவர் பணியில் ஈடுபடுவதால் மக்களின் முழுமையான மருத்துவத் தேவைகளையும் அவரால் நிறைவேற்ற முடியவில்லை.

மிகவும் பின் தங்கிய இந்தப் பகுதியில் உள்ள மக்கள் அரச மருத்துவமனையையே நம்பியுள்ளனர்.

இந்த நிலையில் நிரந்தர மருத்துவர் ஒருவரை நியமித்து வன்னேரிக்குளம் மக்களின் மருத்துவத் தேவைகளைப் பூரணமாக நிறைவேற்ற வேண்டுமெனப் பலரும் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். (க-18)

# வரட்சியால் பேராறு மக்கள் அவலம்

முல்லைத்தீவு, ஏப்.2

முல்லைத்தீவு மாவட்டம் பேராறு கிராம அலுவலர் பிரிவிலுள்ள மக்கள் தமது தாகத்தைத் தணிப்பதற்காக நீண்ட தூரம் அலைந்து திரிகின்றனர்.

இவர்கள் பாதுகாப்பற்ற மண் கிணறுகள் மூலமே தமக்குத் தேவையான நீரைப் பெற்று வந்தனர். ஆனால் போர் மற்றும் இடப்பெயர்வு ஆகிய காரணங்களால் இந்தக் கிணறுகள் பராமரிக்கப்படாத நிலையில் அழிவடைந்து காணப்படுகின்றன. இங்கு வாழ்கின்ற மக்கள் மிகவும் வறிய நிலையில் உள்ளனர். இதனால் அழிவடைந்த கிணறுகளைப் புனரமைப்பதற்கு இவர்களால் முடியவில்லை.

அத்துடன் தற்போது கடும் வரட்சியும் நிலவி வருகின்றது. இதனால் இந்தப் பிரதேசத்திலமைந்துள்ள நீர் நிலைகள் வற்றிய நிலையில் காணப்படுகின்றன. இதனால் பெரும் நீர்த்தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இவர்களின் அவல நிலையைக் கருத்தில் கொண்டு தொண்டு நிறுவனங்களாவது இவர்களுக்கு உதவ வேண்டுமென்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும். (க-500)

### அக்கராயனில் பொதுமண்டபம் அமைக்க கோரிக்கை

அக்கராயன்,ஏப்.2

கிளிநொச்சி, அக்கராயன் மத்திய பகுதியில் பொது மண்டப வசதியை ஏற்படுத்துமாறு இங்கு மீளக் குடியமர்ந்த மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். தற்போது பொது நிகழ்வுகள், கூட்டங்கள் யாவும் மர நிழல்களின் கீழேயே நடைபெற்று வருகின்றன என்று மக்கள் தெரிவித்தனர்.

# மெனிக்பாமில் சூறாவளி: பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர நிவாரணம்

வவுனியா, ஏப்.2

செட்டிகுளம் ஆனந்த குமாரசுவாமி இடைத்தங்கல் முகாமில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட மினி சுறாவளி மற்றும் பனிக்கட்டி மழை காரணமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மாற்று வீடமைப்பு மற்றும் அவசர நிவாரண உதவி என்பவற்றை வழங்குவதற்கு உடனடி ஏற்பாடுகள் மேற்கொள்வதற்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நலன்புரி முகாமுக்குச் சென்று சேதவிவரங்களைப் பார்வையிட்ட வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ரிசாத் பதியுதீன் மேற்படி உத்தரவைப் பிறப்பித்து அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உடனடியாக வேலைகளை ஆரம்பிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்த பதியுதீன் அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டதுடன் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வாழ்விட வசதிகள் உடனடியாக ஏற்படுத்தித் தரப்படும் என உறுதியளித்தார்.

இதனைத் தொடர்ந்து நேற்றுமாலை அந்தப் பகுதிக்கு இராணுவத்தினர் அழைக்கப்பட்டு உடனடியாக வீடுகளைத் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதாக உதயனின் பிராந்தியச் செய்தியாளர் அங்கிருந்தவாறு தெரிவித்தார். ஆனந்தகுமாரசுவாமி முகாமில் ஆயிரத்து 200 இற்கும் மேற்பட்ட வீடுகள் காற்றினால் தூக்கி வீசப்பட்டு முழு அளவில் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட மக்கள் வீடற்ற நிலையில் மர நிழல்களில் தமது உடைமைகளுடன்ஒதுங்கியுள்ளனர்.

தகரங்கள் தூக்கி வீசப்பட்ட நிலையில் மக்களின் தற்காலிக வீடுகள் சேதமடைந்து ஆனந்தகுமாரசுவாமி முகாம் குப்பை மேடாகக் காட்சியளிக்கிறது. அங்கிருந்த ஒரே ஒரு பாடசாலையும் முற்றாகச் சேதமடைந்துள்ளது. நேற்றைய தினமும் மழை மேகங்கள் சூழ்ந்திருந்ததால் மக்கள் மர நிழல்களின் கீழ் அச்சத்துடன் காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது. அத்தோடு நேற்றுமுன்தினம் பெய்த மழையால் நனைந்த தம் உடமைகளை மக்கள் ஆங்காங்கே வெயிலில் உலர்த்துவதையும் காண முடிந்தது.

இதேவேளை, பாதிக்கப்பட்ட மக்களை நேற்று மாலை வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் நேரில் சென்று பார்வையிட்டார்.

தம்மை கதிர்காமர் முகாமில் நல்ல நிலையில் உள்ள கொட்டகைகளுக்கு மாற்றி விடுங்கள், அல்லது சொந்த இடத்துக்கு அனுப்பி வையுங்கள் என பாதிக்கப்பட்ட மக்கள் அழிவுகளைப் பார்வையிடச் சென்ற அரச பிரதிநிதிகளிடம் இரஞ்சிக் கேட்டதையும் அவதானிக்க முடிந்தது.

முகாமுக்கு பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது. (10)



செட்டிகுளத்திலிருந்து பா.வசந்தன்

### காயமடைந்து சிகிச்சை பெறுவோர் விவரம்

வவுனியா, ஏப்.2

வவுனியாவில் நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட திடீர் மினி சூறாவளியால் செட்டிகுளம், ஆனந்தகுமாரசுவாமிமுகாம் முற்றாக சேதமடைந்துள்ளது. கதிர்காமர் முகாம் பகுதியளவில் சேதத்துக்குள்ளாகியது.

கடும் காற்று மற்றும் பனிக்கட்டியுடன் கூடிய மழை காரணமாக அங்கிருந்த ஆயிரத்து 200 இக்கும் மேற்பட்ட மக்கள் வீடுகளை இழந்து நிர்க்கதியாகினர். சம்பவத்தில் 20 பேர் காயமடைந்த நிலையில் செட்டிகுளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவ்வாறு செட்டிகுளம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருபவர்களின் விவரம் வருமாறு:

காளிமுத்து (வயது-55), சுதர்சினி (வயது-12), சாருஜன் (வயது-12), சசிக்குமார் (வயது-31), நிலக்ஷன் (வயது-17), ஜெயஸ்ரீ (வயது- 37), சுபாஜினி (வயது -9), பழனியம்மா (வயது-70), கதிரவேல்(வயது-81),அன்னலட்சுமி (வயது-55), மதிகலா (வயது-23), சுஜிகரன் (வயது-16), வினோதா (வயது -29), ஜெயதாஸ் (வயது- 48), விதுஷன் (வயது-21), அமராவதி (வயது-59), லதா (வயது-19), கவிப்பிரியா (வயது-10), பிரியந்தினி (வயது -10), ராஜேஸ்வரி (வயது- 48) ஆகியோரே காற்றின் காரணமாக தகரங்கள் தூக்கி வீசப்பட்டு, வீட்டு மரங்கள் முறிந்து வீழ்ந்து காயங்களுக்கு உள்ளாகி செட்டி குளம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (10)

# கூட்டமைப்புக்கு அனுமதி மறுப்பு

வவுனியா, ஏப்.2

மழையால் பாதிக்கப்பட்ட செட்டிகுளம் ஆனந்த குமாரசுவாமி இடைத்தங்கல் முகாமைப் பார்வையிடச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு அனுமதி மறுக்கப்பட்டதாக கூட்டமைப்பினர் உதயனுக்குத் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் காற்றுடன் கூடிய மழை காரணமாக ஆயிரத்து 200இக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்த நிலையில் செட்டி குளம் இடைத்தங்கல் முகாம் மக்கள் மரநிழல்களில் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களைப் பார்வையிடுவதற்கும் சேதவிவரங்களை அறிந்துகொள்வதற்கும் நேற்றுக்காலை கூட்டமைப்பைச் சேர்ந்த வன்னி மாவட்ட நாடளுமன்ற உறுப்பினர்களான வினோநோகராதலிங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி ஆகியோர் அங்குசென்றிருந்தனர். இதன்போது அந்த முகாமுக்குப் பொறுப்பான கேணல்தர இராணுவ அதிகாரி இவர்களை உள்ளே செல்ல அனுமதிக்கக் கூடாது என்று மேலிடத்தில் இருந்து தனக்கு உத்தரவு வந்துள்ளதாகவும் தெரிவித்தார். இதனை அடுத்து அங்கிருந்து திரும்பிய உறுப்பினர்கள் காயமடைந்து வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவரும் மக்களைப் பார்வையிட்டதோடு ஆறுதல் கூறி விட்டுத் திரும்பினர். (10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிழ்ந்தது கப்பல்

## பிலிப்பைன்ஸில் 100 பேரைக் காணோம்






மணிலா, ஏப்.2

பிலிப்பைன்ஸ் நாட்டில் சூலு கடற்பகுதியில் சொகுசுக் கப்பல் ஒன்று திடீரெனக் கவிழ்ந்ததில் 100 பேர் வரை காணாமற் போயுள்ளனர். ஏறக்குறைய ஆயிரத்துக்கும் அதிகமான பயணிகள் இந்தக் கப்பலில் பயணம் செய்தனர் என்று கூறப்படுகிறது.

நடுக்கடலில் இந்தக் கப்பல் பயணித்துக் கொண்டிருந்த போது திடீரென இயந்திரத்தின் 'புறப்லர்கள்' இயங்க மறுத்தன. அதனைச் சீர்செய்ய கப்பல் சிப்பந்திகளும் பொறியியலாளர்களும் பெரும் முயற்சி எடுத்தனர். இந்த நிலையில் இயந்திரம் தீப்பற்றி எரியத் தொடங்கியது. இந்தத் தீ கப்பல் எங்கும் பரவியதால் பயணிகள் செய்வதறியாது அங்கும் இங்கும் ஓடத் தொடங்கினர். இதனால் கப்பலின் சமநிலை தளம்பி அதிலிருந்து பயணிகள் அனைவரும் கடலில் தூக்கி வீசப்பட்டனர்.

இதன்போது மீட்புப் படையணிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து ஏராளமான பயணிகளை மீட்டு கரை சேர்த்தன. எனினும் இந்த விபத்தில் 100 இற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் காணாமற் போயுள்ளதாக பிலிப்பைன்ஸ் அரசு தெரிவித்துள்ளது. இவர்களை தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ள போதும் காணாமற்போன பயணிகளில் அநேகர் இறந்திருக்கலாம் என்றும் அஞ்சப்படுகின்றது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பா நாடுகளைச் சேர்ந்த ஆயிரம் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிக்கொண்டு குறித்த கப்பல் சூலு கடலில் பயணம் மேற்கொண்டிருந்தது.

அண்மையில் இதே போன்று கிரீஸ் நாட்டிலும் கப்பல் ஒன்று கவிழ்ந்திருந்தது. எனினும் அது கரையை அண்டிய பகுதியிலேயே கவிழ்ந்ததால் உயிரிழப்புகள் குறைவாக இருந்தன. எனினும் தற்போது கப்பல் கவிழ்ந்த இடம் ஆழமான கடற்பகுதி என்பதால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை,

குறித்த கப்பலில் பயணித்தவர்களில் 25 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்துள்ளது. எனினும் அது குறித்து உறுதிப்படுத்த பிலிப்பைன்ஸ் அரசு மறுத்து விட்டது.

(ங)

## மரண தண்டனையை கை விடாது ஜப்பான்

டோக்கியோ, ஏப்.2

மூன்று சிறைக்கைதிகள் தூக்கிலிடப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட நிலையில் மரண தண்டனையைக் கைவிடும் திட்டம் இல்லை என்று ஜப்பான் பிரதமர் ஜோசிஹிக்கோ நவ்டா தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தின் பின்னர் முதல் முறையாக அண்மையில் இந்த தூக்குத் தண்டனைகள் நிறைவேற்றப்பட்டன.

பெரியளவிலான குற்றங்கள் குறைவடையவில்லை என்று சுட்டிக்காட்டிய நவ்டா, மரண தண்டனையை உடனடியாக ஒழிப்பது கடினமான ஒன்று என்றும் அவர் மேலும் தெரிவித்தார். இவ்வாறான மரண தண்டனைகளுக்கு மக்களின் ஆதரவு உள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் குறிப்பாக ஜப்பானில் விதிக்கப்படும் மரண தண்டனைகள் மிகவும் கொடூரமானவை என மனித உரிமை குழுக்கள் குற்றஞ்சாட்டியுள்ளன. உலகின் பல நாடுகளும் மரண தண்டனையை ஒழிப்பதில் ஆர்வம் காட்டி வரும் நிலையில் ஜப்பான் அதிரடியாக மரண தண்டனை தொடரும் என்று அறிவித்துள்ளது.

## 19 தீவிரவாதிகள் பிரான்ஸில் கைது

பாரிஸ், ஏப்.2

பிரான்ஸ் நாட்டில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளில். இஸ்லாமியவாதிகள் என்று சந்தேகிக்கப்படும் 19 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இதன் போது துப்பாக்கிகள் உட்பட பல ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன.

பல்வேறு தாக்குதல்களில் 7 பேரைக் கொலை செய்த துப்பாக்கிதாரியான முஹமட் மொராவின் வாழ்விடமான தென்மேற்கு நகரான தொலிஸ் பகுதியிலேயே பலர் கைதாகியுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் இஸ்லாமிய கடும்போக்காளர் களைக் கைது செய்வதை இலக்காகக் கொண்ட பல நடவடிக்கைகளுக்குத் திட்டமிடப்பட்டிருப்பதாக பிரான்ஸ் நாட்டு ஜனாதிபதி சர்கோஸி தெரிவித்தார்.

முஹமட் மொர்ரா தனது அடுக்கு மாடிக் குடியிருப்பில் வைத்து பொலிஸாரால் கடந்த வாரம் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர், அவருடன் தொடர்புடையவர்களைத் தேடி வருவதாக அரச சட்டத்தரணிகள் தெரிவித்திருந்தனர்.

(ங)

# கடனட்டை தரவுகள் கசிவு

அமெரிக்காவின் மூன்று பிரபல கடனட்டை நிறுவனங்கள் பாதுகாப்புத் தரவுகளின் கசிவு குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளன.

பாதுகாப்புத் தரவுகளின் கசிவு காரணமாக கடனட்டை வைத்திருப்போரின் தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்பின்மை தொடர்பாக குறித்த நிறுவனங்கள் அறிவுறுத்தியுள்ளதாக பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

தமது கட்டமைப்புக்குள் எந்தவித அத்துமீறலும் இடம்பெறவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ள குறித்த நிறுவனங்கள், மூன்றாம் தரப்பு இவ்வாறான நடவடிக்கை மேற்கொள்வதாகத் தெரிவித்தன.

இவ்வாறான தரவுகள் நியூயோர்க்கில் வைத்து திருட்டுத் தனமான முறையில் பெறப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் தகவல் கசிவு காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை குறித்து எந்தவொரு நிறுவனமும் இதுவரை அறிவிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் கடனட்டை மூலம் கொடுப்பனவுகளைச் செய்யும் நிறுவனமொன்று இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக குறித்த நிறுவனத்தின் பங்குகள் 9 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ங)

## அதிர்ஷ்டம் 64 கோடி

அமெரிக்காவின் மிகப் பெரியலாட்டரியில் (அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில்) வெற்றி பெற்றவர்களை தேடும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

64 கோடி டொலர் பெறுமதியான இந்த லாட்டரியை மூன்று டிக்கட்டுக்கள் பகிர்ந்துகொள்கின்றன.

மேரிலாந்து, கன்சாஸ் மற்றும் இலினொய்ஸ் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த மூவருக்கே இந்த அதிர்ஷ்டம் கிடைத்திருக்கிறது. லாட்டரி சீட்டுகளுக்காக அமெரிக்கர்கள் 1.5 பில்லியன் டொலர்களைச் செலவிடுகிறார்கள்.

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் எவருக்கும் ஜாக்பொட் கிடைக்காத காரணத்தால், பரிசுத் தொகை அதிகரித்து இவ்வளவு பெரிய அளவை எட்டியிருக்கிறது

# ரஷ்ய உளவுத்துறைத் தலைவர் திடீர் மரணம்


மாஸ்கோ, ஏப்.2



சோவியத் யூனியனின் முன்னாள் தலைவர் லியோனிட் மர்மமான முறையில் திடீரென மரணமடைந்துள்ளார். இவர் மாஸ்கோவில் தனியாக வசித்து வந்தார். இவருடைய மனைவி ஏற்கனவே இறந்துவிட்டார். லியோனிட் தனது 77ஆவது பிறந்த நாளை மிக விமரிசையாக கடந்த 24 ஆம் திகதி கொண்டாடினார். மாஸ்கோ அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் தங்கியிருந்த லியோனிட், மர்மமான முறையில் நேற்று முன்தினம் இறந்து கிடந்தார். இதுகுறித்து பொலிஸார் தெரிவித்ததாவது:-

கைத் துப்பாக்கியால் தன்னை தானே சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டது முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. அவரது உடலுக்கு அருகில் கைத் துப்பாக்கி ஒன்று இருந்தது. தற்கொலைக்கான காரணம் தெரியவில்லை. எனினும், இது தற்கொலைதானா என்பதை உறுதிப்படுத்த தீவிர விசாரணை நடத்தப்படுகிறது - என்றனர்.

## தப்பி ஓடிய சாகச யானை



கவுன்டி கார்க், ஏப்.2

இந்திய சர்க்கஸ் யானை அயர்லாந்து வீதிகளில் புகுந்து அட்டகாசம் செய்ததால் மக்கள் அலறி ஓடினர். அயர்லாந்தின் கவுன்டி கார்க் நகரில் சர்க்கஸ் நடைபெற்று வருகிறது. இங்கு பேபி என்ற 40 வயது இந்திய யானையும் பல் சாகசங்களைச் செய்து பார்வையாளர்களை மகிழ்வித்து வந்தது. சர்க்கஸ் கூடாரத்தில் இருந்து சில நாள்களுக்கு முன்னர் திடீரென எப்படியோ தப்பிவிட்டது. யானையைப் பழக்கி வித்தை காட்டியவர்கள் அதை கவனிக்கவில்லை. கார்க் நகரின் முக்கிய வீதிக்குள் பேபி தப்பி ஓடியது. அதைப் பார்த்து மக்கள் அலறி அடித்து கொண்டு ஓடினர்.

யானையும் மிரண்டு போய் பிரபலமான கடைத்தொகுதி வழியாக ஓடியது. அதற்குள் கூடாரத்தில் பேபி இல்லாததைக் கவனித்த சர்க்கஸ் சாகச கலைஞர்கள் வெளியில் ஓடி வந்து தேடினர். அதற்குள் தகவல் கிடைக்க யானை இருந்த பகுதிக்கு ஓடி வந்தனர். பேபியை மிகுந்த சிரமப்பட்டு சமாதானப் படுத்தி மீண்டும் அழைத்து சென்றனர். இதனால் பெரும் பரபரப்பு நிலவியது. அதிர்ஷ்டவசமாக யாருக்கும் பாதிப்பில்லை. தற்போது பேபி சமாதானம் அடைந்து விட்டதாகவும், பாகனின் சொற்படி கேட்டு நல்லபிள்ளையாக இருப்பதாகவும் சர்க்கஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

## காவலுக்கு நாய்

சீனாவில் சிச்சுவான் மாகாணத்திலுள்ள சிலைகளைப் பாதுகாப்பதற்கு நவீன பொறிமுறைகள் பயனளிக்காததால் அவற்றைப் பாதுகாப்பதற்கு விசேட பயிற்சி அளிக்கப்பட்ட நாய்களைப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக சீனா அறிவித்துள்ளது.

# மின் விளக்குகளை அணைத்து விழிப்புணர்வு

புவி வெப்பமடைதல் மற்றும் பருவநிலை மாற்றங்கள் தொடர்பான விழிப்புணர்ச்சியை அதிகரிப்பதற்காக 5 ஆண்டுகளுக்கு முன்னர் புவிக்கான நேரம் என்ற தொனிப்பொருளில் சிட்னி நகரில் ஆரம்பிக்கப்பட்ட 'எர்த் அவர்' நிகழ்வு நேற்று 150 இற்கும் மேற்பட்ட நாடுகளில் கடைப்பிடிக்கப்பட்டது.

சுமார் நாலாயிரத்துக்கும் மேற்பட்ட நகரங்கள் கடந்த ஆண்டுகளில் இந்த விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து கொண்டுள்ளன.

மின்விளக்குகள் ஒளிமங் [illegible] களாவிய நிகழ்வுக்கான ஒத்துழைப்பு வெளிப்படுத்தப்படவுள்ளது.

எரிசக்தியை விரயமாக்காது பயன்படுத்துவதில் உலக மக்களின் பொறுப்புணர்வை எர்த் அடையாளப்படுத்துவதாக ஐ.நா.வின் தலைமைச் செயலர் பான் கி மூன் தெரிவித்தார். இதன் அடையாளமாக உலகின் பல நாடுகளிலும் உள்ள பிரபலமான இடங்களில் மின்விளக்குகள் அணைக்கப்படவுள்ளன.

ஆஸ்திரேலியாவிலுள்ள சிட்னி ஒப்பெரா ஹவுஸ், அமெரிக்காவின் எம்பயர் ஸ்டேட் பில்டிங், பிரான்ஸின் ஈபிள் கோபுரம் மற்றும் சீனா [illegible] உள்ளிட்ட பல இடங்கள் அர்த் அவர் நேரத்தை அனுஷ்டிக்கின்றன.

முதற்தடவையாக லிபியாவும் இந்த சர்வதேச சுற்றுச்சூழல் இயக்கத்தில் பங்கு பெறுகிறது. திரிப்போலியில் இளைஞர்கள் இணைந்து இந்த நிகழ்வை ஒழுங்கு செய்திருப்பதாக எர்த் அவர் இயக்கத்தின் இணை ஸ்தாபகர் அண்டி ரைட்லி தெரிவித்தார்.

எர்த் அவர் அனுஷ்டிப்பு தெற்கு பசிபிக் பிராந்தியத்தில் ஆரம்பித்து முடியவுள்ளது. இதற்காக முதலில் மின் விளக்குகளை அணைத்து சமோவா நாடு இந்த நிகழ்வை அனுட்டிக்கிறது.

இந்த இயக்கத்துக்கு சர்வதேச மட்டத்தில் வரவேற்பு இருந்தாலும், வெறும் அடையாளப்படுத்தும் நிகழ்வுகளால் எந்தவித முன்னேற்றமும் ஏற்படப்போவதில்லை என்பது விமர்சகர்களின் கருத்து. ஆனால், எப்போதும் அடையாள விழிப்புணர்வு நிகழ்வுகள் மூலமே சமூக ரீதியான மாற்றங்கள் ஏற்படுவது வழமை என்று எர்த் அவர் இயக்கத்தின் பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

வீடுகளிலும் தொழில் தளங்களிலும் ஒரு மணி நேரத்துக்கு மின்விளக்குகளை அணைத்து மக்கள் தமது ஒத்துழைப்பை வெளிப்படுத்தும் விதத்தில் இயற்கையைப் பாதுகாப்பதற்கான உலகளாவிய நிதியம் இந்த எர்த் அவர் நிகழ்வை ஒழுங்குபடுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கனில் கொலை வெறி

## பொலிஸ் சூடு; 9 பேர் சாவு




காபூல், ஏப்.2

ஆப்கானிஸ்தானில் தூங்கிக் கொண்டிருந்த சக பொலிஸ்காரர்கள் மீது திடீரென பொலிஸ்காரர் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 9 பேர் பரிதாபமாக இறந்தனர். ஆப்கானிஸ்தான் பக்திகா மாகாணத்தில் உள்ளது யாயா மாவட்டம். இங்கு பாதுகாப்புப் பணிக்காக ஆப்கன் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஆப்கனில் தங்கியுள்ள நேட்டோ படையினர் மீது ஆப்கன் ராணுவத்தினரும் பொலிஸாரும் திடீர் திடீரெனத் தாக்குதல் நடத்தி வருகின்றனர். கடந்த வியாழக்கிழமையும் நேட்டோ படையினர் மீது பொலிஸார் திடீரெனத் தாக்குதல் நடத்தினர். இது தொடர்பாக பொலிஸார் இருவர் கைது செய்யப்பட்டனர். இன்னொரு அதிகாரி தலைமறைவாகி விட்டார்.

ஆப்கன் பாதுகாப்பில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படை ஈடுபட்டுள்ளது. ஆனால், ஆப்கன் ராணுவத்தினர் பொலிஸார் அவர்களுக்கு எதிராக ஏன் தாக்குதல் நடத்தி வருகின்றனர் என்பது மர்மமாக உள்ளது. ஆப்கன் பொலிஸில் தலிபான் தீவிரவாதிகள் ஊடுருவி உள்ளதாகச் சந்தேகம் எழுந்துள்ளது. இந்த நிலையில், பக்திகா மாகாணத்தில் பொலிஸ்காரர் ஒருவர், தூங்கிக் கொண்டிருந்த சக பொலிஸ்காரர்கள் மீது திடீரெனத் துப்பாக்கிச் சூடு நடத்தினார். இதில் 9 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். வேறு எந்தத் தகவலும் வெளியிடப் படவில்லை. இதனால் ஆப்கனில் நேட்டோ படையினர் பதற்றம் அடைந்துள்ளனர்

## சர்ச்சையைக் கிளப்பிய பேராசிரியர் ராஜிநாமா



ஒளியை விட உப அணு துணிக்கைகள் வேகமாகப் பயணிப்பதாகத் தெரிவித்த பரிசோதனைக் குழுவின் தலைவர் தனது பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

அல்பிரட் ஐன்ஸ்டீனின் கோட்பாட்டுக்கு சவால் விடுக்கும் வகையில் பேராசியர் அன்டோனியோ எரிடியாட்டோ இந்த முடிவை வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில் ஒப்பேரா என்ற குறித்த பரிசோதனைக் குழுவிலுள்ள சில உறுப்பினர்கள் அவர் பதவி விலக வேண்டும் என்று கோரியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாத ஆரம்பத்தில் மீண்டும் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் நியூரினோக்கள் எனப்படும் உப அணுத் துணிக்கைகள் ஒளியை விட வேகமாகப் பயணிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்தாலியிலுள்ள குறித்த குழுவின் ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையை அடுத்து வெளியிடப்பட்ட இந்த முடிவு உலகில் உள்ள அனைவரையும் அதிர்சிக்கு உள்ளாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாக். நாடாளுமன்றம் மீதான தாக்குதல் முயற்சி முறியடிப்பு

### கைதான தீவிரவாதிகள் தெரிவித்த தகவலை அடுத்து

இஸ்லாமாபாத்,ஏப். 2

பாகிஸ்தானின் நாடாளுமன்றம் மீது தீவிரவாதிகள் நடத்த இருந்த தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இஸ்லாமாபாத்தில் செய்தியாளர்களிடம் பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரகுமான் மாலிக் நேற்றுமுன்தினம் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் கடந்த 17 ஆம் திகதி பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி உரையாற்றினார். அப்போது நாடாளுமன்றத்தைத் தாக்க தீவிரவாதிகள் திட்டமிட்டிருந்தனர். வடக்கு வாரிஸ்தானின் மிரான்ஷா பகுதியில் கைது செய்யப்பட்ட தீவிரவாதிகளிடம் நடந்த விசாரணையில் இது தெரியவந்தது. அவர்களுக்கு உதவியதாக வெளியுறவு அமைச்சக ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சரியான நேரத்தில் இந்த சதி முறியடிக்கப்பட்டதால் நாடாளுமன்றத்துக்கு ஏற்பட இருந்த பெரும் அபாயம் தவிர்க்கப்பட்டது - என்றார் அவர்.

## ஹிலாரி – சவூதி மன்னர் சந்திப்பு



உலகளாவிய எண்ணெய் சமநிலை குறித்து அமெரிக்கச் செயலாளர் ஹிலாரி கிளிண்டன் மற்றும் சவூதி அரேபிய மன்னர் ஆகியோர் கலந்துரையாடியுள்ளனர்.

1940 ஆம் ஆண்டுகளில் இருந்து உலகில் முன்னிலை எண்ணெய் ஏற்றுமதி நாடான சவூதி அரேபியா, அமெரிக்காவுடன் நெருங்கிய உறவுகளைப் பேணி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பிராந்திய கொள்கைகளிலுள்ள வேறுபாடுகள் மற்றும் பிளவுகள் குறித்தும் இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஈரானின் எண்ணெய் இறக்குமதிக்கு அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் தடை விதித்துள்ள நிலையில், உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனிடையே சவூதி அரேபிய வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட ஏனைய அதிகாரிகளையும் அமெரிக்கச் செயலாளர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## சீன ஆலைகளை மேப்படுத்துகின்றது அப்பிள்

ஐபோன் மற்றும் ஐ-பாட்களைத் தயாரிக்கும் சீனாவில் உள்ள தனது முக்கியமான விநியோக நிலையம் ஒன்றில் பணி நிலைமைகளை மேம்படுத்த அப்பிள் நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளதாக அமெரிக்க தொழிலாளர் உரிமைகளுக்கான அமைப்புத் தெரிவித்தது.

சீனாவின் ஃபொக்ஸ்கொன் என்னும் இடத்தில் உள்ள இந்த ஆலையில் தொழிலாளர்கள் பெரும் சுகாதார மற்றும் பாதுகாப்பு ஆபத்துக்களை எதிர்கொள்வதாகவும், அவர்கள் அங்கு அளவுக்கு அதிகமான மணித்தியாலங்கள் பணியாற்ற வைக்கப்படுவதாகவும், அமெரிக்காவின் ஃபெயார் லேபர் நிறுவனம் நடத்திய புலனாய்வுத் தகவலில் தெரியவந்துள்ளது.

கிழக்கு சீனாவில் உள்ள இந்த ஃபொக்ஸ்கொன் ஆலையில் நடந்த ஒரு வெடி விபத்தில் இருவர் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து இந்தப் புலனாய்வு நடவடிக்கை நடத்தப்பட்டது. இந்தத் தகவலில் அங்கு பலர் தற்கொலையும் செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த புலனாய்வு அறிக்கை வெளியானதை அடுத்து அப்பிள் நிறுவன தலைமை நிறைவேற்று அதிகாரி அந்த ஆலைக்குப் பயணம் செய்திருந்தார்

## 16 இணையங்களுக்கு சீனாவில் தடை

சீனாவில் 16 இணையத் தளங்கள் தடைசெய்யப்பட்டுள்ளதுடன் இதனுடன் தொடர்புடைய ஆறு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று அந்தநாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

பீஜிங்கில் வழமைக்கு மாறாக, இராணுவ வாகனங்களின் நடமாட்டம் அதிகளவில் இருப்பதாக போலியான தகவலை வெளியிட்டதன் காரணமாகவே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனை சீனாவில் இணையத் தகவல் நிலையம் உறுதிப்படுத்தியுள்ளதாக அந்தநாட்டு ஊடகத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.


**கிளி / சயன்ஸ் அக்கடமி**

A/L 2014 கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பம்

இரசாயனவியல் - S. சண்
பௌதிகவியல் - S. தவபாலன்
உயிரியல் - T. லிசோ
இணை.கணிதம் - S. சிறிதரன்

04.04.2012
புதன்
மு.ப 11.00 மணி

ஸ்ரீ நாகதம்பிரான் ஒழுங்கை, கனகபுரம் வீதி, கிளிநொச்சி 0772417239

**விற்பனைக்கு**

பளையில் ஜேசி இன கறவை மாடுகள் விற்பனைக்கு உண்டு. பார்வையிடும்
நேரம்: காலை 7 - 8
மாலை 4 - 6 மணிமட்டும்
தொடர்பு: 077 900 1382
077 324 7192

**WANTED**

**POST OF SCHOOL LIBRARIAN**

Applications are invited from G.C.E. (A/L) qualified, below 50 years of aged Females for the above post. Preference would be given to those who have followed any librarian course.

**Applications closes on 15th April, 2012.**

Only shortlisted candidates will be considered for an Interview.

**Principal,**
Chundikuli Girls' College, Jaffna.

**வாகனங்கள் விற்பனைக்கு**

1) ISUZU 250 FULL BODY ALUMINIUM 14½' BRAND NEW, WHITE COLOUR
மொடல் NKR 66 L NP LG xxxx
2) CHANA CHUTTA FULL BODY ALUMINIUM 10½' NP LG xxxx
தொடர்புகளுக்கு :077 7721740

**காணி விற்பனைக்கு**

கொக்குவில் மேற்கு, பூனாறி மரத்தடிக்கு அருகில் உள்ள இரண்டு பரப்பு காணியில் கிணறு, சுற்றுமதில் மற்றும் சகல வசதிகளு டன் கூடிய நல்ல நிலையில் உள்ள வீடொன்று உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:
0212222537, 0750413579, 0262220259.

**ஏற்றமுற வாழ்த்துகிறோம்**



யாழ்.பல்கலைக்கழகத்தில் உதவிப் பதிவாளராகப் பதவியுயர்வு பெறும் எமது நண்பன் - மீசாலையூர்

திரு. சிவபாதசுந்தரம் பிரணவன்

அவர்கள் மென்மேலும் தகைமைகள் பெற்று ஏற்றமுற வாழ்த்துகிறோம்.

நிதிக்கிளை,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்

அன்புடன் வாழ்த்தும் நண்பர்கள் :
ச.நித்தியானந்தன்,
ச.சசிக்குமார், இ.வசீகரன்,
கு.லவன்

உங்கள் வீட்டு விழாக்களுக்கும் காரியாலயங்களுக்கும் உங்கள் ரசனைப்படி வீடுகளுக்கு வந்து அளவெடுத்து நவீன டிசைன் [Design] களில் கேட்டின் தைத்து தரப்படும். கேட்டின் Bar உடன் Fitting ம் செய்து தரப்படும்.





IDEAL CURTAENS
கற்பகபிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.
T.P: 077 9947466 / 0773013239

(16143) (6,9,10)

ஓம் ஸ்ரீ சாய்ராம்

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



எமது குடும்ப நண்பர், ஆயுர்வேத சித்த வைத்திய கலாநிதி திருமதி விஜயகுமாரி தங்கராசா வின் செல்வப் புதல்வியும் யாழ். வேம்படி உயர்தர மகளிர் கல்லூரி மாணவியுமான

**செல்வி வைஷ்ணவி**

2011 ஜி.சி.ஈ சாதாரண தர தமிழ் மொழி மூலப் பரீட்சையில் 9 பாடங்களிலும் 'A' சித்தி பெற்றமையையிட்டு உளமார பாராட்டுவதோடு மேலும் கல்வித்துறையில் பல விசேட சித்திகளைப் பெற்று நலமுடன் வாழ சாயீஸ்வரனின் கமல மலர் பாதங்களை வேண்டி வாழ்த்துகின்றோம்.

[illegible], நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பகவான் மருந்தகம்,
குடும்பத்தினர்.

(16354) (6,9,10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்முனை மாநகரசபையில் சமயா சமய மற்றும் மாற்று நிலை அடிப்படையில் கடமையாற்றியோருக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வில் கல்முனை மாநகர முதல்வர் சிராஸ் மீராசாஹிப் ஒருவருக்கு நியமனக் கடிதம் வழங்குகின்றார்.

# கேகாலையில் வாகன விபத்து இருவர் சாவு: 6 பேர் படுகாயம்

கண்டி,ஏப்.2

கண்டி - கொழும்பு பிரதான வீதியில் கேகாலை மில்லன்கொட எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அண்மையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

பாணந்துறையில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த வானுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் வானில் பயணித்த சாரதியும் மற்றுமொருவரும் கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் பஸ்ஸில் பயணித்த நான்கு ஆண்களும் இரு பெண்களும் காயமடைந்துள்ளனர். இவர்கள் கேகாலை வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இந்த விபத்துத் தொடர்பில் கேகாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# நவகமுவ பகுதியிலும் விபத்தில் 2 பேர் சாவு

நவகமுவ,ஏப்.2

நவகமுவ - நவநுவர கொத்தலாவல பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.40 மணிக்கு இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

பியகமவில் இருந்து ஆடை தொழிற்சாலை பெண் ஊழியர்களை ஏற்றிவந்த பஸ்ஸும் கடுவளை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த காரும் ஒன்றுடன் ஒன்று மோதியதில்இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் காரில் பயணித்த நால்வர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அதில் இருவர் தலங்கம மற்றும் நவகமுவ வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டு உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் காயமடைந்த 17 வயது சிறுவனும், 22 வயது பெண்ணும் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

பஸ்ஸில் பயணித்த ஐந்து பெண்களுக்கு சிறு காயம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நவகமுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# கிழக்கில் கப்பம் கோரும் பிள்ளையான் குழு

## 'திவயின' பத்திரிகை குற்றச்சாட்டு

அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான் குழு கப்பம் கோரி வருவதாக 'திவயின' பத்திரிகை குற்றம் சாட்டியுள்ளது.

வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில், கிழக்கு மாகாணத்தில் இயங்கிவரும் அரசசார்பற்ற நிறுவனங்களிடம் இவ்வாறு கப்பம் கோரப்படுவதாக 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

''பிள்ளையானும் அவரது சகாக்களுமே இவ்வாறு கப்பம் கோரி வருகின்றனர். கப்பம் கோரல் அச்சுறுத்தல்களினால், பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியவில்லை'' என்று அரசசார்பற்ற நிறுவனங்கள் விசனம் தெரிவித்துள்ளன.

கப்பம் வழங்காவிட்டால் கிழக்கில் எவ்வித பணிகளையும் மேற்கொள்ள இடமளிக்கப்போவதில்லை என்று பிள்ளையானும் அவரது சகாக்களும் எச்சரிக்கை விடுத்துவருவதாக 'திவயின' தெரிவித்துள்ளது.

''மட்டக்களப்பில் அமைந்துள்ள ஓர் அரசசார்பற்ற நிறுவனத்துக்கு பிள்ளையானும், அவரது சகாக்களும் தொலைபேசியில் கப்பம் கோரி மிரட்டல் அழைப்புக்களை விடுத்து வருகின்றனர். சில அரசசார்பற்ற நிறுவனங்கள் வருடாந்தம் பில்லியன் கணக்கான ரூபாவை கிழக்கு அபிவிருத்திப் பணிகளுக்காகச் செலவிட்டு வருகின்றன.

ஆயுததாரிகள் சகிதம் பயணம் செய்யும் பிள்ளையான் அரசசார்பற்ற நிறுவனங்களின் பணிகளுக்கு பெரும் தடையாக உள்ளார்'' என்று திவயின பத்திரிகை தெரிவித்துள்ளது. . (ச)

# தலைவரானால் பொறுப்பாக நடக்க வேண்டும்

## திகாம்பரம் எம்.பி. தெரிவிப்பு

நுவரெலியா,ஏப்.2

ஒரு கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டால் பொறுப்பாக நடந்து கொள்ள வேண்டும். இந்தப் பதவிக்கு வருவதற்கு வாக்குப்போட்டு வெற்றியடைய வைத்த மக்களின் நிலை என்ன என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும் என்று நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி. திகாம்பரம் தெரிவித்தார்.

இ.தொ.கா தலைவர் ஆறுமுகம் தொண்டமானின் இராஜினாமா தொடர்பில் கருத்துத்தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசிலிருந்து விலகுகிறேன் என்று கடந்த ஒரு வாரமாகவே தெரிவித்த இ.தொ.கா. தலைவர் ஆறுமுகம் தொண்டமானின் நாடகம் இந்த நாட்டில் அரங்கேறியது. ஏன் இந்த நாடகம்? இப்படிப்பட்டவர்களை மலையக மக்களுக்கு இப்போது நன்றாகத் தெரியும். தனது சுயநலத்துக்காக மலையக மக்களை அடகு வைக்கக் கூடாது.

நாங்கள் எப்போதும் மக்கள் பக்கமே. மலையக மக்களை யாரேனும் ஏமாற்ற முற்பட்டால் நாம் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். தகுந்த பதிலடி கொடுப்போம். அரசியல் செய்வதற்கென்று ஒரு தகுதி வேண்டும். எல்லோரும் அரசியல் செய்ய முடியாது- என்றார். (ச)

கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No.1 பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

குறிப்பு: எம்மிடம் புறொயிலர் குஞ்சுகள் கொள்வனவு செய்பவர்களிடம் திரும்பவும் இறைச்சிக்கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.

தொடர்பு:

நல்லூர் பாம் சென்றர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 0212226944
நல்லூர் பாம் சென்றர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி. 0776225944
சுட்டி பாம் சென்றர், வட்டுக்கோட்டை 0778996085

உங்களுக்கு சுத்திகரிப்புத் தேவைகளில் பிரச்சினையா?

உங்களுக்கான எமது சேவைகள்

நிறுவனங்கள், வீடு, ஹோட்டல், Tiles, அல்ஹபோன் பார்டிஷன், ஷோ றூம், Show Room Glass, Floor Polishing / Vaccine / Carpet Shampoo போன்ற சுத்திகரிப்புச் சேவையைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

Specialized Janitorial Services

தொடர்பு: இல. 536/1 கே.கே.எஸ். வீதி, மனோகராச் சந்தி,யாழ்ப்பாணம்.
T.P: 021 4921108, 0777286069

மணமகள் தேவை

யாழ். கௌரவ றோமன் கத்தோலிக்கப் பெற்றோர் தமது 39 வயதுடைய கொழும்பில் கல்வி கற்று நல்ல வருவாயுடன் சுயதொழில் புரியும் மகனுக்குத் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர்.

தொடர்பு: 078 616 9637

யாழ்ப்பாணக் கல்லூரியினர் வழங்கும் ஈஸ்டர் நிகழ்வு

பஜனை - பாடுகளின் காட்சி - உயிர்ப்பு

தலைப்பு : ''அவலத்தில் மீட்பு''
இடம் : ஒட்லி மண்டபம் யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.
காலம் : 08.04.2012 மாலை - 4.30 மணி

உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(C207) (6,9,10)
அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி.

# 45 ஆம் நாள் நெஞ்சை விட்டு நீங்காத நினைவு

தாயின் அணைப்பில் 31 ★ 07 ★ 1975

இறைவனின் அணைப்பில் 18 ★ 02 ★ 2012



நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காக தன் உயிரையும் கொடுப்பான்

**சிங்கராசா றஞ்சித் மரியதாஸ் (இந்திரன்)**

(ரிங்கர் - பமிலா கராஜ்)

அன்பிற்கு அடிச்சுவடாய்
இல் வாழ்வில் இமயமாய்
ஊர் போற்றும் உத்தமனாய்
கடமைக்கு கண்ணியமாய்
வாழ்ந்தாய் ஐயா!

தாயின் வயிற்றில் கடைசியாய்ப் பிறந்தாலும் அண்ணன் போல் எங்களை நீ வழிநடத்தினாயே தம்பி. இன்று உன்னை இழந்து தாய் இல்லாப் பிள்ளைபோல் தவிக்கின்றோம் ஐயா! அக்கா, அண்ணா அண்ணி என்று நீ சொல்லும் ஒவ்வொரு வார்த்தைகளும் எம் காதில் ஒலித்துக் கொண்டே இருக்கும். இன்று உன்னை விதிகொண்டு போனது ஏனோ நீ எங்கு சென்றாலும் உன் புன் சிரிப்பும் இனிமையான நினைவுகளும் என்றும் வாழும் எம்முடன்.

சேர்ந்த உறவும் இணைந்த உள்ளமும் தொடர்ந்து வாழும் என்றுமே.

சி. சந்திரன் (சரா-கராஜ்)
தொ.பே. 077 9337103
11/1, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

உன்பிரிவால் தவிக்கும் உன் உறவுகள்
தாய், அண்ணன்மார், அக்காமார், மச்சான்மார்,அண்ணிமார், பெறாமக்கள், மருமக்கள் மற்றும் உறவினர்கள்

(16335) (45. 9.7)

பரந்தன் நகரில்

★ ஊர்க்கோழிக்குஞ்சு
★ பயன்தருமரங்கள்
★ பூக்கன்றுகள்
★ பூச்சாடிகள்

மற்றும்

வீட்டின் செல்லப்பிராணிகளான வர்ண மீன்கள், பறவைகள், முயல், நாய்க்குட்டி என்பவற்றைப் பெற்றிட

நித்தி அக்கூறியம்
2ஆம் ஒழுங்கை,
குமரபுரம், பரந்தன்.
021 7903419 / 0718675557

O/L DAY CLASSES

ஏப்ரல் 04 இல் ஆரம்பமாகிறது

Irupalai, Kopay.

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 11 ★ 05 ★ 1966

ஆண்டவன் அடியில் 25 ★ 03 ★ 2010

*அமரர் கந்தையா கிருஸ்ணகுமார் (பிரான்ஸ்)*

திதி : பூர்வபக்க ஏகாதசி (02.04.2012)

முதலாய் முழுநிலவாய் உன்
புன்னகை பூத்தமுகம் எங்கே எனத்தாய்தேட
புகழாய் உனைவளர்த்த சிறிய தாயார் உனை நாட
எம் திசைகாட்டி மரமே ஏன் அடியோடு சரிந்தீர் என சோதரர் புலம்ப
வாழ்க்கைப் பயணத்தில் பாதிவழி வந்தீர்கள் மீதி வழி முடியவில்லை
புலம்புகின்றாள் மனைவி மழைநீரில் நனைந்தாலே தவிப்பீர் அப்பா
விழிநீரில் எமை வீழ்த்தி தொலைந்தீரே என மகள் புலம்ப
இரண்டாண்டுகள் காற்றாய்ப் பறந்ததய்யா குதூகலம் இழந்தோம்
வாழ்வின் வசந்தத்தைத் தொலைத்தோம் மீண்டும் இவ்வுலகில்
பிறப்பீர்கள் எங்கள் கவலைகள் தீர்ப்பீர்கள்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

1 ஆம் வட்டாரம், நயினாதீவு

பிரிவுத்துயரில்
தாய், மனைவி, மகள்
உறவுகள்

(16272)(6-9-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு பல்கலை மாணவர் 25 பேர் உணவு நஞ்சானதால் பாதிப்பு

மட்டக்களப்பு,ஏப்.2

கிழக்குப் பல்கலைகழக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவக கல்லடி வளாகத்தின் மாணவர்கள் 25 பேர் திடீர் சுகவீன முற்ற நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை வைத்திய சாலைகளில் அனுமதிக்கப் பட்டனர்.

விடுதியில் தங்கியுள்ள இந்த மாணவர்கள் கற்கைகள் நிறுவக உணவுவிடுதியில் உணவு உட்கொண்ட போதே இவ்வாறு விஷமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதர் மற்றும் நாவற்குடா பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆகியோர் ஸ்தலத்துக்குச் சென்றுவிசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்த உணவு விடுதியை நிரந்தரமாக மூடிவிடுமாறு நிறுவகத்தின் நிர்வாகம் உத்தரவிட்டுள்ளதாக பல்கலைகழக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை மற்றும் கற்கைகள் நிறுவக சுகாதார நிலையம் போன்றவற்றில் சிகிச்சை பெற்ற மாணவர்கள் அன்றையதினமே மீண்டும் விடுதிக்கு திரும்பியுள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

(ஒ-10-31)

# படகுத் துறை இல்லை

### அம்பாறை மீனவர்கள் பெரும் பாதிப்பு

**30 ஆண்டுகளில் அங்குரார்ப் பணங்கள் பல நடந்தும் நிர்மாண நடவடிக்கைகள் இதுவரை நடைபெறவில்லை.**

அம்பாறை,ஏப்.2

அம்பாறை மீனவர்கள், தங்களது மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கான படகுத்துறைமுகம் ஒன்று இல்லாததால் பெரும் சிரமங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கின்றனர்.

படகுத் துறைமுகம் இல்லாததால் தமது இயந்திரப் படகுகளுக்கான எரிபொருள்கள், ஐஸ் போன்ற அவசியப்பொருள்களை படகு மூலம் நாளாந்தம் கொண்டு செல்லவேண்டிய நிலை காணப்படுவதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

30 வருட காலமாக ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக சாய்ந்தமருது தோனா என்னும் இடத்தில் படகுத்துறைமுகம் அமைத்துத் தருவதாக சிலர் வாக்குறுதிகளை தொடர்ச்சியாக வழங்கியும் இதுவரை எந்த நடவடிக்கையும் இடம்பெறவில்லை என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

இந்தவிடயம் தொடர்பாக அம்பாறை மாவட்ட கரையோர ஆழ்கடல் மீன்பிடித் தொழிலாளர் சங்கத் தலைவர் எம்.எஸ்.ஏ.நஸீர் கூறியதாவது:-

1982 ஆம் ஆண்டு முதல் இன்று வரையும் முன்னாள் அமைச்சர்கள் தொடக்கம் தற்போதைய அமைச்சர்கள் வரை சாய்ந்தமருதில் படகுத் துறைமுகத்தை அமைப்பதற்கான அங்குரார்ப்பண நிகழ்வுகளை நடத்தியுள்ளனர். ஆனால் இன்று வரை துறைமுக நிர்மாண நடவடிக்கைகள் நடைபெறவில்லை.இதற்காக வெளிநாடுகளும் நிதி உதவிகளை வழங்கி உள்ளது.

படகுத்துறைமுகம் ஒன்று இல்லாததால் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலாளர்கள், கடல்கொந்தளிப்பு காணப்படும் காலப்பகுதியில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத நிலை காணப்படுகிறது.

சிறிய படகுகள் மூலம் அத்தியாவசியப் பொருள்களை இயந்திரப்படகுகளுக்குக் கொண்டுசெல்லும் போது படகுகளும் பொருள்களும் சேதமடைவதுடன், உயிர்ச்சேதங்களும் ஏற்படுகின்றன. அதுமட்டுமன்றி இந்தத்தொழில் மூலம் தமது அன்றாட வாழ்வாதாரத்தை கொண்டுசெலுத்தும் சுமார் ஐயாயிரம் குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன.

மீனவர்கள் சிறிய படகுகளில் சென்றே இயந்திரப் படகுகளில் தொழிலுக்காக செல்கின்றனர். இதனால் அவர்களின் உடல் உழைப்புக்களும் வீணடிக்கப்படுகின்றன. எனவே பொறுப்பு வாய்ந்த அரசியல் பிரமுகர்களும், அதிகாரிகளும் எங்களது படகுத் துறைமுகத் தேவையை நிவர்த்தி செய்யத் துரிதமாக முன்வரவேண்டும்- என்றார். (ச)

## ஓட்டோ பள்ளத்தில் வீழ்ந்து ஒருவர் சாவு; இருவர் படுகாயம்

நுவரெலியா,ஏப்.2

நுவரெலியா- பதுளை பிரதான வீதியில் ஓட்டோ ஒன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் இறந்ததுடன் மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

ஓட்டோ தனது கட்டுப்பாட்டை இழந்து 11 மீற்றர் பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தவிபத்தில் படுகாயமடைந்த இரண்டு பேரும் நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்



அமரர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் 114ஆவது பிறந்ததினம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. திருகோணமலை நகரசபைத் தலைவர் க.செல்வராசா மற்றும் திருகோணமலை மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் ஆகியோர் செல்வாவின் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துகின்றனர்.

## சித்தாண்டி ஆலய புனரமைப்புக்கு ரூ.4 லட்சம் பிள்ளையான் உதவி

சித்தாண்டி,ஏப்.2

மட்டக்களப்பு, சித்தாண்டி பெரியதம்பிரான் ஆலயத்தின் புனர்நிர்மாணப் பணிகளுக்காக கிழக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் 4 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

சித்தாண்டி பெரிய தம்பிரான் ஆலயம் தற்போது புனர்நிர்மானம் செய்யப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை ஆலயத்துக்குச் சென்ற கிழக்கு முதல்வர் ஆலயத்துக்கான சிலைகளை வடிவமைப்பதற்காகக் குறித்த நிதியை வழங்கியிருந்தார்.

இதேவேளை முதலமைச்சர் கிராம மக்களுடனும் கலந்துரையாடி அவர்களது தேவைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார். இந்தப் பயணத்தின்போது, சித்தாண்டி பிரதேசத்தின் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் இணைப்பாளர் தியாகராஜா, செயலாளர் சுந்தரலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஒ-10)


# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில்
10.12.1948

05.02.1954



ஆண்டவன் நிழலில்
28.03.2007

திதி:02.04.2012
(ஏகாதசி)

## அமரர் வைரமுத்து சிவகணேசதாசன்
## திருமதி சறோஜினி சிவகணேசதாசன்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி, சர்மிளா றேடேர்ஸ், மற்றும் கபிலன் றான்ஸ்போர்ட், முன்னாள் உரிமையாளர்கள்

*எங்கள் அன்புத் தெய்வங்களே!*
*ஆண்டுகள் ஐந்தென்ன, எம் வாழ்நாளின் அந்தம் வரை*
*உங்களது நினைவுகளை எம் மனதில் சுமந்திருப்போம்*
*காலதேவன் உம் உயிரை ஒருசேரக் கவர்ந்திட்டான்*
*கண்களிலே நீர் கூட்டிக் கலங்கியே நிற்கின்றோம்*
*மீண்டும் பிறப்பெடுத்து எம்மிடம் நீர் வந்திடுவீர்*
*ஆண்டவன் மனதிரங்கின் எம் ஆசை சித்திக்கும்*

சென்னையிலுள்ள எமது இல்லத்தில் இன்று (02.04.2012) திங்கட்கிழமை எமது பெற்றோரின் நினைவாக ஆத்மசாந்திப்பிரார்த்தனை மேற்கொள்ளும் அதேவேளை, எமது அன்புத் தெய்வங்களின் ஆத்மாக்கள் சாந்திபெற அருளுமாறு இன்றைய நாளில் ஆண்டவனைப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களைப் பணிவோடு வேண்டிக் கொள்கின்றோம்.

தொலைபேசி இலக்கங்கள்:-
0091 - 9710417399 - சென்னை
0091 - 044 - 24763540 - சென்னை
0044 - 7405094455 - லண்டன்

**மகன்** - **சர்வானந்தன்** (குட்டிமணி - லண்டன்).
**மகள்மார்** - **சர்மிளா** - (சென்னை), **தர்சினி** - (யாழ்ப்பாணம்) ,
**மருமக்கள்** - **சிவகுமார்**- (பிரான்ஸ்), **பவக்குமார்** - (யாழ்ப்பாணம்)
**பேரப்பிள்ளைகள்:- கபிலன், தாட்சாயினி** (சென்னை).
**தஜிவனன், ரதுர்சி, மதிஷன்** (யாழ்ப்பாணம்).

(/284)(2-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ.தி.மு.கவில் மீண்டும் சசிகலா?

சென்னை, ஏப்.2

தமிழக முதல்வர் ஜெயலலிதா, தனது தோழி சசிகலாவுக்கு எதிராக எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகளை ரத்துச் செய்வதாக அறிவித் துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்ததாவது:

சசிகலா அளித்துள்ள விளக்கத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். கடந்த டிசெம்பர் 19 ஆம் திகதி சசிகலா மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்படுகிறது.



அதே சமயத்தில், நடராஜன், திவாகர், தினகரன், பாஸ்கரன், சுதாகரன், டாக்டர் வெங்கடேஷ், ராமச்சந்திரன், ராவணன், அடையாறு மோகன், குலோத்துங்கன், ராஜராஜன், மகாதேவன், தங்கமணி, கலியபெருமாள், பழனிவேல், தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தி, சுந்தரவதனம், சந்தானலட்சுமி சுந்தரவதனம் மற்றும் வைஜெயந்தி மாலா ஆகியோர் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் எந்த மாற்றமும் இல்லை; அந்த நடவடிக்கை அப்படியே தொடரும். கட்சித் தொண்டர்கள் யாரும் இவர்களுடன் எவ்வித தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்- என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெயலலிதாவின் இந்த அறிக்கையைத் தொடர்ந்து, அ.தி.மு.க.வில் மீண்டும் சசிகலா உறுப்பினராகியுள்ளார்.

இதேவேளை கடந்த 28 ஆம் திகதி சசிகலா வெளியிட்ட அறிக்கையில், அ.தி.மு.க. நலனுக்கு எதிராகவும் ஜெயலலிதாவுக்கு எதிராகவும் மேற்கொள்ளப்பட்ட அந்த நவடிக்கைகள், 24 ஆண்டுகள் வாழ்ந்த ஜெயலலிதாவின் இல்லத்திலிருந்து வெளியே வந்த பின்னர் தான் தனக்குத் தெரிய வந்ததாகவும் சகிகலா குறிப்பிட்டிருந்தார்.

கடந்த டிசெம்பர் மாதம், சசிகலா மற்றும் அவரது உறவினர்களை அ.தி.மு.கவின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்தும் நீக்க ஜெயலலிதா உத்தரவிட்டார்.

அதைத் தொடர்ந்து, சசிகலா கணவர் நடராஜன், உறவினர் ராவணன் உள்ளிட்டோர், நில அபகரிப்பு, பண மோசடி உட்படப் பல்வேறு குற்றச் சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

மேலும், கட்சியிலிருந்து நீக்கப்படுவதற்கு முன்பு, ஜெயலலிதா வுக்குத் தெரியாமல் கட்சி மற்றும் ஆட்சி நிர்வாகங்களில் அவர்கள் பெருமளவுஆளுமைசெலுத்தி வந்ததாகவும் குற்றச்சாட்டுகள் உள்ளன. (வ)

# உலக அழகிப் போட்டிக்கு சென்னைப் பெண் தெரிவு





உலக அழகிப் போட்டிக்கான இந்திய அழகியாக சென்னையைச் சேர்ந்த ரோஷல் மரியராவ் தெரிவு செய்யப்பட்டுள்ளார். எதிர்வரும் ஜூலை மாதம் 14 ஆம் திகதி சீனாவில் நடைபெறவுள்ள சர்வதேச அழகிப் போட்டியில், கலந்து கொள்வதற்கான இந்திய அழகிகளின் தேர்வு போட்டி மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் இந்திய அழகியாக சென்னை பெண் ரோஷல் மரியராவ்வெற்றிபெற்றுள்ளார்.

சென்னை, தியாகராய நகரைச் சேர்ந்த ரோஷல், யு.எப்.எக்ஸ். தொலைக் காட்சியில் தொகுப்பாளராக பணியாற்றி வருகின்றார். எம்.ஓ.பி. வைஷ்ணவா கல்லூரியில் பட்டப் படிப்பை முடித்தபின், மொடலிங்தொழிலில் ஈடுபட்டதாகவும், அழகி பட்டம் வெல்வது என்பது தனது நீண்டநாள் கனவு என்றும் ரோஷல் குறிப்பிட்டார்.

மேலும் இவருக்கு வாழ்த்துக்கள் குவிந்துகொண்டே இருக்கின்றன. இதனால் மகிழ்ச்சி அடைந்திருக்கும் ரோஷல், எதிர்வரும் ஜூலை மாதம் 1 ஆம் திகதி சீனாவில் நடைபெறும் சர்வதேச அழகிப் போட்டியில் கலந்து கொள்கின்றார். அந்தப்போட்டியிலும் தான் தெரிவாகி, சர்வதேச அழகி பட்டத்தை வெல்வேன் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார் ரோஷல். (வ)

# கண்டம் விட்டு கண்டம் பாயும் அக்னி-5 ஐ ஏவ இந்தியா தயார்


ஐந்தாயிரம் கிலோ மீற்றர் தூரம் சென்று தாக்கும் அக்னி -5 ஏவு கணையை இன்னும் ஓரிரு வாரத்தில் ராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டு மையம் ஏவி சோதனை செய்யவுள்ளது. இதன் மூலம் கண்டம் விட்டு கண்டம் தாவும் ஏவுகணைகள் வைத்திருக்கும் நாடுகளின் பட்டியலில் இந்தியா இணையும். ராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டு (டி.ஆர்.டி.ஓ) மையம் பல ரக அக்னி ஏவுகணைகளை வெற்றிகரமாகச் சோதனை செய்துள்ளது.

இந்த நிலையில் 5 ஆயிரம் கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரம் சென்று தாக்கக் கூடிய அக்னி-5 ஏவுகணையை டி.ஆர்.டி.ஓ உருவாக்கியுள்ளது.

இது குறித்து டி.ஆர்.டி.ஓ தலைவர் சரஸ்வத் தெரிவித்ததாவது:- இன்னும் ஓரிரு வாரங்களில் அக்னி-5 ஏவுகணை விண்ணில் ஏவப்படவுள்ளது. - என்றார் அவர். (வ)




# விபத்தில் தமிழக எம்.எல்.ஏ. சாவு



புதுக்கோட்டை, ஏப்.2

புதுக்கோட்டை சட்டசபைத் தொகுதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் எஸ்.பி. முத்துக்குமரன் நேற்றுக் காலை நடைபெற்ற வீதி விபத்தில் பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த முத்துக்குமரன் அன்னவாசல் பகுதியில், தனது கட்சித்தொண்டர் பழனிச்சாமி என்பவர் வீட்டில் துக்க சம்பவம் நடந்ததால், துக்கம் விசாரிப்பதற்காக நேற்றுக் காலை காரில் புறப்பட்டார்.

சொக்கநாதன்பட்டி என்ற இடத்துக்கு அருகே ஆரியூர் என்ற இடத்தில் கார் போய்க் கொண்டிருந்தபோது திடீரென கார் கட்டுப்பாட்டை இழந்து தாறுமாறாக ஓடியது. சாரதி காரை நிறுத்த கடுமையாக முயன்றார் ஆனால் முடியவில்லை. காரை வீதியோரமாக வேகமாக தலைகுப்புற கவிழ்ந்து விழுந்தது. இதில் தலையில் பலத்த அடிபட்டு சம்பவ இடத்திலேயே பேரவை உறுப்பினர் உயிரிழந்தார். சாரதியும், காரில் பயணித்த இன்னொருவரும் படுகாயமடைந்தனர். (வ)

# ரயில் மோதி 5 பேர் சாவு

ஹவுரா, ஏப்.2

மேற்கு வங்கம் ஹவுராவில் தண்டவாளத்தை கடந்தவர்கள் மீது ரயில் மோதியதில் 5 பேர் உயிரிழந்தனர்.

மேற்கு வங்க மாநிலம் ஹவுரா அருகேயுள்ள சந்திரகாஞ்சி ரயில் நிலையத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் பயணிகள் சிலர் நடை மேம் பாலத்தைப் பயன்படுத்தாமல், தண்டவாளத்தைக் கடந்து சென்றனர்.

அப்போது ராஞ்சி-ஹவுரா இன்டர்சிட்டி எக்ஸ்பிரஸ் ரயில் சந்திரகாஞ்சி ரயில் நிலையம் வழியாக வேகமாக வந்தது. திடீரென ரயில் வந்ததால் தண்டவாளத்தைக் கடந்தவர்கள் அதிர்ச்சியடைந்து திகைத்தனர்.

அதற்குள் இரண்டு பெண்கள் உட்பட 5 பேர் மீது ரயில் மோதியது. இதில் அவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். (வ)

## தடை வந்துவிட்டது

# பாம்பாட்டிகள் இனி என்ன செய்வது?

பாம்பாட்டிகளின் நாடு என்று வெளிநாட்டவரால் ஒரு காலத்தில் அழைக்கப்பட்ட இந்தியாவில் இப்போது பாம்பாட்டிகளை வனத்துறையினர் தண்டிக்கும் நிலை உருவாகியுள்ளது.

தலைநகர் புதுடில்லியை விட்டு ஒரு மணி தூரப் பயணத்தில் ஃபரிதாபாத் என்ற கிராமம் உள்ளது.

அங்கு புத்நாத் (வயது 65) என்பவர் பாரம்பரியமாக பாம்பு பிடித்து வித்தை காட்டி வாழ்பவர். இவர் பாம்பு பிடிக்கும் பேடியா இனத்தைச் சேர்ந்தவர்.

கடந்த 1972 ஆம் ஆண்டில் வன விலங்கு பாதுகாப்புச் சட்டம் அறிமுகமானதில் இருந்து பாம்பு பிடிப்பது தடை செய்யப்பட்டதால் இவரது அன்றாட பிழைப்பு கேள்விக்குறியாகிவிட்டது.

இவர் இப்போது தன் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி கல்வி பயில வைத்தாலும் பாம்பு பிடிக்கும் வித்தையைக் கற்றுக் கொடுக்கத் தவறுவதில்லை.

இந்தப் படத்தில் புத் நாத் தனது 2 வயது பேரன் சுமித்துக்குப் பாம்பு வித்தைகளைக் கற்றுத் தருகிறார். இவரது குடும்பத்தில் பிள்ளைகள் பாம்புகளை உடல் மீது படர விட்டு விளையாடு கின்றனர். பாடசாலைக்குப் போவதை விடப் பாம்புகளுடன் இருக்கவே அதிகம் விரும்புகின்றனர். ஆனால், இந்தியாவில் தற்போதைய சூழ்நிலையில் பாம்புகள் தனியார் நிறு வனங்களிடமோ அல்லது இதுபோன்ற பாம்பாட்டிகளிடமோ இருப்பதாக அறிந்தால் உடனே அவரைக் கைது செய்து ஏழாண்டு வரை சிறைத்தண்டனையும், அபராதமும் விதிக்க சட்டத்தில் இடமுண்டு என்பது குறிப்பிடத்தக்கது. (வ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

O/L, A/L, B.A மாணவர்களுக்கான ஆங்கில இலக்கண வகுப்புகள் யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், சங்கானை. By ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி.

தொடர்பு: 077 6751649



**Physics - A/L 2014**

சிறு குழு, தனிப்பட்ட வகுப்புக்கள் M.Sc பட்டதாரி ஆசிரியரால் கற்பிக்கப்படும்

தொடர்பு: 0776184713



## காணி விற்பனைக்கு

மூளாய் வீதிக்கு அருகில் (உடுக்கியவளை பிள்ளையார் ஆலயத்துக்கு அண்டிய பகுதியில்) 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
077-3699467, 077-2893202



## கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள டொயட்டா கொர்லா (18-X X X X ) கார் விற்பனைக்குண்டு

தொடர்பு: 021 491 1206


## துணுக்காய்ப்பகுதி பலநோக்கு கூட்டுறவுசங்கம் பதவி வெற்றிடம்

கிளை முகாமையாளர் பதவிக்கான 208/14 குறி/ இல விண்ணப்பம் கோரல்

துணுக்காய் ப.ப.நோ.கூ. சங்கத்தில் கிளை முகாமையாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் கடித உறை இடதுபக்க மேல் மூலையில் '' கிளைமுகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் '' எனக் குறிப்பிட்டு, 15.04.2012 ஆந் திகதிக்கு முன் விண்ணப்பங்கள் சுயமாக தயாரித்து தலைவர் து.ப.ப.நோ.கூ.சங்கம், துணுக்காய் என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைக்கவும்.

| | |
|---|---|
| கல்வித்தகைமை | : க.பொ.த. சாதாரணதரத்தில் கணிதம், தமிழ் திறமைச்சித்தியுடன் 6 பாடத்தில் சித்தியடைந்திருத்தல் |
| வயது | : 18 - 45 வயது |
| சம்பள அளவு | : 9450 80 x 10 - 85 x 10 சுற்றுநிருபத்திற்கு அமைய இதரபடிகளும் வழங்கப்படும் |

தலைவர்,
து.ப.ப.நோ.கூ. சங்கம், துணுக்காய்

(14090)(6-9-8)

## பணியாளர்கள் இணைப்பு

தென்மராட்சி,ஏப்2

சமூக சேவைகள் அமைச்சின் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினர் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுஊடாகப் பயிற்றப்பட்ட பராமரிப்பாளர்களின் சேவைகளாக பணியாளர்களை இணைத்துக் கொள்ளவுள்ளனர். சுகாதார அமைச்சல் பயிற்றப்பட்டு சேவையில் இணைத்துக் கொள்ளவுள்ளனர்.

இந்தச் சேவையில் இணைந்து கொள்ள விரும்பும் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த தரம்- 9 வரை கல்வி கற்றவர்கள் தமது சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுக்கு வருகை தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-9)

## பழைய மாணவர் சங்கம்
## கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம்
## வருடாந்த பொதுக் கூட்டம்

காலம் : 2012.04.07 (சனிக்கிழமை)
பி.ப 3.00 மணி
இடம் : கிளி/கனகபுரம் ம.வி மண்டபம்

எமது சங்க வருடாந்த பொதுக்கூட்டம் 07.04.2012 சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெறவுள்ளமையால் அனைத்து பழைய மாணவர்களும் சமுகம் தந்து பாடசாலை வளர்ச்சிக்கான நல்ல கருத்துக்களை வழங்கி நடப்பாண்டுக்கான நிர்வாகத்தினரையும் தெரிவு செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர். (C\207) (6,9,10) செயலாளர்.


**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
**The Only Official French Language Centre in Jaffna**
*Learn French the French Way*

யாழ்ப்பாணத்தில் உள்ள Alliance Francaise de Jaffna இன் ஊடாக French மொழி வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. ஆர்வமுள்ள எவரும் கற்றுக் கொள்ளலாம்.


வகுப்புக்கள் : சனி, ஞாயிறுகளில்...
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
61, Kachcheri-Nallur Road, Jaffna Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo.com
(றக்கா வீதியும், கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி வீடு)

மேலதிக விவரங்களை நேரில்/தொலைபேசியினூடாக பெறலாம். (16355) (7,9,10)


## உண்மை நிலை

# ஒதுக்குகள்

இலங்கை 2007இல் முதற்றடவையாக ஐ.அ.டொலர் 3 பில்லியன் கொண்ட வெளிநாட்டு ஒதுக்கு மட்டத்தினை அடைந்ததுடன் இது 2010இல் **ஐ.அ.டொலர் 6 பில்லியன்களை அடைந்தது.** 2009இல் மோதல்கள் முடிவடைந்ததைத் தொடர்ந்து நாட்டிற்கான முறிவழங்கல், பநா. நிதிய துலைறில் ஒழுங்குகள், அதிகரித்த தொழிலாளர் பணவனுப்பல்கள், உயர்வடைந்த ஏற்றுமதி வருமானம் என்பனவற்றினூடாக நாட்டிற்குக் கிடைத்த வலுவான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள ஒதுக்குகளின் மட்டம் உயர்வடைய பங்களித்தன 2011இன் நடுப்பகுதியில் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 8 பில்லியன்களையும் விஞ்சி, அந்நேரத்தில் எமக்குத் தேவையாக இருந்த அளிவிலும் பார்க்கக் கூடுதலாகக் காணப்பட்டது எனினும், வளர்ச்சியடைந்து வரும் பொருளாதாரத்தின் காரணமாக இறக்குமதிகள் விரைந்த வேகத்தில் விரிவடைந்தமையானது உள்நாட்டில் வெளிநாட்டுச் செலாவணிக்கான உயர்ந்த கேள்வியைத் தோற்றுவித்தது. அது வெளிநாட்டு ஒதுக்குகளை 2011 இறுதியில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 6 பில்லியனுக்குக் குறைத்தது **இம்மட்டமானது இன்னமும் மிக வசதியான மட்டமாகவே இருப்பதுடன் இந்த மட்டமானது நாட்டின் 3 மாத இறக்குமதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய மிகப் போதுமானதாக இருந்தது.** தற்பொழுது நாம் வலுவான உட்பாய்ச்சலைக் கொண்டிருப்பதுடன், ஐ.அ.டொலர் 6.5 பில்லியனைக் கொண்ட ஒதுக்கினையும் விரைவில் விஞ்சவேண்டும்.




## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**அம்பலவாணர் நடராசா**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அன்னை மடியில் 10.04.1925 — ஆண்டவன் திருவடியில் 15.03.2011

திதி: வளர்பிறை ஏகாதசி

ஆண்டொன்று நீங்கினும்
அரவணைத்து வளர்த்த
பாசத்தின் நீர்த்தி இன்னும்
ஆறவில்லை .........
வானுள்ள காலம் வரை
நடராசா எனும் நாமம்
குலையாப் பெருமகன்
நீவிர் ஐயா ...............
இதயத்தின் மன்னவா...
எழுந்து எம் இணுவையம்
பதி காண வருவீர்களா?
ஒரு முறை .....................

இணுவில் மேற்கு,
இணுவில்.

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்.

(16288) (6,8,10)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 ★ 07 ★ 1924



மறைவு 02 ★ 04 ★ 2006

**தம்பு சொலமன் அந்தோனிப்பிள்ளை**

ஆண்டுகள் ஆறு சென்றாலும்
ஆறவில்லை உம் துயரம்
ஆறு ஆண்டுகள் என்ன
ஆறாயிரம் ஆண்டுகள் கழிந்தாலும்
ஐயா நாம் உம்மை மறவோம்.

58, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
021 22 29361.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(16355) (7,9,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஏப்.2

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின.

இதன் அடிப்படையில் பாடசாலை அதிபர்கள் அனுப்பி வைத்த மாணவரின் பரீட்சை பெறுபேறுகள் வருமாறு.

புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தி.

ந.கீர்த்தனா 4ஏ,2பி,2சி, ஜெ.சுவேதிகா 3ஏ,3சி,2எஸ், வ.யுகன்ஜா 2ஏ,2பி,3சி,எஸ், மு.மாலா 2ஏ,2பி,சி,3எஸ், உ.சிந்துஜா ஏ,2பி,3சி,2எஸ், த.லக்சிகா ஏ,3சி,3எஸ், அ.கார்த்திகா ஏ,சி,4எஸ், பி.பிறேமினா ஏ,4சி,எஸ், ந.கஜனுஜா ஏ,2சி,3எஸ்.

பாண்டியன் குளம் மகாவித்தியாலயம்

தி.தயந்திகா 6ஏ,2பி, தே.கார்த்திகா 7ஏ,சி, சி.தர்சிகா 2ஏ,3சி,எஸ், ப.லோஜிதன் 3ஏ,3சி,2எஸ், இ.லிந்துஜன் ஏ,3பி,2சி,2எஸ், இ.இராமச்சந்திரன் ஏ,2பி,2சி,3எஸ்.

மல்லாகம் மகாவித்தியாலயம்

ம.டக்சன் 9ஏ, அ.டியானா 5ஏ,பி,சி,2எஸ், சி,சிவதர்சன் 4ஏ,3சி,2எஸ், செ.அனித்தா 4ஏ,3பி,சி,எஸ், செ.அனிஸ்டா 4ஏ,2பி,சி,எஸ், க.துஸ்யந்தினி 4ஏ,2பி,சி,2எஸ், தி.சிவதர்சினி 3ஏ,2சி,2எஸ், த.தனிஸ்ரா 3ஏ,2சி,2எஸ்.

உருத்திரபுரம் ம.வி.

சி.சிந்துஜா 4ஏ,3சி,2எஸ், க.மதுசனா 3ஏ,பி,2சி, சி.பிரார்த்தனா 2ஏ,பி,2சி,2எஸ், ச.சசிதா 2ஏ,பி,3சி,3எஸ், ம.சுபானுஜா 2ஏ,3பி,2சி, எஸ், மா.விதுசன் 2ஏ,4சி, 2எஸ், உ.கபிசாந்தன் ஏ,3பி, 2சி,3எஸ், நி.குசாயினி ஏ,2பி, 3சி,எஸ், ர.கேசவன் ஏ,பி,2சி, 3எஸ், சீ.சுரேந்திரன் ஏ,பி,சி, 4எஸ், த.ஆதித்தியா ஏ,2பி, 5சி,எஸ், த.ஜனனி ஏ,3சி, 5எஸ், சி.நிரோஜினி 3சி,5எஸ்.

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தி

த.தர்மிகா 5ஏ,பி,3சி, உ.செந்தூரி 4ஏ,3சி,2எஸ், உ.கஸ்தூரி 3ஏ,3பி,சி,2எஸ், ச.றஜிதா ஏ,2பி,4சி,எஸ், அ.அனித்தா ஏ,பி,2சி,4எஸ், த.சிந்துஜன் ஏ,5சி,எஸ், சி.பவித்திரன் ஏ,4சி,2எஸ், க.நிரோசாத் ஏ,3சி,3எஸ்,

உசன் இராமநாதன் ம.வி.

எம்.சேனுஜா 8ஏ,பி, வி.மதுஷா 8ஏ,பி, வி.சுதர்சன் 4ஏ,4சி, எஸ்.நிரேகா 3ஏ,3சி,2எஸ், ரி.பிரிந்தன் 2ஏ,4பி,2சி,எஸ், ரி.பிரபாஜினி 2ஏ,2பி,3சி,எஸ், எஸ்.சுகந்தினி 2ஏ,2பி,3சி, எஸ், வை.துசானி ஏ,3பி,2சி, 3எஸ், எஸ்.விதுஜனன் ஏ,3பி,4சி, வை.பவிதரன் ஏ,2பி,2சி, 2எஸ், எஸ்.கோமதர்சன் ஏ, 2பி,2சி,3எஸ், எம்.லக்சிகன் ஏ,பி, 3சி,3எஸ், என்.நிருஷா ஏ,பி, 2சி,2எஸ், கே.சாளினி ஏ,பி,சி, 4எஸ், எஸ்.லகேஸ்வரன் ஏ,4சி,2எஸ், எஸ்.கயதீபா ஏ,2சி, 4எஸ், ஆர்.நவநீதன் பி,2சி,5எஸ்.

(வ-9-426)

# விகடகவியின் நூல் வெளியீடு



யாழ்ப்பாணம், ஏப் 02

ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு விகடகவி எழுதிய விகடகவி கதைகள் நூல் வெளியீட்டுவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

தென்மராட்சி பிராந்திய கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் செல்வி.வசந்தி அரசரட்ணம் ஆகியோர் மங்கள விளக்கேற்றினார்கள்.

தமிழ்த் தாய் வாழ்த்து பாடப்பட்டதைத் தொடர்ந்து நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் பேராயர் அருட்திரு. எஸ். ஜெபநேசன் அடிகளார், கலாநிதி ஆறு. திருமுருகன், பேராசிரியர் என். சிவலிங்கராஜா, பேராசிரியர் தி.வேல்நம்பி, அளவெட்டி மகாஜனைப் தலைவர் வை. தயாபரமணியம் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். நூலாசிரியர் மு.திருநாவுக்கரசு ஏற்புரை வழங்கினார். நூலின் முதற்பிரதியை சாவகச்சேரி நீதிபதி கே. ஆனந்தராஜா பெற்றுக்கொண்டார். (ஙு-7)

# முகாமைத்துவ உதவியாளர் பதிவுகள்

யாழ்ப்பாணம், ஏப்.2

யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ள புதிய பொது முகாமைத்துவ உதவியாளர்களுக்கான பயிற்சிநெறிக்கு பதிவுகளை மேற்கொள்ளாத புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட பொது முகாமைத்துவ பயிற்சியாளர்களை இன்று திங்கட்கிழமை மாவட்ட செயலக நிர்வாகக் கிளையில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

# மறுமலர்ச்சியடையச் செய்த திருவடி வழிபாடு

சிவதொண்டன் நிலையத்துத் தியான மண்டபத்தில் இருக்கும் திருவடி யோகர் சுவாமிகளின் பாதணியோ எனச் சிலர் ஐயுறுவர். யோக சுவாமிகள் கொழும்புத்துறைக் கொட்டிலில் வைத்து வழிபாடு செய்து வந்த திருவடி அவர்தம் குருநாதரான செல்லப்பாசுவாமிகளின் பாதணி என்றும் சிலர் நம்புவர். இவர்களின் இந்துப் பாமரத் தனமான ஐயத்துக்கும், நம்பிக்கைக்குமான சரியான பதில், இவ்விரு சுவாமிகளும் பாதணியே அணிந்ததில்லை என்பது தான்.



இன்று குருபூசை

திருவடி வழிபாடு தொன்று தொட்டு வரும் வழிபாடு. திருக்குறளில் கடவுள் வாழ்த்திலே 'வாலறிவன் நற்றாள் தொழாஅரெனின்', 'மலர் மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்' என்று பல இடங்களில் வருகிறது. சிவலிங்கமாத மனையில் குரியதயிருப் பதும் திருப்பாதமே. வழிபாட்டுக் சிதம்பரத்தில் சிற்றம்பலத்துக்கு வட மேற்கே உள்ள பள்ளியறையில் வீற்றிருப்பது திருவடி. அத்திருவடி சபைக்கு வந்த பின்னரே காலை வேளை பாற்பூசை நடைபெறும். அவ்வாறே அர்த்தசாமப் பூசை திருவடி பற்றி அறைக்குச் சென்று ஊஞ்சலில் வீற்றிருந்த பின்னரே நிறைவு பெறும். சிதம்பரத்திலே அடக்கமாக நிகழும் பூசனைக்குரிய முதற்பொருள் திருவடியே. மாணிக்கவாசக சுவாமிகள் சிவபுராணத்து மங்கல வாழ்த்துப் பகுதியிலே 'நாதன்தாள் வாழ்க' இறைவனடி போற்றி, ஈசனடி போற்றி எனப் பலமுறையும் திருவடிகளை வாழ்த்துவதையே நாமறிவோம். திருப்பெருந்துறைக் குருந்தின் கீழ் பரமாசாரியாராக வீற்றிருந்த சிவபெருமான், அவருக்குக் கருமம் நிறைவானதும், தம்மோடு கூடி சிவனடியார்களாக வந்த வைலைக் கணத்தவரை அங்கேயே சிவநகர் இருக்குமாறும், தாம் கைலை செல்வதாகவும் கூறிய பொழுது அக்கணத்தவர்கள் பெருமான் பிரிவினை ஆற்றாதராய் "ஐயா தரிப்பரிது" எனக் கூறி வருந்தினர். அப்பொழுது பெருமான் "வருந்தாதீர்" இம் மணமலி குருந்தின் கீழ் திருவடி பிரதிட்டை செய்து அத்திருவடியை நாமாகவே கண்டு வழிபட்டு வருங்கள் எனப் பணித்தார். அப்பணிப்பின் படியே அவ்வடியார் கூட்டத்துள் ஒருவராயிருந்த மணிவாசக சுவாமிகளும் திருவடி வழிபாடாற்றினார். ஆதலால் 'திருவடி' என்பது சிவபெருமானே. அவ்வழிபாடு சிவனெஞ்சப்படி அருளாளர் ஆற்றிய வழிபாடு. அவ்வழிபாட்டையே யோகர் சுவாமிகள் மறுமலர்ச்சியடையச் செய்தார். சிவபுராணத்திலே "நிலத்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி" "மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்" என்றும் வருகின்றதல்லவா! இவற்றால் மணிவாசகப் பெருமானுக்கு குருவடிவாக வந்து திருவடி காட்டினார் என்பதும், அத்திருவடிக் காட்சியினாலே தான் வீடு பேறடைந்தார் என்பதும் விளங்குகின்றதல்லவா? மேலும் 'பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க' என்றும், வருவதனால் அவ்வத் பிறவியை அறுக்கும் நன்மருந்து, திருவடியே என்பது தெளிவு. இது பற்றியே திருக்குறள் கடவுள் வாழ்த்திலே வரும் 'நற்றாள்' என்பதற்குப் பிறவிப் பிணிக்கு மருந்தாதலின் 'நற்றாள்' என்றார் எனப் பரிமேலழகர் பொருள் விரித்தார்.

நாம் இந்த மனிதப் பிறவியைப் பெற்றது பிறவிப் பிணியினின்று நீங்குதற்பொருட்டே. அதற்கான நன்மருந்தே திருவடி. அத்திருவடியையே நல்லோர்கள் தொன்றுதொட்டு வழிபட்டு வந்தனர். அது அரிதாய்ப் போன இக்காலத்திலே, யோகர் சுவாமிகள் அதனை நம்மவர்க்குக் காட்டி வைத்தார். அவர் காட்டி வைத்த வழுத்தொணா மலரடியே வழுத்துதற்கெளிதாய் சிவதொண்டன் நிலையத்தில் வீற்றிருக்கிறது.

சிவதொண்டன் சபையார்.

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** இன்று சில காரணங்களால் தங்களின் சிந்தனைகள் தீவிரமாகும் என்ற போதும் செயற்பாடு சற்று தாமதமாகும். கோபத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள். பணியில் முழுக் கவனத்தோடு செயற்படுதல் அவசியம். தொழில் ரீதியான செயற்பாடுகளை சிறு சிறு மாற்றங்கள் செய்து கொள்ள திட்டமிடுவீர்கள். நண்பர் ஒருவரின் ஆலோசனையும் பயனுள்ளதாக அமையும். தெய்வ வழிபாடுகள் மன நிறைவை தரும்.



**இடபம்:** இன்று தாங்கள் தெளிவான மன நிலையோடு செயற்பட்ட போதும், எதிர்பார்த்தது ஒன்றும் நடப்பது ஒன்றுமாக இருக்கும். உறவினர் ஒருவரின் பணியின் பொருட்டு அதிகப்படியான அலைச்சல் இருக்கும். பண நிலையில் வரவுகள் வந்தபோதும், செலவுகள் பற்றாக்குறை ஏற்படும். தெய்வ வழிபாடுகள் மனச் சங்கடத்தைப் போக்கும்.



**மிதுனம்:** சில நிகழ்ச்சிகள் தங்களின் எதிர்பார்ப்புக்கு எதிர்மறையாக இன்று இருந்தபோதும், அதை பெரிதுபடுத்திக் கொள்ளாமல், லட்சியத்தோடு செயற்படுவீர்கள். ஆன்மிக சந்திப்புகள் அதிகமாக இருக்கும். உறவினர்களின் விவகாரங்கள் அதிருப்தியைத் தரலாம். பழைய நண்பர் ஒருவரின் சந்திப்பு புதிய சிந்தனைகளுக்கு வழிவகுக்கும். திடீர் பயணம் ஒன்று ஏற்படும்.



**கடகம்:** அவசரமான செயற்பாடுகள் இன்று அதிகம் காணப்படும். எதிலும் பொறுமை, நிதானம் நல்லது. வீடு, வாகன வகையில் சீர்திருத்தங்களை மேற்கொள்வீர்கள். பெற்றோர்களின் உடல் நிலையில் கவனம் செலுத்த வேண்டியிருக்கும். நண்பர்களுக்காக உதவிகளை செய்வதிலும், தாங்கள் உதவிகள் பெறுவதிலும் விழிப்புடன் செயல்படுங்கள்.



**சிங்கம்:** உடல்நிலையில் சற்று சோர்வு காணப்படும். இருப்பினும், பொருள்படுத்தாமல் சில பணிகளை மேற்கொள்வீர்கள். ஒரு சில விவகாரங்களில் தாங்கள் மேற்கொள்ளும் சாதுரியங்கள் பிறரால் விரும்பப்படும். குடும்பக் கவலைகள் சற்று கூடுதலாகும். தொலைபேசி தொடர்புகள் மன ஆறுதல் அளிக்கும். பக்தி கூடுதலாகும்.



**கன்னி:** செல்வாக்கு கூடுதலாகும். நண்பர்கள் மூலம் பண உதவியோ, பொருள் உதவியோ கிடைக்கும். குடும்ப சம்பந்தப்பட்ட விவகாரங்களுக்காக அலைச்சல் இருக்கும். தாமதப்பட்ட சில பணிகளை திட்டமிட்டுச் செய்து முடிப்பீர்கள். தொழில் ரீதியான பயணம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

**நாளை**

பங்குனி 21 செவ்வாய்க்கிழமை 03.04.2012
திதி: ஏகாதசி பி.ப 08.41 வரை
நட்சத்திரம்: மகம் பி.ப 05.02 வரை
சுபநேரம்: 10.40-12.10 வரை,
ராகு காலம்: 03.10- 04.40 வரை



**துலாம்:** பலவிதமான சிந்தனைகளோடு இன்றைய பொழுது ஆரம்பிக்கும். ஒவ்வொன்றாக திட்டமிட்டு செய்து முடிப்பீர்கள். பண வரவுகள் பற்றாக்குறையாக இருக்கும். இல்லறத் துணையின் வகையில் உதவிகள் ஒத்தாசைகள் கூடுதலாகும். உறவினர்களின் சந்திப்புகளால் மனமகிழ்ச்சி கூடுதலாகும்.



**விருச்சிகம்:** இன்று தாங்கள், தான் நினைப்பதே சரி. தான் செய்வதே சரி என்ற மனோபாவனையில் செயற்படுவீர்கள். புதிய தொழில் முயற்சி ஒன்றிற்காக ஆலோசனையும், அலைச்சலும் இருக்கும். முக்கியஸ்தர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறும். தெய்வ வழிபாடு மனநிறைவு தரும்.



**தனுசு:** இன்று சில விவகாரங்களில் தயக்கமான செயற்பாடுகள் இருக்கும்; யோசித்துச் செயற்படுங்கள். நிதி நிலையில் நிலவும் பற்றாக்குறையைக் நீக்க, மாற்று ஏற்பாடுகள் செய்வீர்கள். நண்பர்களிடம் கேட்ட உதவிகள் கிடைக்கும். பணியில் சலுகை கூடும். வியாபாரத்தில் ஏற்ற இறக்கமான நிலை நிலவும். வாகனத்தை மாற்றியமைக்க திட்டமிடுவீர்கள்.



**மகரம்:** மனதில் இனம் புரியாத கவலையும் பயமும் விட்டுவிட்டு வந்து பின் மறையும், அலைச்சல் சற்று கூடுதல் என்றபோதும் நன்மையும் உண்டு. தகுதியை உயர்த்திக் கொள்வதற்காக சில முயற்சிகளை மேற்கொள்வீர்கள். தொடர்ந்த முயற்சி இலக்கை எட்ட உதவும். குடும்பத்தோடு சென்று தெய்வ தரிசனம் செய்வீர்கள். புதிய வீட்டு உபகரணங்கள் வாங்க வாய்ப்பு உண்டு.



**கும்பம்:** இன்று மனநிலை உற்சாகம் கூடியபோதும் உடல் நிலையில் திடீர் தொந்தரவு ஏற்படலாம். திடீர் தன வரவு உண்டு. நண்பர்களின் உதவிகள் ஓரளவுக்கு உதவிகரமாக இருக்கும். பழைய விவகாரம் ஒன்று அதிகப்படியான கவலையை ஏற்படுத்தும்; கவனம். குழந்தைகளின் கல்வி விசயங்களில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.



**மீனம்:** நேற்றைய பணியின் சுமைகள் அதனின் தாக்கம் இன்றும் தங்களின் மனநிலையில் பாதிப்பை தரலாம். எந்த சூழ்நிலையிலும் வார்த்தைகள் பிறழாமல் பார்த்துக்கொள் [illegible] கிடைக் [illegible] பேச்சுகள் ஆரம்பமாகும். கடன் தீரும். அம்பாள் வழிபாடு சிறப்பு தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | 7 | | | | | 1 | |
| | | | | | | 4 | 8 | 6 |
| | 9 | | 4 | | | | | 7 |
| | 5 | | 1 | 6 | 8 | 2 | | 4 |
| 8 | 4 | | 5 | | 2 | | 7 | 9 |
| 3 | | 1 | 9 | 7 | 4 | | 5 | |
| 2 | | | | | 9 | | 4 | |
| 9 | 1 | 5 | | | | | | |
| | 7 | | | | | 5 | | 2 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 6 | 3 | 8 | 7 | 2 | 1 | 5 | 4 |
| 8 | 4 | 7 | 1 | 5 | 9 | 2 | 3 | 6 |
| 5 | 2 | 1 | 3 | 4 | 6 | 9 | 8 | 7 |
| 6 | 8 | 4 | 7 | 2 | 1 | 5 | 9 | 3 |
| 2 | 7 | 5 | 6 | 9 | 3 | 8 | 4 | 1 |
| 1 | 3 | 9 | 4 | 8 | 5 | 6 | 7 | 2 |
| 7 | 1 | 2 | 9 | 3 | 8 | 4 | 6 | 5 |
| 3 | 5 | 8 | 2 | 6 | 4 | 7 | 1 | 9 |
| 4 | 9 | 6 | 5 | 1 | 7 | 3 | 2 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை

## விதிக்கவேண்டும் என்கிறார் வீரமணி

இலங்கைக்கு பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தெரிவித்தார்.

திராவிடர் கழகம் சார்பில் உரிமை பாதுகாப்பு பிரசார பொதுக் கூட்டம் கரூர் காமாட்சி யம்மன் கோயில் முன்பாக நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக திராவிடர் கழகத் தலைவர் கி.வீர மணி கலந்து கொண்டு பேசியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் உள்ள ஈழத் தமிழர்கள் வாழ்வுக்கு ஒரே குரல் கொடுப்போம். இலங்கைக்கு உலகப் பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும். ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமைக்கு ஒரே தீர்வு அங்குதமிழ் ஈழம் என்ற ஒரே முடிவு.

எனவே இலங்கையில் தமிழ் ஈழம் வேண்டும். இதற்காக தமிழ் ஈழ ஆதரவு இயக்கம் உருவாக்க வேண்டும். அதன் மூலம் இலங்கையில் நிரந்தரத் தீர்வு காணப்படும்.

காவிரி மற்றும் முல்லைப் பெரியாறு ஆகிய பிரச்சினைகளுக்கு மிகப் பெரிய போராட்டம் வரவேண்டும். மக்களின் வளர்ச்சி திட்டம் சேது சமுத்திர திட்டம் - என்றார் அவர். (வ)

# சூட்சுமமாக தங்கம் கடத்திய இந்திய ஆசாமி. சிக்கினார்

இலங்கையில் இருந்து, 25 லட்ச ரூபா மதிப்புள்ள தங்கத்தை மிகவும் சூட்சுமமான முறையில் கடத்திய இந்தியர் ஒருவரை, சென்னை விமான நிலைய சுங்கப்பிரிவு அதிகாரிகள் கைது செய்தனர்.

இவர் தமிழ்நாடு, சென்னை, மண்ணடியைச் சேர்ந்தவர். முகமது ரியாஸ், (வயது55) இலங்கையில் இருந்து ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் மூலம், நேற்று அதிகாலை சென்னைக்குச் சென்றார்.


சுங்கவரி செலுத்தக்கூடிய வகையில், தன்னிடம் எந்தப் பொருளும் இல்லை என்ற கூறி, வெளியேற முயன்றார். அவரைத் தடுத்து நிறுத்திய சுங்கப்பிரிவு அதிகாரிகள், உடைமைகளைச் சோதனையிட்டனர்.

அப்போது, அவரது சூட்கேஸில், 10 இற்கும் மேற்பட்ட போட்டோ அல்பங்கள் இருந்தன. அவற்றில் பொருத்தப்பட்டிருந்த கம்பி வளையங்கள் மீது, அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது. சோதனையில், அல்பத்தில் பொருத்தப்பட்டிருந்த கம்பி வளையங்கள் அனைத்தும், தங்கத்தால் செய்யப்பட்டு வெள்ளி முலாம் பூசப்பட்டவை எனத் தெரிந்தது.

தொடர்ந்து நடத்திய சோதனையில், சூட்கேஸை தள்ளிச் செல்ல உதவும் கைப்பிடி, பெல்ட் பக்கிள்ஸ், கரும் பலகையில் எண்ணிக்கையைக் குறிக்க வைக்கப்பட்டிருக்கும் மணிகளைப் பொருத்தும் கம்பிகள் என, அனைத்தும் தங்கத்தால் செய்யப்பட்டு, முலாம் பூசப்பட்டவை என்று சோதனையில் தெரியவந்தது. இவ்வாறாக மொத்தம், 890 கிராம் தங்கம் பறிமுதல் செய்யப் பட்டது. அதன் மதிப்பு, 26 லட்ச ரூபா. இதனையடுத்து சுங்கப் பிரிவு அதிகாரிகள், முகமது ரியாஸ் என்பவரைக் கைது செய்தனர். (வ)

# "விழுதுகளாய் தாங்குவோம்"

முல்லைக்கு தேர் கொடுத்தான் பாரி மன்னன் என்பது தமிழரின் இலக்கியம் கூறும் செய்தி. ஒரு மரம் வாழ்வதற்கு தேர் கூட தோள் கொடுத்து கொழு கொம்பாகிப்போனமை தமிழரின் வரலாறு. தோள்களைக் கொடுத்தால்தான் இறைவன் தோழமைக்கு தோள் கொடுத்து யேசு சிலுவை சுமந்து மனிதகுலத்துக்கு வாழ்வு அளித்தார். நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு யாரிடமும் உண்டோ என்று மொழிந்தவர் யேசு. விழுதுகளாய் அடுத்தவரைத் தாங்கிப் பிடித்து தாங்கி நிலை நிறுத்துகின்றபோதே வாழ்க்கை பாரத்தினால் வீழ்ந்து கிடப்போருக்கு ஏணிகளாகின்றோம். போரின் தாக்கத்தினால் இன்றும் எத்தனையோர் பேர் எமக்கு எதிரில் வீழ்ந்து கிடக்கின்றனர். அழுதுகொண்டே பிறக்கின்றோம். குறைகூறிக் கொண்டே வாழ்கின்றோம். ஏமாற்றத்துடன் சாகின்றோம். நாம் சாவதற்காகவா காயங்களோடு வாழ்வதற்காகவா பிறந்தோம்? நிச்சயமாக இல்லை. நாம் எதை சாதித்தோம் என்பது தான் இங்கு முக்கியம். அடுத்தவர் கண்ணீரில்நனைய பன்னீரை எம்மீது தெளித்து வாழ்ந்தோமா! மரணம் இல்லா பெருவாழ்வு நோயின் நிழல் தீண்டாத உடல்நலம், கட்டுப்பாடற்ற சுதந்திரம், துன்பமில்லா இன்பம் முரணும் மோதலுமற்ற சமூகச் சூழல். இப்படியெல்லாம் அமைவது வாழ்க்கையல்ல! இயேசு நேசித்த சிலுவையுமல்ல. ஆசைப்படி நடந்துவிட்டால் அதற்கு பெயர் வாழ்க்கையுமில்லை. காற்றை எதிர்த்துதான் பட்டம் பறக்கின்றது. நீரை எதிர்த்துதான் மீன் நீந்துகின்றது. மரமும் பூப்பதோடு கனிகளையும் சுமக்கத் தயாராக இருந்தால்தான் பலனைப் பழங்களாகப் பார்க்கமுடியும். பாசத்தோடு தோள் கொடுக்கும் மானிடரே இன்றைய சூழலில் காயப்பட்ட ஆற்ற முடியாத ரணங்களோடு வாழும் மானிடப் பூக்களுக்கு தேவை! மானிடப் பூக்கள் உதிர்ந்து போகாமல் சுயநலமற்ற பளுதூக்கிகளாக, உரமூட்டும் ஊக்கிகளாக வாழ் வோரே வீழ்ந்து கிடப் போருக்கு ஒத்துடமாகின்றனர். இயேசுவின் வாழ் வும் சாவும் இதையே பறைசாற்றுகின்றது. விழுதுகளாய் வீழ் வோரை தாங்கிப்பிடிக்கின்ற போதே இயேசுவின் சிலுவை மரணம் எமக்கும் வாழ்வாகின்றது. தோள் கொடுக்கும் தோழமையுள்ள இதயங்களே இயேசுவின் காட்சி களாய் மனிதத்தின் குறியீடுகளாய், தெய்வத்தின் சாயல்களாக, மனித வாழ்வுக்கு அர்த்தம் கொடுக்கின்றனர். சுயநலமும் அடுத்தவனுக்கு என்ன நடந்தாலும் எனக்கென்ன என வாழும் ஒரு சூழலில், விழுதுகளாய் அடுத்த வருக்காக வாழ்வோரே மனிதத்துக்கு முகவரி கொடுத்து வாழ்கின்றனர். முகம் இழந்து, முகவரியின்றி வாழும் வாழ்க்கை நிறை வாழ்வாக மாறமுடியாது. ஒருவரையொருவர் தாங்கி வாழும் போது தான் உலகம் சொர்க்கமாக மாறுகின்றது. சிலுவைப் பாதை பக்தி முயற்சியோடு மட்டும் நாம் நின்று விடலாகாது. துன்பப்படுபவனுக்கு நீ விழுந்த போது உனக்குத்தோள் கொடுத்தவனுக்குத் தோள் கொடுத்து வாழ்வதே தவக்காலத்தில் இறைவன் விரும்பும் உண்மை நோன்பாகும்.




அருட்கலாநிதி ஸ்ரனி அன்ரனி அ.ம.தி
விரிவுரையாளர்.

# மரண அறிவித்தல்

திருமதி

## அன்ரன் சாந்தாள் குருஸ் (ஞானம்)



வங்காலை 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்ரன் சாந்தாள் குருஸ் (ஞானம்) 31.03.2012 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நாவாந்துறையைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை அன்ரனின் (S.A.N வாடி உரிமையாளர்) அன்புமனைவியும் சுபன், நிருசலா ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து - குருஸ்செல்லம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான செபஸ்தியாம்பிள்ளை (பரியாரி) - காணிக்கைமரியை தம்பதியரின் பாசமிகு மருமகளும் செல்வம்குருஸ், கோலியாத்குருஸ், கில்லறியம்மா குருஸ், மருசலின்குருஸ், பபிக்குருஸ் மற்றும் அல்பேட், மரியதாஸ் ஆகியோரின் அன்புச்சகோதரியும் மரியதாஸ், எட்வீனம்மா, எட்வேட் (பிரான்ஸ்), பிரான்சீஸ்கம்மா (வவுனியா), அரியற் (பிரான்ஸ்), யோன்மேரி, சூசைதாசன், அமலதாசன் (S.K.M.E அன்னை கடல் உணவு வாணிபம் உரிமையாளர்) ஆகியோரின் அன்புமைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.04.2012) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து புனித அன்னாள் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் வங்காலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3 ஆம் வட்டாரம்,
வங்காலை, மன்னார்,

(16365)(6-9-8)

தகவல்:
குடும்பத்தினர்

# 45 ஆம் நாள் நினைவலைகள்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 31 ★ 07 ★ 1975 | 18 ★ 02 ★ 2012 |

## சிங்கராசா றஞ்சித் மரியதாஸ் (இந்திரன்)

புன்னகை பூத்த இன் முகம் காண
தினம் தினம் உம் தடங்கள் தொடர்கின்றோம்
உனது பசுமையான இனிமையான
நினைவுகளுடன்.......

மனைவி ( ஜீவதி),
மகள் (சாயினி),
மகன் (சிரோசன்),
உறவினர்கள்.

இல. 23, புங்கங்குளம் வீதி,
பாசையூர், யாழ்ப்பாணம்.

(16359) (45 . 6.9)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி

## பொன்னுத்துரை சிவயோகம்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20★10★1942 | 03★03★2012 |

எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்திகேட்டு ஓடோடிவந்து எமக்கு பல்வேறு வகைகளில் உதவிகள் வழங்கியோருக்கும், தொலைபேசியில் அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலிகள் பிரசுரித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (02.04.2012) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்).


பொன்னுச்சாமி வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

(14618) (45. .)

குடும்பத்தினர்

# நினைவலைகள்

| 5 ஆம் ஆண்டு | | 10ஆம் ஆண்டு | |
|---|---|---|---|
| தோற்றம் | மறைவு | தோற்றம் | மறைவு |
| 08 ★ 11 ★ 1927 | 26 ★ 03 ★ 2007 | 03 ★ 02 ★ 1930 | 25 ★ 03 ★ 2002 |





அமரர்
நடராசா ஞானபூரணம்

அமரர்
பாலசிங்கம் சிவபாக்கியம்

திதி: 02.04.2012

(சுவாமியார் வீதி, கொழும்புத்துறை)

ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் உங்கள்
நினைவு என்றென்றும் எம் மனதில் நிறைந்திருக்கும்

நாவேலி மேற்கு,
நாவேலி.

குடும்பத்தினர்.

(16360) (45. . )

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

மக்கள் சேவையே மகேசன் தொண்டு என்ற கூற்றுக்கமைய
எம்மினிய நண்பன்

## திரு. க. முல்லைமாறன்

(கிராம அலுவலர்- சரசாலை வடக்கு).



**சமூகப் பணியில்......**

* கிராம அலுவலராக
* கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினராக
* வளர்மதி சனசமூக நிலைய நிர்வாக உறுப்பினராக
* வளர்மதி கல்விக்கழக ஆசானாக

என்றெல்லாம் சமூகப்பணியில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருக்கும் போது.
சமூகப் பணியின் மற்றுமொரு பரிமாணமாக

**சமாதான நீதிவானாக**

தெரிவு செய்யப்பட்டு கடந்த மாதம் நீதிபதி அ.அ. ஆனந்தராஜா முன்னிலையில் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட திரு. க. முல்லைமாறன் அவர்கள் தனது மனைவி, பிள்ளைகளுடன் மேலும் பல உயர்வுகள் பெற்று இன்பமான வாழ்வு வாழ இனிய எம் நல்வாழ்த்துக்கள்
''வாழ்க உம்பணி உயர்க உம் புகழ்''

வாழ்த்துவோர்

திரு. ச. சுரேந்திரன் (வளர்மதி கல்விக் கழகம்) குடும்பம்
திரு. பா. ஸ்ரீதரன் (ஸ்ரீ விநாயகர் சுப்பமாக்கற்) குடும்பம்
திரு. செ. பரணீதரன் (ஆசிரியர்) குடும்பம்
திரு. செ. சுந்தரலிங்கம் (அதிபர்) குடும்பம்






## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

**30.03.2012**

### செல்வன் ஜெபோன்

(JEBON)

வல்வெட்டித்துறை ஆசீர்வாதம் ஒழுங்கையில் வசிக்கும் ஜெரோம்குணராஜ் - ஜெனிபா தம்பதியரின் செல்வப்புதல்வன் ஜெபோன் தனது முதலாவது பிறந்தநாளை புனித செபஸ்தியர் துணையுடன் 30.03.2012 வெள்ளிக்கிழமை தமது அன்னை வேளாங்கன்னி இல்லத்தில் வெகு விமர்சையாக கொண்டாடினார். இவர் பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தியோர் அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, கனடா மாமா, அமெரிக்கா சித்தப்பா, நோர்வே மாமா, மாமி, அத்தான்மார் மற்றும் உற்றார், உறவினர்கள்

அன்னை வேளாங்கன்னி இல்லம்,
ஆசீர்வாதம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை
T.P : 021 3214620, 021 3215150

குணம் கிறீம் கவுஸ்,
K.K.S றோட், சுன்னாகம்
குணம் லொச்
தும்பளை வீதி, பருத்தித்துறை
T.P. .077 8999023, 077 1869015



# BRILLIANT INTERNATIONAL STUDIES

**சங்கத்தானை சாவகச்சேரி**

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு தென்மராட்சி மண்ணில் வெளிநாடுகளில் சென்று கல்வி கற்பதற்கான சிறந்த பாடநெறிகள்

3 Months Course
அனுமதிக்கு முந்துங்கள்

* City & Guild, ESOL மற்றும் SESOL ஆங்கிலப் பாடநெறிகள் (A1,B1,B2)
* UK இன் அங்கீகாரம் பெற்ற பெறுமதிமிக்க இலகு பாடநெறி ஆயுட்காலம் வரை செல்லுபடியாகக் கூடிய சான்றிதழ் மற்றும் UK, Australiya வில் கல்வி பயில எண்ணியுள்ள மாணவர்களிற்கு மிகவும் உபயோகமானது.
* City & Guild நிறுவனத்தால் அங்கீகாரம் பெற்ற ஆசிரியரின் வழிகாட்டலின் கீழ் மிகக் கோலாகலமான தொடக்கம்

STUDENT VISA: சகல நாடுகளிலும் கல்வி பயிலக் கூடிய வகையில் உங்களுக்கு தேவையான அனைத்து சட்ட ஆலோசனைகளை எமது கல்லூரி வழங்குகின்றது.

* UK நாட்டில் கல்வி கற்க விரும்புவோரிற்கு 100 % நம்பத் தகுந்த விதத்தில் College fee மற்றும் Sponcer ஒழுங்குகள் யாவற்றையும் நாமே செலவழித்து வீசாவை பெற்றுத் தருவோம் என்பதை தெரிவித்து நிற்கின்றோம்.



(நிபந்தனைக்கு உட்பட்டது)

தொடர்பு:
077 9265447 (Sisil)


# சனத்தொகை முடிவுகள் மாத இறுதியில்

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணக்கெடுப்புக்களின் இறுதிப் பெறுபேறுகள் இந்த மாத இறுதியில் வெளியிடப்படும் என்று மக்கள் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

முதலில் மாவட்ட ரீதியாகவே இந்த பெறுபேறுகள் வெளியிடப்படும்.

பின்னரே முழுமையான பெறுபேறுகள் வெளியிடப்படும் என்று திணைக்களத்தின் பணிப்பாளர் சுரஞ்சினா வித்தியாரத்ன தெரிவித்துள்ளார்.

பல கட்டங்களாக இடம்பெற்ற இந்த கணக்கெடுப்புக்கள் மார்ச் மாதம் 20 ஆம் திகதியுடன் நிறைவடைந்தன.

# வழக்குத் தாக்கல் செய்யத்தயார்

தேசிய கொள்கைக்கு முரணான வகையில், பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளது தொடர்பில், மனித உரிமை மீறல் தொடர்பான வழக்கைத் தாக்கல் செய்ய ஜே.வி.பி. தயாராகி வருகிறது.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க எமது செய்திச் சேவைக்கு இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் வாரம் இந்த வழக்கைத் தாக்கல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# சடலம் மீட்பு

மரமொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

பூநகரியைச் சேர்ந்த நந்தகுமார் சுரேஸ் (வயது 30) என்பவரே இவ்வாறு சடலமாக சாவகச்சேரி கல்வயல் பகுதியில் மீட்கப்பட்டுள்ளார். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு விசாரணைகளை மேற்கொண்டனர். (ங-9)


**காணி விற்பனை**

புத்தூர் சுன்னாகம் றோட்டில், நிலாவரையில் இருந்து மேற்குப்புறமாக ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் றோட்டிற்கு தெற்குப் புறமாக இரண்டாவதும் கிணற்றுடன் கூடியதுமான தோட்டம் செய்யக் கூடிய சிவப்பு மண் ணுமாகிய 16 பரப்புக் காணி விற்பனைக் குண்டு.
தொடர்பு: 078 9142770

**அப்பள உற்பத்தி நிறுவனம்**

மெசின் மூலம் அப்பள உற்பத்தியில் முழுநேரமாக செயற்படக் கூடியவர்கள் உடன் தொடர்பு கொள்க.
(1) உற்பத்தியாளர் தரம் -1, (2) உற்பத்தியாளர் தரம் -2
T.P : 077 5226462

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி A9 வீதியில், ஆஸ்பத்திரிக்கு அருகில் 50 யாருக்கு உட்பட்ட 6 பரப்பு '' காட்டுக்காணி'' நல்ல தண்ணீர் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. (தரகர் தேவையில்லை)
(14617))(6-9-8) தொடர்பு : 077 0871506

**ஊர்க்கோழி விற்பனைக்கு**

நியாயமான விலையில் ஊர்க்கோழி, சேவல் விற்பனைக்குண்டு.
கலைவாணி மில் ஒழுங்கை, (வைரவர் கோயிலுக்கு அருகில்) கோக்குவில் கிழக்கு.
(16363)(45-8.8) தொ.பே. 077 9773506

**விற்பனைக்கு மூன்று சில்லு வண்டி**

மூன்று சில்லு வண்டியாக பயன்படுத்தக்கூடிய (மாற்றுவலுவுடையோர்) வண்டி ஒன்று உண்டு. பார்வையிட்டு கொள்வனவு செய்யலாம்.
T.P : 021 2255076

**விற்பனைக்கு 500 - 1 விதைநெல்**

பரிசோதிக்கப்பட்ட - கலப்பில்லாத நல்லின 500 - 1 விதைநெல் (கிலோ - 70/= ) விற்பனைக்குண்டு.
(8/305)(45-6.7) தொடர்பு: 077 522 6462

ரூபா 74.25 இல் இருந்து



www.titusstores.com
ரைரர்ஸ் ஸ்ரோர்ஸ்
புறக்கோட்டை 2439422 லிபேட்டி பிளாஸா


**மரண அறிவித்தல்**

**சண்முகம் கணேசலிங்கம் (கணேசு)**

(01.04.2012) உதயன் பத்திரிகையின் 08 ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய மேற்படி அறிவித்தலில் ''அன்னாரின் பூதவுடல் [illegible] [illegible] வைக்கப்பட்டு'' என சேர்த்து வாசிக்கவும்.




**கலைமகள் அழகுநிலா**
**Beauty Academy**



அரிய சந்தர்ப்பம் நழுவவிடாதீர்கள்

மகளிருக்கான நான்கு நாள் பயிற்சிகள் இடம் பெற்று பயிற்சியின் நிறைவில் சிறப்புமிக்க தரமான சான்றிதழ் வழங்கப்படும். கீழ்வரும் பயிற்சிகள் அனைத்தும் செயன்முறையாகும். பயிற்சியினைப் பெறவிரும்பும் மாணவர்கள் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும்.

பயிற்சிகள்

| FACIAL (8 வகை) | | BLEACH |
|---|---|---|
| *Gold Facial | *Eyebrow Threading | *Gold Bleach |
| *Glow Facial | *Pimple Treatment | *Fruit ,, |
| *Vitamin E Facial | *Waxing | *Lacto ,, |
| *AHA Facial | *Hair Colouring | *Oxygen ,, |
| *Wine Facial | *Hair Cutting | *Face Cleaning |
| *Papaya Facial | *Hair Stratening | |
| *Silver Facial | *Hair Perming (2 வகை) | |
| *Fruit Facial | *Manicure Pedeicure | |
| | *Bridal Make up (4 வகை) | |

பயிற்சி நேரம் - மு.ப. 9 மணி - பி.ப. 4 மணி
பயிற்சி ஆரம்பம் - 05.04.2012
தொலைபேசி. இல - 077 3719071
கலைமகள் அழகுநிலா, 390, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்


# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
1962 * 06 * 03

விண்ணில்
2010 * 03 * 25



**தனபாலசிங்கம் விக்னேஸ்வரி**

ஆண்டுகள் இரண்டு ஆயிற்றோ
எம் அன்புத் தெய்வம் விட்டுப் பிரிந்து
மீண்டுமொருமுறை வாரீரோ
நாம் பார்த்து மகிழ
மாண்டு நீர் போனதெங்கே
மனம் கிடந்து துடிக்கிறதே!

அம்மன் கோயிலடி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

குடும்பத்தினர்.

(16364) (7,9,10)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மாணிக்கம் தங்கராசா

(அல்வாய் வட - மேற்கு, திக்கம்)

அல்வாய் மேற்கைப் (திக்கம்) பிறப்பிடமாகவும், வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் தங்கராசா 30.03.2012 வெள்ளிக்கிழமை அன்று அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சண்முகம் - செல்வம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற தங்கராசா ஆசிரியரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவானந்தராசா மற்றும் சிவயோகமலர், நவரத்தினராசா (Managing Director orient Plastic (Pvt.) Ltd., Partner - Sri Vihar Restaurant, Bambalapitiya), செல்வராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் செல்லத்தம்பி, நாகபூசனம், புஸ்பம் ஆகியோரின் அன்பு மாமியும் ஜாமளா, தங்கராசா, சண்முகராசா (U.K), மஞ்சுளா, ஜசோதா, பிறேமா (U.K), சித்திரா (U.K), மங்களா, பவானி (U.S.A), சண்முகபாலன் (U.K), ஸ்ரீபிருந்தா (U.S.A), சுமதி (Canada), மாலதி, சுதாகரன் (Singapore), பாரதி, பிரபாகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.04.2012 புதன்கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக பொறளை கனத்தை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்வாய் வடமேற்கு,
திக்கம்.

தகவல் :
த.நவரத்தினராசா (மகன்)

(இ/807)

## திருமதி தங்கம்மா பசுபதி



மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் அல்லாரை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா பசுபதி கடந்த (30.03.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் ஆறுமுகம் பசுபதியின் அன்பு மனைவியும் செல்லம்மா, கிருஸ்ணசாமி, செல்லையா (மீசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சண்முகநாதன் (ஜேர்மனி), பரமேஸ்வரி (அல்லாரை), வீரசிங்கம் (ஜேர்மனி), கந்தசாமி (நெதர்லாண்ட்), தேவபாலன் (லண்டன்), செல்வராணி (அல்லாரை), சந்திரமூர்த்தி (சாவகச்சேரி), ரேவதி (அல்லாரை), உதயகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் கலாமதி, சிவநேசன், தவநிதி, வளர்மதி, சுமங்கலி, கிருபாகரன் (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), கமலினி (கிளி, முருகானந்தா ஆரம்ப வித்தியாசாலை, முரசுமோட்டை), நகுலேந்திரன் (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), சர்மிளா ஆகியோரின் அன்பு மாமியும் பௌசிகா, பௌவிதன், தீபா, பானுசன், அபிலன், அபிலாஸ், மேனிகா, மேனுசன், ஆரணி, அபிந்தா, விஸ்னு, மிதுசன், தனுசன், கிஸ்ணியா, விரோஜன், கோவர்ணன், துசாயினி, அகிசாத், அனுசாத், சின்மஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.04.2012) செவ்வாய்க்கிழமை அல்லாரை தெற்கில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கச்சாய் எறியால்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்லாரை தெற்கு, கொடிகாமம்.

தகவல்:
சண்முகநாதன் (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பறந்தனர் வென்றனர்

## புத்தாண்டு சைக்கிள் ஓட்ட வீரர்கள்

யாழ்ப்பாணம், ஏப்.2

தமிழ்- சிங்கள புத்தாண்டை முன்னிட்டு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப் பாட்டு அமைச்சும் கிளிநொச்சி மாவட்ட செயலகமும் இணைந்து நடத்திய ஆண்களுக் கான சைக்கிள் ஓட்டப் போட்டி நேற்றுக் காலை 6 மணிக்கு நல்லூர் ஆலயத்தில் விசேட பூசையுடன் ஆரம்பமானது. இந்தப் போட்டியில் நவாலியைச் சேர்ந்த சந்துரு முதலிடம் பெற்றார்.

இந்தப் போட்டியில் கலந்துகொள்ளவென வடமாகாணத்தைச் சேர்ந்த நூறுக்கும் அதிகமான வீரர்கள் காலையில் இருந்தே நல்லூரில் திரண்டனர். மேளதாளத்துடன் நடைபெற்ற பூசை நிகழ்வு களைத் தொடர்ந்து சைக்கிள் ஓட்டப் போட்டி ஆரம்பமானது. சைக்கிள் ஓட்ட நிகழ்வை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆரம்பித்து வைத்தார். போட்டி ஆரம்பமானதும் வீரர்கள் காற்றைக் கிழித்துக் கொண்டு விரைந்தனர். இந்தப் புத்தாண்டு சைக்கிள் ஓட்ட நிகழ்வு நேற்றையதினம் அரச தொலைக் காட்சியில் நேரலையாக ஒளிபரப்புச் செய்யப்பட்டது. நல்லூரில் இருந்து கிளிநொச்சி வரை யான வீதிகளில் திரண்டிருந்த பொதுமக்கள் சைக்கிள் ஓட்ட வீரர்களுக்கு உற்சாகக் குரல் எழுப்பி ஊக்கம் கொடுத்த துடன் வீரர்களுக்கான குளிர்பானங்களையும் இடையிடையே வழங்கினர்.

கிளிநொச்சியில் முடிவடைந்த இந்தப் போட்டியில் வெற்றியீட்டியோர் விவரம்:

முதலிடம் சந்துரு (நவாலி), 2ஆம் இடம் படைச் சிப்பாய், 3ஆம் இடம் இதயன் (சாந்தை, பண்டத் தரிப்பு), 4ஆம் இடம் குயின்ரன் (கொக்குவில்), 5ஆம் இடம் வவுனியா வீரர், 6ஆம் இடம் ரகீம். (ங-23)

## வலி.வடக்கில் பிரகாசித்தது இளம்சுடர்

வலி.வடக்கு. ஏப்.2

வலி.வடக்கு தெல்லிப் பழைப் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்க ளுக்கு இடையே நடை பெற்ற தடகள மற்றும் பெரு விளையாட்டுப் போட்டிக ளில் 56 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தை இள வாலை இளம்சுடர் விளை யாட்டுக் கழகம் பிரதேச செய லக சம்பியனாகத் தெரிவு செய் யப்பட்டது.

கடந்த ஒரு மாதமாக இடம் பெற்ற பெருவிளையாட்டுப் போட்டிகள் மற்றும் நேற்று முன்தினம் இடம்பெற்ற தட களப் போட்டிகள் என்பவற் றின் முடிவுகளை அடிப்படை யாகக் கொண்டே இளஞ் சுடர் விளையாட்டுக்கழகம் பிரதேச செயலகச் சம்பிய னாக அறிவிக்கப்பட்டது.

இரண்டாம் இடத்தை 54 புள்ளிகளைப் பெற்று மல்லா கம் ஆர்.டி.எஸ்.விளையாட் டுக் கழகம் கைப்பற்றியது. மூன்றாம் இடத்தை இள வாலை சென்.லூட்ஸ் விளை யாட்டுக்கழகம் பெற்றுக் கொண்டது.

இந்தப் போட்டிகளில் சிறந்த தட வீரனாக 200 மீற் றர் ஓட்டப் போட்டியில் 25.55 செக்கனில் ஓடி முடித்து 524 புள்ளிகளைப் பெற்ற இள வாலை சென்.லூட்ஸ் விளை யாட்டுக் கழகத்தைச் சேர்ந்த அன்ரன்வேக் தெரிவு செய் யப்பட்டார்.

சிறந்த தட வீராங்கனை யாக 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் 33.24 செக்க னில் ஓடி முடித்து 495 புள்ளி களைப் பெற்ற இளவாலை சென்.லூட்ஸ் விளையாட் டுக் கழகத்தைச் சேர்ந்த தே.கின்சிகா தெரிவு செய்யப் பட்டார்.

சிறந்த கள வீராங்கனை யாக உயரம் பாய்தலில் 9.37 மீற்றர் நீளம் பாய்ந்து 588 புள்ளிகளைப் பெற்ற அள வெட்டி விநாயகர் விளை யாட்டுக் கழகத்தைச் சேர்ந்த அ.பவித்திரா தெரிவு செய்யப் பட்டார்.

இந்தப் போட்டிகளில் சிறந்த தட,கள வீரனாக முப் பாய்ச்சலில் 13.20 மீற்றர் பாய்ந்து 735 புள்ளிகளைப் பெற்ற அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ந.நிசாந் தெரிவு செய் யப்பட்டார். (86)

## கடைசி நிமிட அதிரடி ஆட்டம்; அளவெட்டி மத்தி சம்பியன்

வலி.வடக்கு ஏப்.2

வலி வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழகம் பலத்த போட்டியின் மத்தியில் பிரதேச செயலக சம்பியனாக தெரிவு செய்யப்பட் டது.

மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் அளவெட்டி விநாயகர் விளையாட் டுக் கழகமும் அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண் டன.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் சுற்றை அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகம் 25:19 புள்ளி கள் என்ற அடிப்படையில் தனதாக்கிக் கொண்டது.

எனினும் இரண்டாம் சுற்றில் எழுச்சி பெற்ற அள வெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகம் மிகவும் இலகு வாக 25:14 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றது. மூன்றாம் சுற்று இரு அணிகளுக்கும் முக்கிய மானதாக அமைந்தது. வாழ்வா? சாவா? என்ற நிலையில் இரு அணிகளும் உத் வேகத்துடன் களத்தில் மோதிக் கொண்டன. இதனால் மூன்றாம் சுற்று ஆட்டம் ரசிகர்களை உற்சாகத்தின் உச்சிக்குக் கொண்டு சென்றது.

இரு அணிகளும் மாறி மாறிப் புள்ளிகளைப் பெற்ற போதிலும் இறுதி நிமிடத்தில் அளவெட்டி மத்தி விளை யாட்டுக்கழகம் அதிரடியாக ஆடிப் புள்ளிகளைத் தன்பக்கம் குவித்ததால் அந்த அணி 25:21 புள்ளிகள் என்ற அடிப்படை யில் இறுதிச் சுற்றை வென்றது.

இதனால் ஆட்ட நிறைவில் அளவெட்டி மத்தி விளையாட் டுக் கழகம் 2:1 என்று அடிப்படையில் வெற்றியீட்டி வலி. வடக்கு தெல்லிப்பழை பிரதேச் செயலர் பிரிவு கரப் பந்தாட்டச் சம்பியனாகத் தெரிவானது. (ங-86)

## அதிசயத்துக்கு இரட்டை வெற்றி

யாழ்ப்பாணம், ஏப்.2

பளை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட் டுக்கழகங்களுக்கு இடையி லான ஆண், பெண் இருபாலா ருக்குமான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஆண்கள் பிரிவில் வண்ணாங் கேணி வடக்கு துர்க்கா விளை யாட்டுக்கழகம். பெண்கள் பிரிவில் புலோப்பளை அதி சயம் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

ஆண்களுக்கான இறுதி யாட்டத்தில் வண்ணங் கேணி வடக்கு துர்க்கா விளை யாட்டுக்கழகத்தை எதிர்த்து புலோப்பளை சென்.பீற்றர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் வண்ணங்கேணி வடக்கு துர்க்கா விளையாட் டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி யீட்டியது.

பெண்களுக்கான இறுதி யாட்டத்தில் புலோப்பளை அதிசயம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தெல் லிப்பழை சாலை விளை யாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் புலோப் பளை அதிசயம் வி.க. அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. (ங-23)

## கிளி.யில் 20/20

யாழ்ப்பாணம், ஏப்.2

கிளிநொச்சி மாவட்ட கிரிக் கெட் சங்கம் பாடசாலைகளுக்கு இடையே நடத்தும் ரி-20 கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 13 ஆம் திகதி கிளிநொச்சி மத் திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. மேற்படி போட்டியில் தர்மபுரம் மகா வித்தியாலயம், கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளிநொச்சி மகாவித்தியாலய அணிகள் பங்கு கொள்ளவுள்ளன. (ங-23)

## ஊர்காவற்றுறை கோட்ட மெய்வன்மை முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

நீளம் பாய்தல்

1 ஆம் இடம் எஸ்.ஜென ராஜ் (யா/சென்.அன்ரனிஸ் கல் லூரி)

2 ஆம் இடம் எஸ்.சஞ்ஜி வன் (யா/அனலைதீவு சதா சிவ வித்தியாலயம்)

3 ஆம் இடம் எம்.கிருபக ரன் (யா/கரம்பன் சண்முக நாதா வித்தியாலயம்)

உயரம் பாய்தல்

1 ஆம் இடம் எஸ்.லக்ஸ் சன் (யா/அனலைதீவு சதா சிவ வித்தியாலயம்)

2 ஆம் இடம் எஸ்.ஜென ராஜ (யா/செஸ்.அன்ரனிஸ் கல் லூரி)

3ஆம் இடம் யு.பதிகுமார் (யா/தம்பாட்டி அ.த.க.பாட சாலை)

குண்டு போடுதல்

1 ஆம் இடம் ரி.சிருசாந் (யா/சென்.அன்ரனிஸ் கல் லூரி)

2 ஆம் இடம் கே.நவிதன் (யா/தம்பாட்டி அ.த.க.பாட சாலை)

3 ஆம் இடம் எம்.கிருபா கரன் (யா/கரம்பன் சண்முக நாதா வித்தியாலயம்)

தட்டெறிதல்

1ஆம் இடம் யு.பதிகுமார் (யா/தம்பாட்டி அ.த.க.பாட சாலை)

2 ஆம் இடம் கே.நவிதன் (தம்பாட்டி அ.த.க.பாட சாலை)

3 ஆம் இடம் எஸ்.டினோ ஜன் (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி)

ஈட்டி எறிதல்

1 ஆம் இடம் கே.நிறோ ஜன் (யா/சென்.அன்ரனிஸ் கல்லூரி)

2 ஆம் இடம் கே.மதுசன் (யா/அனலைதீவு சதாசிவ வித்தியாலயம்)

3 ஆம் இடம் என்.துஷி யந்தன் (யா/சென்.அன்ர னிஸ் கல்லூரி)

4x100 அஞ்சல் ஓட் டம்

1 ஆம் இடம் யா/சென். அன்ரனிஸ் கல்லூரி

2 ஆம் இடம் யா/எழுவ தீவு முருகவேல் வித்தியால யம்.

3 ஆம் இடம் யா/அனலை தீவு சதாசிவ வித்தியாலயம்.

4x400 அஞ்சல் ஓட்டம்

1 ஆம் இடம் யா/சென். அன்ரனிஸ் கல்லூரி

2 ஆம் இடம் யா/எழுவ தீவு முருகவேல் வித்தியால யம்.

3 ஆம் இடம் யா/கரம்பன் சண்முகநாதா வித்தியாலயம்

பெண்கள் 15 வயது பிரிவு

100 மீற்றர் ஓட்டம்

1 ஆம் இடம் எஸ்.மீரா இம்சியா (யா/கரம்பன் சிறிய புஸ்ப கன்னியர் மடம்)

2 ஆம் இடம் கே.ஜெனா (யா/நாரந்தனை றோ.க.த.க. பாடசாலை)

3 ஆம் இடம் வி.கஸ்பனா (யா/எழுவைதீவு முருக வேல் வித்தியாலயம்)

200 மீற்றர் ஓட்டம்

1 ஆம் இடம் எஸ்.மீரா இம்சியா (யா/கரம்பன் சிறிய புஸ்ப கன்னியர் மடம்)

2 ஆம் இடம் கே.ஜெனா (யா/நாரந்தனை றோ.க.த.க. பாடசாலை)

3 ஆம் இடம் ஏ.புவிதா (யா/நாரந்தனை றோ.க.த.க. பாடசாலை)

400 மீற்றர் ஓட்டம்

1 ஆம் இடம் உசாந்தினி (யா/சென்.மேரிஸ் றோ.க. த. பெண்கள் பாடசாலை)

2 ஆம் இடம் பி.மேரி றிக் சலா (யா/கரம்பன் சிறிய புஸ்ப கன்னியர் மடம்)

3 ஆம் இடம் பி.கல்சியா (யா/எழுவைதீவு முருக வேல் வித்தியாலயம்)

நீளம் பாய்தல்

1 ஆம் இடம் உசாந்தினி (யா/சென்.மேரிஸ் றோ.க. த. பெண்கள் பாடசாலை)

2 ஆம் இடம் எஸ்.கெளச ல்யா (யா/எழுவைதீவு முருகவேல் வித்தியாலயம்)

3 ஆம் இடம் றிப்சியா (யா/சென்.மேரிஸ் றோ.க.த. பெண்கள் பாடசாலை)

உயரம் பாய்தல்

1 ஆம் இடம் எஸ்.மீரா இம்சியா (யா/கரம்பன் சிறிய் புஸ்ப் கன்னியர் மடம்)

2 ஆம் இடம் கே.விது சிக்லா (யா/எழுவைதீவு முருகவேல் வித்தியாலயம்)

3ஆம் இடம் எம்.சுலக் சனா (யா/எழுவைதீவு முருக வேல் வித்தியாலயம்)

குண்டு போடுதல்

1 ஆம் இடம் என்.கலைச் செல்வி (யா/அனலைதீவு சதாசிவ வித்தியாலயம்)

2ஆம் இடம் எஸ்.ஜெனிபா (யா/கரம்பன் சிறிய புஸ்ப கன்னியர் மடம்)

3 ஆம் இடம் கே.நித்தியா (யா/தம்பாட்டி அ.த.க. பாட சாலை)

தட்டெறிதல்

1 ஆம் இடம் எம்.சுலக் சனா (யா/எழுவைதீவு முருக வேல் வித்தியாலயம்)

2 ஆம் இடம் ஆர்.வித் தியா (யா/அனலைதீவு சதா சிவ வித்தியாலயம்)

3 ஆம் இடம் சி.ஜெனிபா (யா/கரம்பன் சிறிய புஸ்ப கன்னியர் மடம்)

ஈட்டி ஏறிதல்

1 ஆம் இடம் எம்.சுலக் சனா (யா/எழுவைதீவு முருக வேல் வித்தியாலயம்)

2 ஆம் இடம் என்.கலைச் செல்வி (யா/அனலைதீவு சதாசிவ வித்தியாலயம்)

3 ஆம் இடம் யூடி நிவே திகா (யா/சென்.மேரிஸ் றோ.க்.த். பெண்கள் பாட சாலை)

4x100 அஞ்சல் ஓட்டம்

1 ஆம் இடம் யா/நரந் தனை றோ.க.த.க.பாடசாலை

2 ஆம் இடம் யா/எழுவை தீவு முருகவேல் வித்தியா லயம்.

3 ஆம் இடம் யா/சென். மேரிஸ் றோ.க.த.பெண்கள் பாடசாலை

4x400 அஞ்சல் ஓட்டம்


1 ஆம் இடம் யா/கரம்பன் சிறிய புஸ்ப கன்னியர் மடம்

2 ஆம் இடம் யா/சென். மேரிஸ் றோ.க.த.க. பாட சாலை

3 ஆம் இடம் யா/எழுவை தீவு முருகவேல் வித்தியா லயம். (ங-23-325)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஏன் போனோம் தோற்றோம்?

ஜோகனஸ்பேர்க், ஏப். 2

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான '20/20' போட்டியில், மழை வரும் என்று தெரிந்தும், வேகமா விளையாடாததாலேயே இந்திய அணி தோல்வியடைந்தது என்று குற்றச்சாட்டு கிளம்பியுள்ளது.

ஐந்தாவது ஐ.பி.எல்., தொடர் தொடங்க ஐந்து நாள்களே இருந்த நிலையில், குறித்த 20/20 போட்டி திடீரென தென்னாபிரிக்காவில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இதில் பங்கேற்க, இந்திய வீரர்கள் இந்தியாவில் இருந்து 6963 கிலோ மீற்றர் தூரமுள்ள ஜோகனஸ்பேர்க்கை அடைய 8 மணி நேரம் ஆனது.

அதேநேரம், நியூஸிலாந்து தொடரில் பங்கேற்றுவிட்டு, 11796 கிலோ மீற்றர் பயணம் செய்து (15 மணி நேரம்) வந்திருந்தனர் தென்னாபிரிக்க அணியினர். மூன்று மணி நேரம் மட்டும் நடந்த இந்தப் போட்டிக்காக இருநாட்டு கிரிக்கெட் சபைகளும் ஏன், இவ்வளவு 'ரிஸ்க்' எடுத்தன எனப் புரியவில்லை.

இந்தப் போட்டியில், முதலில் விளையாடிய தென்னாபிரிக்க அணி 20 பந்துப் பரிமாற்றங்களில், 4 இலக்கு இழப்புக்கு 219 ஓட்டங்கள் எடுத்தது. இலக்கை துரத்திய இந்திய அணி 7.5 பந்துப் பரிமாற்றங்களில், இலக்கு இழப்பின்றி 71 ஓட்டங்கள் எடுத்த போது, மழையால் போட்டி தடைப்பட, 'டக்வேர்த் லூயிஸ்' விதிப்படி 11 ஓட்டங்கள் பின்தங்கி இருந்ததால் இந்திய அணி தோற்றதாக அறிவிக்கப்பட்டது. அப்போது காம்பீர் 49 (28 பந்து), உத்தப்பா 18 (19 பந்து) ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

இந்திய அணி ஏற்கனவே ஆஸ்திரேலிய தொடரில் 'அடி' வாங்கிய வேகத்துடன், ஆசிய கோப்பை தொடரில் 'கத்துக் குட்டி' வங்கதேசத்திடம் 'கடி' வாங்கி, தென்னாபிரிக்கா சென்று, அங்கும் 'உதை' பட நேரிட்டுள்ளது.

ஜோகனஸ்பேர்க் மைதானத்தில் எந்தப் பெரிய இலக்கையும் எளிதாகத் துரத்திப் பிடிக்கலாம். இந்த நிலையில், 220 ஓட்டங்கள் என்ற இலக்கை துரத்திய இந்திய அணிக்கு காம்பீர் 'ஜெற்' வேகத்தில் தொடக்கம் தந்தார். மறுமுனையில் உத்தப்பா பந்துகளை வீணடித்து, ரசிகர்களை வெறுப்படையச் செய்தார்.

மழை வரும் என்ற நிலையில், 'டக்வேர்த்-லூயிஸ்' விதிப்படி, எவ்வளவு ஓட்டங்கள் தேவை என்பதை அவ்வப்போது இவர்களிடம் எடுத்து சொல்லி இருக்க வேண்டும். ஆனால் அணி நிர்வாகம் எதுவும் செய்யவில்லை.

19 பந்துகளில் 18 ஓட்டங்கள் மட்டும் எடுத்து "ஆறுதலாக' விளையாடிய உத்தப்பா, சற்று வேகம் காட்டி இருந்தால், பற்றாக்குறையாக இருந்த 11 ஓட்டங்களை எட்டி பிடித்து இருக்கலாம். மொத்தத்தில், ஆஸ்திரேலியா, வங்கதேசத்தில் அடைந்த தோல்வியுடன், 7000 கி.மீ., பயணம் செய்து தென்னாபிரிக்கா சென்று, அங்கும் தோற்ற சோகத்தில் தான் இந்திய அணியினர் நாடு திரும்பினர்.

இது குறித்து இந்திய வீரர் ஒருவர் கூறுகையில், "ஆறு மாதமாக போட்டிகளில் பங்கேற்பதால் குடும்பத்துடன் நேரம் செலவிட முடியவில்லை. இந்த நிலையில், எந்தவித முன்னறிவிப்பும் இன்றி, இந்தப் போட்டியை ஏன் ஏற்பாடு செய்தார்கள் என்றே தெரியவில்லை. ஏன் போனோம்? ஏன் தோற்றோம்? என்பது புரியவில்லை." என்று புலம்பினார்.

# வென்றது முனிச்



பிரான்சில் நடைபெறும் சம்பியன்ஷிப் லீக் உதைபந்தாட்டப் போட்டியின் காலிறுதிச் சுற்றின் முதல் லீக் ஆட்டத்தில் 'பெயர்ன் முனிச்' அணி வெற்றி பெற்றது.

இந்தத் தொடரின் காலிறுதியின் முதல் லீக் போட்டியில் பெயர்ன் முனிச் அணி, மார்செயில்லே அணியுடன் மோதியது. போட்டியின் முதல் பாதியில் பெயர்ன் முனிச் அணியின் மரியோ 44வது நிமிடத்தில் ஒருகோல் அடித்தார்.

இரண்டாவது பாதியிலும் சிறப்பாக விளையாடிய பெயர்ன் முனிச் அணியின் ரோபன் 69வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்து மார்செயில்லே அணிக்கு அதிர்ச்சி அளித்தார்.

போட்டியின் முடிவில், பெயர்ன் முனிச் அணி 2-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

இத்தாலியில் உள்ள மிலனில நடைபெற்ற மற்றொரு போட்டியில் ஏ.சி மிலன் மற்றும் நட்சத்திர வீரர் லயனல் மெஸ்சி இடம் பெற்றுள்ள பார்சிலோனா அணியுடன் மோதியது.

இதில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை, எனவே ஆட்டம் 0-0 என்ற கணக்கில் சமனிலையில் முடிந்தது. (ந)

## வில்லை விற்ற வீராங்கனை

இந்திய வில்வித்தை வீராங்கனை நிஷா ராணி தத்தா, உலகத்தரம் வாய்ந்த தனது வில்லை வறுமை காரணமாக விற்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியா மாநிலமான ஜார்க்கண்டில் உள்ள ஜாம்ஷெட்பூர் மாவட்டத்தின், பத்மடா கிராமத்தை சேர்ந்தவர் நிஷா ராணி தத்தா. இவர், டாடா வில்வித்தை அக்கடமியில் பயிற்சி பெற்று பாங்கொக் கிராண்ட் பிரிக்சில் நடைபெற்ற சர்வதேச வில்வித்தை போட்டியில், இந்தியா சார்பில் தங்கம் வென்றுள்ளார். வறுமை காரணமாக, வில்வித்தையில் இருந்து ஒதுங்கி, இயல்பு வாழ்க்கைக்கு திரும்பினார்.

இந்த நிலையில், நிஷா ராணியின் பழைய வீட்டினை பழுது பார்க்க பணம் தேவைப்பட்டதால், வில்வித்தை போட்டிக்கு பயன்படுத்தப்படும், உலகத்தரம் வாய்ந்த ரூ.4 லட்சம் மதிப்புள்ள, வில் மற்றும் அம்புகளை இவர் விற்பனை செய்தது தற்போது தெரிய வந்துள்ளது. தற்போது இவருக்கு உதவ இந்திய ஒலிம்பிக் சங்கம் முன்வந்துள்ளது. (ந)

# 20/20 போட்டி தர வரிசை இலங்கைக்கு மூன்றாமிடம்



ஐ.சி.சியால் வெளியிடப்பட்டுள்ள 20/20 போட்டிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் இலங்கை அணி மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளது.

ஐ.சி.சி. வெளியிட்ட 20/20 போட்டி துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் முதல் மூன்று இடங்களில் கெவின் பீட்டர்சன்(இங்கிலாந்து), மார்டின் குப்ரில் (நியூசிலாந்து), இயன் மோர்கன்(இங்கிலாந்து) ஆகியோர் உள்ளனர். இந்திய அணியின் சுரேஷ் ரெய்னா ஏழாவது இடத்தில் உள்ளார்.

பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் முதல் மூன்று இடங்களில் சுவான்(இங்கிலாந்து), அஜந்த மென்டிஸ்(இலங்கை), சயீட் அஜ்மல்(பாகிஸ்தான்) ஆகியோர் உள்ளனர்.

சகல துறை வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் முதல் மூன்று இடங்களில் வொட்சன்(ஆஸ்திரேலியா), அப்ரிடி(பாகிஸ்தான்), டேவிட் ஹசி(ஆஸ்திரேலியா) ஆகியோர் உள்ளனர்.

இந்தியாவின் யுவராஜ் சிங் 9வது இடத்தை இலங்கையின் மத்யூஸுடன் பகிர்ந்து கொண்டுள்ளார்.

அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் முதல் மூன்று இடங்களில் இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, இலங்கை அணிகள் உள்ளன. இந்திய அணிக்கு 7வது இடம் கிடைத்துள்ளது. (ந)

# அடேயப்பா! 5 கோடி!!

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் ஆஸி. அணித்தலைவர் மைக்கேல் கிளார்க் 6 போட்டிகளில் விளையாடுவதற்கு 5 கோடி இந்திய ரூபா சம்பளம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஐந்தாவது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி ஏப்ரல் 4ம் திகதி முதல் மே 27ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

கடந்த ஆண்டு ஐ.பி.எல். அணிகளில் அதிக பட்சமாக 170 கோடி இந்திய ரூபாவுக்கு புனே வாரியர்ஸ் அணி, சகாரா நிறுவனத்தால் எடுக்கப்பட்டது. ஆனால் புனே அணி எதிர்பார்த்த அளவு வெற்றியை பெறவில்லை. 14 போட்டியில் விளையாடி 4 ஆட்டத்தில் மட்டுமே வெற்றி பெற்று 9வது இடத்தை பிடித்தது.

இதனால் இந்த ஐ.பி.எல். போட்டியில் புனே அணியை நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்காக அந்த அணியின் நிர்வாகம், ஆஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கேல் கிளார்க்கை கடைசி நேரத்தில் ஒப்பந்தம் செய்தது. இதற்கு கிளார்க்கும் சம்மதம் தெரிவித்தார். எனினும் ஏப்ரல் 27 திகதிக்குப் பிறகே போட்டிகளில் பங்கேற்க முடியும் என்று கிளார்க் கூறியுள்ளார். இதற்கு அணி நிர்வாகமும் பச்சைக் கொடி காட்டியுள்ளது. இதனால் 6 போட்டிகளில் கிளார்க் விளையாடவுள்ளார். இதற் [illegible] இந்திய ரூபா வழங்கப்பட வுள்ளது. (ந)



விசேட கட்டணச்சலுகையில் கணினிக்கற்கை நெறிகள்
ஒவ்வொரு வாரமும் புதிய பிரிவுகள் ஆரம்பம்
DMI COMPUTER EDUCATION
☑ Diploma in Microsoft Office
☑ Adv. Dip. in Hardware & Networking
☑ Dip. in Pre-Press Desktop Publishing
☑ Dip.in Web Designing & Development
☑ Dip. in Computerized Accounting
☑ Dip.in Video Production & Multimedia
☑ AutoCAD ☑ Java ☑ Veta Spoken English
75% OFF
☑ சர்வதேச அங்கீகாரம் பெற்ற (ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்
☑ இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்
அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கணினி கல்விக்கு
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V. வீதி, Tel. : 021-226 2470
சாவகச்சேரி No.174, Tel. :021-227 0243
சுன்னாகம் Tel. :021-320 7700

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**A/L 2014**
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
ஆரம்பம்: ஏப்ரல் 7
சனி - காலை 9 மணி
**DMI** Jaffna

**தவறிவிட்டது**
கரியாலை நாகபடுவான் காக்காரர் அமைப்புக்குரிய பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் அடங்கிய பொதி அம்பலப்பெருமாள் சந்திக்கும் ஜெயபுரம் சந்திக்கும் இடையில் (31.03.2012) சனிக்கிழமை மாலை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது முகவரியுடனோ தொடர்பு கொண்டு ஒப்படைத்து உதவவும்.
தொடர்பு: 021 791 2598
K.K.R. பல்பொருள் வாணிபம், குமுழமுனை, 19ஆம் கட்டை.

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
**அனைத்துப் பிரிவுகளுக்குமான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன**

| Batch I: 04.04.2012 | Batch II:07.04.2012 | Batch III :11.04.2012 |
|---|---|---|
| 09.00 - 12.00 | 03.00 - 5.00 | 09.00 - 12.00 |

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Quick Learning Course** 1½ Months
(Spoken English with Grammar)

**Diploma In English** 2½ Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

**எமது கல்லூரியினால் நடாத்தப்படும் சர்வதேசப் பரீட்சைகள்**

**A1 Exam - Sponsor /Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**IELTS (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது)**
We guarantee minimum band 5.0 Upwards 2½ Months

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

| Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207 | Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550 | Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287 |
|---|---|---|

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

# மூன்றாமிடம் பறிபோகுமா?



ஐ.சி.சி. டெஸ்ட் அணிக்கான தரவரிசைப் பட்டியலில் இங்கிலாந்தின் முதலிடத்துக்கும் இந்தியாவின் மூன்றாம் இடத்துக்கும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அநேகமாக இந்த இரண்டு அணிகளும் தரவரிசைப் பட்டியலில் பின்னடைவைச் சந்திப்பதற்கான சாத்தியங்களே அதிகம் உள்ளன.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) சார்பில் வெளியிடப்படும் சிறந்த டெஸ்ட் அணிகளுக்கான தரவரிசை பட்டியலில் இந்திய அணி 111 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது.

முதலிரண்டு இடங்களில் இங்கிலாந்து (118), தென்னாப்பிரிக்கா (116) அணிகள் உள்ளன. சில தசம புள்ளிகள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியா (111) நான்காவது இடத்தில் உள்ளது.

இங்கிலாந்து, ஆஸ்திரேலியா அணிகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரை முழுமையாக இழந்த இந்திய அணியின் மூன்றாவது இடத்துக்கு தற்போது ஆபத்து ஏற்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மூன்று போட்டிகள்(ஏப்ரல் 7ம் திகதி முதல் 27ம் திகதி வரை) கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்க உள்ளன.

இதில் ஆஸ்திரேலிய அணி தொடரை முழுமையாகக் கைப்பற்றும் பட்சத்தில் 113 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும். இதன் மூலம் இந்திய அணி நான்காவது இடத்துக்கு தள்ளப்பட்டு, ஆஸ்திரேலியா மூன்றாவது இடத்துக்கு முன்னேறும்.

ஆஸ்திரேலியா 2-0 என வென்றால் கூட இந்திய அணியின் மூன்றாவது இடத்துக்கு ஆபத்து ஏற்படும். ஆஸ்திரேலியா 2-1 அல்லது 1-0 என்ற அடிப்படையில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றினால் மட்டுமே, இந்திய அணியின் மூன்றாவது இடத்துக்கு சிக்கல் ஏற்படாது.

அதேவேளை, இங்கிலாந்து அணி, இலங்கைக்கு எதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை முழுமையாக இழக்கும் பட்சத்தில் 113 புள்ளிகளுடன் அதன் முதலிடம் பறிபோகும்.

அப்போது சில தசம புள்ளிகள் வித்தியாசத்தில், ஆஸ்திரேலியா இரண்டாவது இடத்துக்கு முன்னேறுவதுடன், இங்கிலாந்து அணி மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டு, தென்னாபிரிக்கா முதலிடத்தைப் பிடிக்கும்.

இங்கிலாந்து அணி முதலிடத்தைத் தக்க வைத்துக் கொள்ள இலங்கையுடனான இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டிகளில் கட்டாயம் வெற்றி பெற வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

**DCM**
யாழ். நகர்
A/L - 2014
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்
ஏப்ரல் 7
சனி காலை
8 மணி

**31ஆம் நாள் நினைவஞ்சலி**



அமரர் வேலுப்பிள்ளை பாலசிங்கம்
(குமுழமுனை)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 19*11*1947 | 03*03*2012 |

மாதமொன்று சென்றாலும்
மறையவில்லை நினைவலைகள்
ஆதவன் போல் இருந்த எங்கள்
அன்பு முகம் சென்றதெங்கே?
சீதமதியதுபோல் சிரித்த முகம்
விழித்திரையில் மறையவில்லை
சீரடியாம் கண்ணகித்தாய்
பாதமலர் சேர்ந்தனையோ!

ஈரமுள்ள எம்உறவே
எந்நாளும் உமைமறவோம்
நேராகச் சொர்க்கத்தில்
நீர் வாழவேண்டுமென்று
நிறைவான மனதோடு
சிவனருளை வேண்டுகின்றோம்.

தகவல்:
இராமலிங்கம் கண்ணகை (சகோதரி)
கொக்குவில் கிழக்கு.

**ஷாம்சன் இங்கிலீஷ் - 3 மாத பயிற்சிநெறி**

எந்தவொரு குழந்தையும் 2 தொடக்கம் 4 வயதுக்குள் தன் தாய் மொழியைப் பேசப் பழகிக்கொள்கிறது. தமிழ்க் குழந்தைகள் தமிழைப் பேசப்பழகுகின்றன. ஆங்கிலக் குழந்தைகள் ஆங்கிலத்தைப் பேசப்பழகுகின்றன. 2 வருடத்தில் ஒரு குழந்தை செய்யும் காரியத்தை ஏன் இன்று வரை உங்களால் செய்ய முடியாமல் இருக்கிறது.

தவறான வழியில் ஆங்கிலத்தைக் கற்றுக்கொண்டதனாலேயே அது உங்களுக்கு கடினமாக இருக்கின்றது. எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சி நெறியில் இலக்கணமோ, எழுத்துப் பயிற்சியையோ நாம் வழங்குவதில்லை மாறாக ஏனையவர்களுடன் உரையாடற் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலமே ஆங்கிலம் பழக்கப் படுத்தப்படுகின்றது. இது குழந்தைகள் தம் தாய்மொழியைப் பழகுவதை அடிப்படையாகக் கொண்டது.

எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சியில் இணைந்த அனைத்து மாணவர்களும் தற்போது ஆங்கிலத்தில் சரளமாக பேசுகின்றனர். நீங்களும் இப்பயிற்சி நெறியில் இணைய விரும்பினால் 07.04.2012 இல் ஆரம்பமாகும் புதிய பிரிவில் இணைந்து கொள்ளுங்கள்.

சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I 08 - 10 am பிரிவு III 01 - 03 pm
பிரிவு II 10 - 12 am பிரிவு IV 03 - 05 pm

03 மாத பயிற்சிநெறிக் கட்டணம்
ரூபா 3000.00

பயிற்சி நெறி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படுவதோடு, மூன்று மாத பயிற்சி நிறைவில் உங்களால் ஆங்கிலத்தில் சரளமாக பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பித் தருவதற்கான உத்தரவாதம். (ஒவ்வொரு பிரிவிலும் 20 பேர் மட்டும்)

**SAAMSON ENGLISH** 279, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம், (ஆஸ்பத்திரி பின்புறம்)
தொ.பே. 077 621 4567

**Deutsch, Dutch, French, Italian**
ஜேர்மன் மற்றும் நெதர்லாந்து தூதரக பரீட்சைக்கான
German-Deutsch, Netherland-Dutch, French, Italian வகுப்புகள்
Audio-Video விளக்கங்களுடன் நடைபெறுகின்றன.
புதிய வகுப்புகளுக்கான பதிவுகள் தற்பொழுது நடைபெறுகின்றன.
**Vivekananda Academy**
221/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 077 484 2464, 021 321 6928, 021 222 0393

**மணல் விற்பனைக்குண்டு**
நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்
4 ரெக்டர் - 24,000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு.
(கல்லு 1 - 38/-)
தொடர்புகளுக்கு
**கண்ணா**
0776766499

ஏசியன் கல்வி நிலையம் - மீசாலை
O/L Day வகுப்புக்கள்
ஆரம்பம்: 02.04.2012 - காலை 8 மணி
நிர்வாகம்

**சதாபொன்ஸ் கல்வி நிலையம்**
அல்வாய்.
O/L DAY CLASS
ஆரம்பம்: 04.04.2012
புதன் காலை 7.00 மணி

**ஆங்கிலம், பிரெஞ்ச், ஜெர்மன்**
**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
04.04.2012 (புதன்கிழமை)

| | | | |
|---|---|---|---|
| ஆங்கிலம் | ~~12,000/-~~ | 3,000/- | காலை 8 – 9 |
| பிரெஞ்ச் | ~~60,000/-~~ | 15,000/- | காலை 9 – 10 |

இச்சலுகை புதன்வரை பதிவுசெய்வோருக்கு மட்டும்
1. பிரெஞ்ச், ஜெர்மன் தூதரக பரீட்சை மாதிரி புத்தகம் உட்பட 5க்கு மேற்பட்ட பெரிய புத்தகங்களும் 40 சிறிய புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படும்.
2. பயிற்சியில் திருப்தி இல்லையேல் பணம் முழுமையாக திருப்பித்தரப்படும்.
3. மூன்று மாத பயிற்சியின் பின் ஒரு வருடம்வரை பயிற்சியை தொடரவிரும்பின் சலுகைக்கட்டணம் 15000/- தவிர வேறு எந்த கட்டணமும் அறவிடப்பட மாட்டாது.

ஆசிரியர், அரச அலுவலர் உயர்கல்வி மாணவர்களுக்கான இலவச ஆங்கில விடுமுறைநாள் பயிற்சிப்பட்டறை : 06.04.2012 வெள்ளிக்கிழமை

6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்புவரை பயிலும் பாடசாலை மாணவர்களுக்கான இலவச ஆங்கில பயிற்சிவகுப்பு 09.04.2012 திங்கள்

**MyWay** Language Research Institute
077 33 63 456

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org